Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

நவ.27-டிச.03,1994 ரூபா 10/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு



புலிகள் கவனிக்கிறார்கள்!

## அமைதி திரும்புமா?

எக்ஸ்ரே ரிப்போர்ட்



-உலகில் சிறந்த நாவல்-

-தாய்-

இன்று முதல் புதிய தொடராக...

எழுதும்

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



ப்லே ரிணிவிசிட்

இலக்கிய நயம்

ஒரு வித்தியாசமான பேனா நண்பி!

# முரசம்

## பாப்பரசரின் வருகை

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
'தை பிறந்தால் வழி பிறக்கும்'
என்பது வழக்கமான முதுமொழி.

எத்தனையோ 'தை' வந்துபோயும்
போரால் படும் வதை மட்டும் போகவில்லை.

பண்டிகைகள் வரும் சமயங்களில்
முந்திக்கொண்டு குண்டுகளும் வெடிப்பதால்
சொற்ப மகிழ்ச்சியும் தொலையும் கதை
தொடர் கதையாகித்தான் வருகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் தையில்
ஒரு மகிழ்ச்சியான செய்தியிருப்பது
முன்கூட்டியே செவிக்கு வந்திருக்கிறது.

பாப்பரசர் அவர்கள் வருகிறார்கள்.
வணக்கத்திற்குரியவரின் வருகைக்காக
தலைநகர் தன்னைத் தயார்படுத்துகிறது.

அவர் சொல்லும் ஆசிச் செய்திகேட்க
ஆயிரமாயிரம் மக்கள்
திரளப் போகிறார்கள்- தலைநகரில்.

அனைத்துக்கும் முன்பாக
பாப்பரசர் இங்கு வரும்போது
அமைதி ஆட்சி செய்வது அவசியம்.

அரசும்-புலிகளும்
போர் நிறுத்தம் செய்தால் மட்டும் போதாது.
நிரந்தர அமைதிக்கான
விருப்பங்களை வெளிப்படுத்தவும்
பாப்பரசரின் வருகையை
பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இருந்தும்
பல நூற்றுக்கணக்கான மக்கள்
பாப்பரசரைத் தரிசிக்க வருவதற்கு
இப்போதிருந்தே ஆர்வம் காட்டுகிறார்கள்.

புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள
மக்கள் பாப்பரசரைக் காணவர
தமது 'பாஸ்' கட்டுப்பாட்டை தளர்த்தி
உதவினால் வரவேற்கக் கூடியதாயிருக்கும்.

கொழும்பிலும் தரிசன நாட்களில்
சந்தேக அலசல்களை
படையினர் குறைத்துக் கொள்ளவேண்டும்.

இன்னும் இரு மாதங்கள்
இடையிலே இருந்தாலும்
இப்போதே சொல்லவேண்டியதை
சொல்லிவைத்துவிடுவது நமது கடமை.

செய்யக்கூடியவர்கள் தம் செவியில் ஏற்று
செய்து முடித்தால்
யாவரும் மனதார வாழ்த்துவர்!

□□

இந்த முரசில் இருந்து
'தாய்' நாவல் தொடராக
வெளிவருகிறது.
தவறவிடாமல் தொடர்ந்து வாசித்தால்
உன்னதமான-உயிர்த்துடிப்பான
நாவல் ஒன்றை தந்ததற்காக
முரசை முகம் மலரப் பாராட்டுவீர்கள்.

சோவியத் யூனியன் இன்று
உடைந்து பல துண்டுகளாகிவிட்டன.
சோசலிசம் தோற்றுவிட்டதா
என்ற வாதப் பிரதிவாதங்கள்
பல்வேறு தளங்களில் நடந்து வருகின்றன.

'தாய்' நாவலை எழுதிய
மாக்சீம் கார்க்கி ஒரு புரட்சிவாதி.
அவரது கொள்கைகள் எவ்வாறு இருப்பினும்
அவரது எழுத்துக்கள்
உயரிய உணர்வுகளுக்கான விதைகள்!

ஒரு சிறந்த கதை
எப்படி இருக்க வேண்டும்?
என்று கேட்டால் - அது
'தாய்' மாதிரி இருக்க வேண்டும்
என்று நிச்சயம் சொல்லலாம்.

எழுத்தின் இறவாத் தன்மைக்கு
1900 ஆண்டுக் காலப்பகுதியில்
எழுதப்பட்டு இன்றுவரை
இளமையாக உள்ள கார்க்கியின்
எழுத்துக்கள் வலிய சாட்சி!

ஒன்றுக்குப் பத்துத் தடவை
மாக்சீம் கார்க்கியின் 'தாய்'
வாசித்த வாசகர்கள்
வையகமெங்கும் இருக்கிறார்கள்.
இனி-அதில்
முரசின் வாசகர்களும் அடக்கம்!

உங்களில் சிலர் 'தாய்'
முன்னர் வாசித்திருக்கலாம்.
அதனால் என்ன முரசின் உபயத்தில்
மீண்டுமொருமுறை வாசியுங்களேன்!

தாயை முழுவதும் வாசித்துவிட்டு
தொடர் முடிய
என் கருத்து சரிதானா என்று
எனக்கு எழுதுங்கள்.

□□

கவிதைப் போட்டியில்
வாரம் தோறும் உங்கள் ஆர்வம்
வளர்ந்து கொண்டிருக்கிறது.
வரவேற்கிறோம்.

எனினும் சில வாசகர்கள்
ஒரு போட்டிக்கே சமயத்தில்
பத்துக்கு மேற்பட்ட
தபாலட்டைகள் அனுப்புகிறீர்கள்.

இனி அப்படி வேண்டாம்.
திருப்தியாகும் வரை எழுதிவிட்டு
அதில் உங்களுக்குப்
பிடித்த ஒரு கவிதையை மட்டும்
ஒரேஒரு தபாலட்டையில்
எமக்கு அனுப்பி வையுங்கள் போதும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை- என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்


## கிறிஸ்துவின் நிழல்!

"அதின் நிழலிலே வாஞ்சையாய் உட்காருகிறேன்" (உன் 2:3) கிறிஸ்துவின் சமூகத்தின் மேல் உண்மையான வாஞ்சையில்லாவிட்டால் அவரது பாத மடியில் வந்து உட்கார முடியாது. கிறிஸ்துவை அதிகமாக நேசிக்கிறவர்களே அவரோடு கூட அதிகமான நேரத்தைச் செலவிடுவார்கள். தேவ பிள்ளையே கிறிஸ்துவின் மேல் உனக்கு வாஞ்சையுண்டா? அப்படியானால் அவரது நிழல் உனக்கு மகிழ்ச்சியே.

கிறிஸ்துவின் நிழல், பாதுகாப்பான நிழல்! வேதம் சொல்கிறது: "அவர்... விடாயத்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார்" (ஏசா 32:2) கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப் போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெரு வெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும் வெய்யிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். (ஏசாயா 25:4)

கிறிஸ்துவின் நிழல், கிருபையான ஆறுதலின் நிழல்! "தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது. அதானல் மனுப்புத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்" (சங் 36:7) உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலிலே தங்குவான் (உன் 91:1)

முத்துக்குமார் தில்லைராஜா-பசறை.



## பொறுமை கொள்ளுங்கள்

உள்ளத்தைத் தூய்மைப்படுத்த இறைவன் அளித்த துன்பங்களிலும் துயரங்களிலும் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பாராட்டப்படுவதும் பொறுமையாகும். இவ்வுலகில் பொறுமையாளர்களுக்கு இறைவனுடைய உதவியுண்டு. மற்றும் மறு உலகிலும் அவர்கள் பெரும் பேறுகளைப் பெறுவார்கள்.

மனிதன் விரும்பியவற்றை அடைய மற்ற எல்லாவற்றையும் விடப் பொறுமையே சிறந்தது. தொடர்ந்துவரும் துன்பக் கணைகளைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலுடையவர்கள் விரைவில் தங்களின் குறிக்கோளை அடைந்து விடுவார்கள். மகிழ்ச்சியின் திறவுகோல் பொறுமையாகும், மன அமைதி என்ற வீட்டின் கதவை இத்திறவுகோலால் மட்டுமே திறக்க முடியும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், "கல்வியைத் தேடிப் படியுங்கள். அதோடு அடக்கத்தையும் பொறுமைக்குணத்தையும் உண்டாக்கிக் கொள்ளுங்கள். உங்களை அண்டிப் பழகுபவர்களிடம் மென்மையாகப் பழகுங்கள்; அன்போடு உரையாடுங்கள். இல்லையேல் உங்கள் பொறுமைக் குணத்தையும் உங்கள் அறியாமை அழித்தவிடும்" என்று. பொறுக்கும் மனப்பான்மை உண்டாகும் போது பகுத்தறிவு பூரணத்துவம் பெற்றுவிடும்.

பொறுமை இதயத்தின் பொக்கிஷம், சமாதானத்தின் தூதுவன், வீரத்தின் சிகரம், அமைதியின் வாய்க்கால், மற்றும் பொறுமையுள்ளவனே பூரணமனிதன். எனவே நாமும் பொறுமை எனும் சீரிய குணத்தை கடைப்பிடித்து வாழப் பழகிக் கொள்வோம்.

இர்பானா நியால்-மக்கொன.

## கவிதைப்போட்டி இல-75

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**தெரிவு**

இன்னுமோர்
அபேட்சகர்
போட்டியின்றித்
தெரிவாகிறார்.

நிஸ்ருல் ஜஹான்
ஹிஜ்ராபுரம்.

### வியக்கப்பட்டவை

**நிஜம்**

நம்
தேசத்தின்
திசையெங்கும்,
தினமும்
அரங்கேறும்
அவல நாடகம்.

ஆரையூர்-இதயம்.

**துயரவெள்ளம்**

ஆறாது-அழுதாலும்
தீராது.
வாராது-மன்னனுயிர்
மீளாது
மாறாது-மனதின் வடு
நீங்காது
தாளாது-துயர வெள்ளம்
மறையாது!

ஐ.என்.எம். நிஹ்ரீர்
புத்தளம்.

**ஆள்பருவம் வழிதரணும்**

கறவையினம் பால் சொரிய
களனி எங்கும் நெல் விளைய
ஆண்டவனும் அருள் தரணும்
வீதி எங்கும் தடை விலகி
அழும் அவலம் தான் அகல
ஆள்பருவம் வழி தரணும்.

சுசிலா கனகசிங்கம்
மட்டக்களப்பு.

**அழுதால் தீருமா?**

மொட்டவிழ்ந்து மலராகி
தொட்டதனால் உயிரேந்தி
வட்டமிட்ட வான் பருந்தால்
பொட்டழிந்தாய் அம்மா!
கட்டற்ற கதறல் உன்
நட்டத்தை தீர்க்குமா?

பேரியாழ் வ.-மானிப்பாய்.

**போரரக்கன்**

பேயிலும் கொடிய போரரக்கன்
பெண்ணினத்தை கண்ணீரால் நிரப்பி நித்தம்
போயொழிய இடமின்றி மென்மேலும்
போடுகிறான் நடை- முழக்கம் உலகழிய

வாழையூர் வைரமுத்து.

## கவிதைப் போட்டி இல-78



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.12.1994.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 78
தினமுரசு வாரமலர்
த.பெ.இல—1772,
கொழும்பு.



கருவறை திறந்திருக்கக்
கல்லறையில் நீ உறங்கின்
சந்ததிகள் காண்பதெங்கே
சரித்திரங்கள் படைப்பதெங்கே?

திருமதி. மாஜிதா அப்துல் கையூம்
கல்முனை.

**யாருக்காக**

யார் செத்து யார் மடிந்தால்
யாருக்கென்ன வான் இடிந்து-
போனால் எவருக்கென்ன
ஊருக்குள்ளே நடக்குது வேதனை.
உகுத்த கண்ணீர் பாரெல்லாம்
இனி யாருக்காக...

செந்தில் குமார்-நாவலப்பிட்டிய.

**தேசியச் சொத்துக்கள்**

இந்தத்
தாலியை இழந்தவளும்
தகப்பனை இழந்தவளும்
எமது
தேசியச் சொத்துக்கு
புதிய
சேர்க்கைகளா?

த. தயாபரன்
ஆரையம்பதி-3.

**கண் திறந்து பாராயோ!**

அராஜகப் போரின்
வரவேற்பில்
சோக கீதமிசைக்கும்
புதுப் பாடகியொருத்தி!
இவள்
கண்ணீர் ராகங்களினால்
கடல் மட்டமும்
உயர்ந்திடாதா...?
கருணைத் தேவதையே
கண்திறந்து பாராயோ
சமாதானப் பூத்தூவி
பூமிதனை உயர்த்திடாயோ!

எம்.சீ.எம். நஸீர்-அக்குறணை.

**தொடக்கம்**

தலைவன் பேச்சோடு
மூச்சைவிட
தலைவி பேசத் தொடங்குகிறாள்.

ஆரையூர் பூபாலன்.

**போய்விட்டது**

கொட்டு மேளம் முழங்க
கட்டிய தாலியை
குண்டு மேளம்
கொண்டு போய் விட்டதோ!

ந. ரதீஸ்வரன்-தம்பிலுவில்-2.

**சுகபோகம் நாம் மறந்தோம்**

புத்தம் தழைத்த மண்ணில்
நித்தம் இழப்பு கண்டோம்!
சொந்தம் பல இருந்தும்
சுகபோகம் நாம் மறந்தோம்!
விடிவை எதிர் பார்த்தோம்
விதவையாய் ஆகிவிட்டோம்!

குழ-கருணை
மட்டக்களப்பு.

**எலும்புகளாய் ஆனார்கள்**

வேண்டாம் என்றோம் நாம்
விடவில்லை பாதகர்கள்
கூண்டோடு கொண்டு சென்றார்
கும்பிட்டும் பயனில்லை
மீண்டும் வருவோமென்
றுரைத்த எங்கள் செல்வங்களோ
தோண்டப்படும் புதைகுழியில்
எலும்புகளாய் ஆனார்கள்.

க. மலர்ராஜன்-திருகோணமலை.

**காரணம் என்ன**

காலால் நடந்து போன மகன்
கட்டையாய் திரும்பிவர
காரணம் என்ன
கண்மணியே!

திருமதி. காளிதர்சினி இராஜேந்திரன்
ஏறாவூர்-4.

75 வயது நிரம்பியும் உனது ஆக்கங்களின் வயது 16 ஆகவே இருக்கிறதே. உன் இளமையின் ரகசியம்-எதையும் நடுநிலைமை கொண்டு சிந்திப்பதும் தர நிர்ணயமும்தான்!

ஏ.எச்.எம். மௌஜூத்
ஹிஜ்ராபுரம்.

●●

தினம் தினம் நினைக்கத் தூண்டும் தினமுரசே!
தேன்சொட்டும் தமிழில்
திரட்டிவரும் செய்திகள்
சுவையோ சுவை.
வாரம் தோறும் வருகைதந்தாலும்
தினம்தோறும் மனதில் நீயே!
வளர்க உன் ஆற்றல்.

வாழ்த்துபவர்கள் ரஜி, ஆரா, - இர்ஷாட், திருமதி ஜுனைதா-குருநாகல்.

●●

பள்ளிச் சிறுமிகள் எங்களின் உள்ளங்களை கொள்ளை கொண்ட பாப்பா முரசுக்கு பாராட்டுக்கள். எங்களை சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும் வண்ணம், ஏற்றமான அம்சங்களைத் தந்து எல்லையில்லா சந்தோஷத்தை அள்ளித் தருகிறாய். என்றும் எத்திக்கும் உன் புகழ் பரவிட எங்களது வாழ்த்துக்கள்.

ஏ.சீ. மஹீஸா-மன்னார்-2.

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் இலக்கிய நயம், லேடீஸ் ஸ்பெசல், சினி விசிட், அதிரடி அய்யாத்துரை போன்றவை பிரமாதம். லேடீஸ் ஸ்பெஷலில் கைவேலைப் பகுதி அனேகமானோர்க்கு உபயோகமானதாகவும் உள்ளது.

செ.வசந்தசிறீ-மாத்தளை.



ரசிகன் தருவதைத் தரட்டும் தவறாது. விரலிடுக்கில் பேனாவை முரசுக்காய் ஏந்தியோர் படைக்கட்டும் படைக்கட்டும் நல் விருந்து படைக்கட்டும்.

சில்மியா, ஹனீமா-அடுலுகம.

●●

அன்பின் முரசே!

தென்னை சுமந்துவந்த செவ்விளநீர் தீராத தாகத்தைத் தீர்ப்பதுண்டு. தீந்தமிழில் கற்பனையும், கட்டுரையும் கவிநயமும் சுமந்து வந்து செந்தமிழின் தாகத்தைத் தீர்க்கும் தினமுரசே உன் வண்ண இதழ்களை வாசித்து வஞ்சி உன்னை வாழ்த்துகிறேன்.

வீ. மகாலச்சுமி
வட்டகொட.

●●

துரதிஷ்டவசமான இந்த நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் உள்ளதை உள்ளபடி கூறும் உயர் நிலையிலும், பொது மக்களுக்கு மறைக்கப்பட்டுவந்த பல உண்மைகளை ஜனநாயகம் என்ற பேரொலியின் முன் கொண்டுவந்து நிறுத்துகிறீர்கள். வாழ்த்துக்கள்!

மு.அப்துல் கரீம்
திருமலை.

●●

எக்ஸ்ரே ரிப்போர்ட் மற்றும் அரசியல் சம்பந்தமான நிகழ்வுகள் வியப்பைத் தருகின்றன. ஏன் தெரியுமா? தெரியாமல் இருக்கும் சில தகவல்களைத் தெரியப்படுத்தும் விதம் வியப்பையூட்டுகின்றன. மென்மேலும் இன்னும் பல புதிய ஆக்கங்களோடு மிளிர வாழ்த்துகிறேன்.

பி. கருணா-கொழும்பு-6.

நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் சூப்பரோ சூ....ப்பர். குறிப்பாக தகவல் பெட்டி, ரசிகன் தரும் இலக்கிய நயம், கொலைவிழும் நேரம் போன்றன என்னைக் கவர்ந்தவை.

மு. அருளானந்தன்-பசறை.

●●

## பார்த்த ஞாபகம் இல்லையோ?



இந்த சுட்டிப் பெண்ணை யார் என்று தெரிகிறதா? தெரியாவிட்டால் 13ம் பக்கம் செல்லுங்கள்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# புலிகளின் மூத்த தளபதி பலி!

## "போர் நிறு த்த மீறல்" என்கிறார்கள் புலிகள்!

(அரசியல் நிருபர்)

**ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா மீது புலிகள் அமைப்பினர் தமது கண்டனங்களைத் தொடுக்க ஆரம்பித்துள்ளனர்.**

**பேச்சுக்கள் தொடரும் என்று அரச தரப்பு கூறியுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினரின் கண்டனங்கள் வெளியாகியுள்ளன.**

### அதிகாரபூர்வ அறிவிப்பில்லை

ஒருவார கால போர் நிறுத்தம் ஒன்றை புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே.பிரபாகரனைத் தனது படையணிகளுக்கு அறிவித்திருப்பதாக பாதுகாப்புப் படைத் தரப்பை ஆதாரம் காட்டி கடந்தவாரம் செய்திகள் வெளிவந்திருந்தன.

ஒட்டுக்கேட்கப்பட்ட தகவல் ஒன்றை வைத்தே அவ்வாறு தெரிவித்ததாக பாதுகாப்பு படை வட்டாரங்கள் கூறியிருந்தன.

எனினும் புலிகளின் தரப்பிலிருந்து அரசாங்கத்திற்கோ, பாதுகாப்பு படைத்தரப்புக்கோ புலிகள் உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதனையும் கடந்த ஒருவார காலத்தில் அறிவிக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் 15.11.94 அன்று பத்திரிகையாளர் மாநாட்டில், ஒருவாரகால போர் நிறுத்தம் அனுஷ்டிக்கப்படுமாறு பிரபாகரன் உத்தரவிட்டிருப்பது உண்மைதான் என்று புலிகளது அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார்.

அதனை அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்றும் திரு.அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார்.

இச் செய்தி கடந்தவாரம் முரசில் வெளியாகியிருந்தது.

### பலத்த குற்றச்சாட்டு

யாழ்ப்பாணத்தில் 'புலிகளின் குரல்' வானொலி ஒருவாரகால போர் நிறுத்தத்தை அரசும் படைகளும் மீறிவிட்டதாக கடுமையான குற்றச்சாட்டுக்களை தெரிவித்து வருகிறது.

புலிகள் தமக்கு அதிகார பூர்வமாக போர் நிறுத்தம் பற்றித் தெரிவிக்கவில்லை என்பதால் தாம் அது குறித்து முடிவெடுக்கவில்லை என்று அரசாங்கம் தெரிவித்திருந்தது.

அதன் பின்னரும் புலிகள் தமது போர் நிறுத்தம் பற்றியோ, அதன் நோக்கங்கள் குறித்தோ அரசுக்கு தெரிவிக்க முன்வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### முக்கிய தளபதி பலி

இதே வேளையில் 17.11.94 அதிகாலை வெலிஓயாப் பகுதியில் படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் ஒன்றை நடத்தியதாக புலிகளின் குரல் வானொலி 18.11.94 மாலை செய்தியில் தெரிவித்தது.

படையினரின் தாக்குதலில் தமது முக்கிய தளபதியான மல்லி என்றழைக்கப்படும் லெப்டினன்ட் கேர்ணல் சின்னத்தம்பி பத்மநாதனின் தலையை படையினர் துண்டித்து சென்றுவிட்டதாகவும், அருளப்பன் என்னும் மற்றொரு உறுப்பினரும் கொல்லப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்தனர்.

### மூத்த தளபதி

கொல்லப்பட்டு- தலை துண்டிக்கப்பட்ட மல்லி பற்றி 'புலிகளின் குரல்' வெளியிட்ட குறிப்புகள் பின்வருமாறு;

'மல்லி புலிகளின் மூத்த தளபதியாவார்.

'1989ல் முற்றியவளையில் இந்திய இராணுவ முகாம் மீதான தாக்குதல், 1989ல் ஈ.என்.டி.எல்.எஃப் தேசத்துரோகிகள் மீதான தாக்குதல், கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதல், ஆனையிறவு முகாம், மாங்குளம் முகாம், பூநகரி முகாம் தாக்குதல்களில் மல்லி முக்கிய பங்கேற்றவர்.

1990-94 வரை வன்னி, முல்லைத்தீவு, இயக்கச்சி பகுதிகளில் இராணுவத்தினர் முன்னேற முயன்றபோது ஏற்பட்ட நேரடி மோதல்களில் மல்லி பங்குகொண்டிருந்தார்.

### மிக மோசமான சம்பவம்

17.11.94ல் தமது முக்கிய தளபதியை இழந்த புலிகள், அதனை ஒரு மிக மோசமான சம்பவம் என்று தெரிவித்து யாழ்ப்பாணத்தில் அறிக்கை விடுத்துள்ளனர்.

புலிகள் விடுத்த அறிக்கையின் விபரம் பின்வருமாறு;

**"ஒருவார கால தாக்குதல் இடை நிறுத்தத்தை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அறிவித்திருந்தார்.**

**தாக்குதல் இடை நிறுத்தத்தின் பின்னர் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட தாக்குதல் விபரம்-**

1. **15.11.94 மட்டக்களப்பில் சுற்றி வளைத்து தாக்குதல்- 2 புலிகள் பலியாகினர்.**
2. **16.11.94 மணலாறு நெடுங்கேணியில் படை சூடு.**
3. **16.11.94 பூநகரி கடலில் கடற்படை தாக்குதல்.**
4. **வடமராட்சியில் கடற்படை தாக்குதல். ஒரு மீனவர் காணாமல் போயுள்ளார்.**
5. **16.11.94 மன்னார் அரிப்பு கடலில் கடற்படை தாக்குதல்.**
6. **17.11.94 கிளாலி பஸ் பயணிகள்மீது தாக்குதல். 4 பேர் காயம்.**

**இவை எல்லாவற்றிலும் மோசமான சம்பவம் மணலாறில் (வெலிஓயா) நடைபெற்றுள்ளது.**

**படை பதுங்கியிருந்து தாக்கியதில் லெப் கேணல் மல்லி, வீரவேங்கை அருளப்பன் ஆகியோர் பலியாகியுள்ளனர்.**

### அரசு தவறிவிட்டது

**இவ்வாறான தாக்குதல்கள் மூலம் புலிகளின் தாக்குதல் இடை நிறுத்தத்தை சிறிலங்கா படையினர் உதாசீனம் செய்துள்ளனர். முப்படையினர் தினமும் தாக்குதல்களை நடத்துகின்றனர்.**

**தற்காலிக போர் நிறுத்தத்தை வரவேற்று நல்லெண்ண நடவடிக்கையை மேற்கொள்ள சிறிலங்கா அரசாங்கம் தவறிவிட்டது."**

இவ்வாறு 'புலிகளின் குரல்' வானொலியில் 18.11.94 அன்று வெளியான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# புதிய ஜனாதிபதிமீது புலிகள் குற்றச்சாட்டு!

## பேச்சில் மட்டுமே சமாதானம்- செயலில் இல்லையாம்

(நமது நிருபர்)

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் பதவிக்கு வந்த பொதுஜன முன்னணி அரச மீது புலிகள் நல்லெண்ணம் கொண்டிருப்பதாக விமர்சகர்கள் சிலர் தெரிவித்து வந்தனர்.

திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா சமீபத்திய ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெற்றதை அடுத்து அரச- புலிகள் நல்லுறவு வளரும் என்று அந்த விமர்சகர்கள் கணிப்புக் கூறிவந்தனர்.

புதிய ஜனாதிபதிக்கு சம்பிரதாயபூர்வமாகவேனும் புலிகள் அமைப்பினர் வாழ்த்துத் தெரிவிக்கவில்லை வரவேற்பும் கூறவில்லை.

இதேவேளை 19.11.94 அன்று 'புலிகளின் குரல்' வானொலி ஜனாதிபதி சந்திரிக்காவின் நல்லெண்ணம் குறித்து சந்தேகம் எழுப்பியுள்ளது.

புலிகளின் குரல் வானொலி தெரிவித்த செய்தி பின்வருமாறு:

**சிறிலங்காவின் புதிய பிரதமரான சந்திரிக்கா குமாரதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்றதையடுத்து தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தாக்குதல் இடை நிறுத்தத்தை அறிவித்தார்.**

**ஆனால் சிறிலங்கா அரசு அதனைக் கருத்தில் எடுக்காது செயற்பட்டு வந்தது.**

**முன்னர் இராணுவ ரீதியான தாக்குதல்களை படையினர் நடத்தியபோது, பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவிடம் இருப்பதால் தன்னால் அதனைக் கட்டுப்படுத்த முடியாதிருப்பதாக சந்திரிக்கா குமாரதுங்கா தெரிவித்திருந்தார்.**

**தற்போது பாதுகாப்பு அமைச்சராகவும், ஜனாதிபதியாகவும் அவரே இருக்கின்ற போதும் இராணுவத் தாக்குதல்கள் நடக்கின்றன.**

**இது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா இதுவரை கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை.**

**திருமதி சந்திரிக்கா குமாரதுங்கா அரசினால், தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட நல்லெண்ண நடவடிக்கைகள் உரிய முறையில் சீர்தூக்கிப் பார்க்கப்படவில்லை.**

**வார்த்தையளவில் சமாதானம் என்று உச்சரித்துக்கொண்டிருக்கும் சிறிலங்கா அரசாங்கம் அதற்கு செயல் வடிவம் கொடுக்க தயங்குகின்றது.**

**தமிழ் மக்கள்மீது பாய்ச்சப்பட்ட நம்பிக்கை ஒளி மெல்ல மெல்ல மங்கத் தொடங்கியுள்ளது.**

**கடந்த 14ம் திகதி முதல் சிறிலங்கா விமானப்படையினர் பலாலி தளத்துக்கு அதிக தடவை வந்து சென்றுள்ளனர்.**

இவ்வாறு புலிகள் தமது வானொலியில் தெரிவித்தனர்.

ஜனாதிபதி சந்திரிக்கா மீதான அதிருப்திகளை புலிகள் பகிரங்கமாக வெளியிட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

"ஜனாதிபதி தேர்தலில் சந்திரிக்கா தமிழ் பேசும் மக்களின் அமோக ஆதரவை பெற்றிருப்பதால் புலிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். அதனால்தான் ஜனாதிபதி தேர்தலையடுத்து திருமதி சந்திரிக்கா குமாரதுங்கா மீதான பகிரங்கக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க ஆரம்பித்துள்ளனர் என்று கொழும்பில் உள்ள தமிழ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதே வேளையில் கிளாலிப் பயணிகள் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்துமீது படையினர் நடத்திய தாக்குதல் போன்றவை மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக யாழில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# காமினி கொலை விசாரணை!

## இந்தியா உதவுவது சந்தேகம்?

தினது கணவரான காமினி திசநாயக்காவின் படுகொலையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் விடயத்தில் இந்திய அதிகாரிகள் இருவருடைய உதவியினைப் பெற்றுத் தருமாறு திருமதி சிறிமா திசநாயக்கா அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தியா, அந்த அதிகாரிகளை அனுப்பி இக்கொலை விசாரணைக்கு உதவ விரும்பவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்னையில் இடம்பெற்ற ராஜீவ் காந்தி கொலை தொடர்பான விசாரணைகளில், வெடி மருந்துத் துறையில் நிபுணரான டாக்டர் சந்திரசேகர் பல ஆய்வுகளை மேற்கொண்டவர் என்பதனால் இவருடைய உதவியையும் பெற்றுத் தருமாறு அரசாங்கத்தை திருமதி திசநாயக்கா கேட்டிருந்தார். இதுபற்றி சென்னையிலிருந்து வெளியாகும் ஆங்கில தினசரி 'இந்து' வெளியிட்ட செய்தியின்படி, டாக்டர் சந்திரசேகர், இந்திய அரசாங்கத்தின் அனுமதியினை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகத் தெரிகிறது.

கிராண்ட்பாஸ் வெடி விபத்துக்குக் காரணமாகவிருந்தவரெனச் சந்தேகிக்கப்படும் பெண்ணிடம் ஒரு கிலோ எடையுள்ள பிளாஸ்ரிக் வெடி பொருட்கள் இருந்திருக்கலாம் என்றும்- பரந்து பறந்து தாக்கக்கூடிய பொருட்களும் அந்த வெடி பொருளுடன் இணைக்கப்பட்டிருக்கலாம் என்றும் டாக்டர் சந்திரசேகர் சென்னையில் தெரிவித்துள்ளார்.

கிடைத்துள்ள தகவல்களின்படி பார்க்கும் போது, கிராண்ட்பாஸ் விபத்தில் வெடிக்க வைக்கப்பட்ட குண்டு, சுமார் 20 மீட்டர் விட்டமுள்ள பிரதேசத்திலுள்ளவர்களைத் தாக்கும் வல்லமை கொண்டதாக இருந்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

திருமதி சிறிமா திசநாயக்கா, தான் அரசாங்கத்துக்கு விடுத்த கோரிக்கைக்கு தக்க பதில் கிடைக்கவில்லை என்று கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்.

# போர் நிறுத்தம் பற்றி அமைச்சர் கடிதம்

## பிரபா நிபந்தனையோடு பதில்!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'புலிகளின் குரல்' வானொலி 4வது ஆண்டு பூர்த்தி விழாவில் (20.11.94) புலிகளது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவரது உரையின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

"சிறீலங்கா அரசோடு தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் நடத்திய முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் முற்றான பொருளாதார தடைநீக்கம், போக்குவரத்து பாதை திறப்பு, யுத்த நிறுத்தம் என்பவற்றை வலியுறுத்தினோம்.

தற்போது ஜனாதிபதியாக திருமதி சந்திரிக்கா குமாரதுங்க இருக்கிறார். சிங்கள மக்களின் பெரும்பான்மையோரிடமிருந்து தமிழர் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் ஆணையையும் பெற்றுள்ளார்.

எங்களுக்கு (புலிகளுக்கு) கிடைத்துள்ள தகவலின்படி சிறீலங்கா இராணுவத் தலைமை பிரச்சனைகளை தீர்த்துவைக்க முட்டுக்கட்டை போடுகிறது.

சிறீலங்கா பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தயிடம் இருந்து போர் நிறுத்தம் குறித்து தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் வந்திருக்கிறது.

தலைவர் அந்த கடிதத்திற்கு பதில் எழுதியுள்ளார். கடந்த ஒரு வாரகாலத்தில் நடைபெற்ற போர் நிறுத்த மீறல்கள் பற்றி தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்தம் செய்வது முக்கியமானதொன்று. அதேசமயம் சிறீலங்கா முப்படைகளும் அதனை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும்.

**புலிகளது மூத்த தளபதி மல்லியின் தலை துண்டிக்கப்பட்டது தொடர்பாக விசாரணை செய்து அரசாங்கம் அதன் முடிவுகளை அறிவிக்க வேண்டும்.**

**அதன்பின்னரே நாம் எமது முடிவுகளை அறிவிப்போம் என்று தலைவர் பிரபாகரன் திரு. அநுருத்த ரத்தவத்தவுக்கு எழுதியுள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்"** என்று திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

### "இறுதி வெற்றி கடற்போர் மூலம்!"

புலிகளின் குரல் வானொலி 4 ஆண்டு விழாவில் பேசிய அன்ரன் பாலசிங்கம் சிறீலங்கா-தமிழ் ஈழம் என்ற பதங்களையே உபயோகித்தார்.

சில கொழும்பு பத்திரிகைகள் சந்திரிக்கா அரசாங்கம் என்று மட்டுமே அவர் குறிப்பிட்டது போல் செய்தி வெளியிட்டுள்ளன.

திரு. அன்ரன் பாலசிங்கத்தின் பேச்சு முரசிடம் பதிவு நாடாவில் இருக்கிறது.

இதேவேளை 20.11.94 அன்று யாழில் வெளிவந்த விடுதலைப் புலிகள் ஏடு விடுதலைப் போரின் வெற்றி பற்றிய நம்பிக்கையையும் வெளியிட்டிருக்கிறது.

கடற்போர் மூலம் விடுதலைப்போரின் இறுதி வெற்றி உறுதி செய்யப்படும் என்று அந்த ஏடு தெரிவித்துள்ளது.

# வடக்கே மாவீரர் தின கொண்டாட்டம்!

## தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

புலிகள் அமைப்பினரின் மாவீரர் தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்குடா நாட்டில் நடைபெற்று வருகின்றன.

மாவீரர் தினத்தை முன்னிட்டும், பிரபாகரனது பிறந்த நாளான நவம்பர் 26ம் திகதியினை ஒட்டியும் புலிகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்பதாலும் படையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

தலைநகரான கொழும்பிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

கொழும்பில் தமிழர்கள் தங்கியுள்ள விடுதிகளிலும் சோதனைகள் இடம்பெற்றுள்ளன.

வீதித்தடை சோதனைகளும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பிருந்ததுபோல் மீண்டும் தீவிரமாகியுள்ளன.

# "ஆறுமுகம் தொண்டமானின் நிறுவனத்திற்கு ஏயார் லங்கா கடன் வழங்க மறுப்பு"

தமிழ்நாட்டில் சென்னை மற்றும் திருச்சியிலுள்ள எயார் லங்கா விமானப் பயணச் சீட்டுகளின் விற்பனை உரிமை 'ட்ரான்ஸ்லங்கா' என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கடந்த பல வருடங்களாக விமானப் பயணச் சீட்டுக்களை விற்பனை செய்த வகையில் 4 1/2 கோடி ரூபாய் வரை ட்ரான்ஸ்லங்கா நிறுவனத்தினால் எயார் லங்காவுக்குச் செலுத்தப்படவில்லை.

ட்ரான்ஸ் லங்கா நிறுவனம், அமைச்சர் எஸ்.தொண்டமான் அவர்களின் பேரனும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ஆறுமுகம் ஆறுமுகம் தொண்டமானுக்குச் சொந்தமானது. இந்தப் பெருந் தொகைப் பணம் செலுத்தப்படாததைப் பற்றிய தகவல்கள் அண்மையில் வெளியானபோது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டது. இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தாதவரை இந்நிறுவனத்துக்கு விமான பயணச் சீட்டு தொடர்பாக எத்தகைய கடனையும் வழங்கலாகாது என எயார் லங்கா நிறுவனத்தின் தலைவர் ஜெனரல் சேபால ஆட்டிகல உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

சென்னையிலும் திருச்சியிலும் தற்போது விற்பனை செய்யப்படும் விமானப் பயணச் சீட்டுக்களின் மூலம் பெறப்படும் பணத்தை, அன்றாடம் 'பன்னாட்டு விமானப் பயணச் சபை' (IATA) பொறுப்பேற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நகரங்களில் பயணச் சீட்டுக்களை விற்பனை செய்யும் பொறுப்பினை மீண்டும் ட்ரான்ஸ்லங்காவிடம் ஒப்படைப்பது பற்றி, முழுக் கடனும் அடைக்கப்பட்ட பின்னரே, தீர்மானம் எடுக்கப்படும் என்று தகவல் அறிந்த வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இத் தகவல்களை 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ் வெளியிட்டுள்ளது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அயலகச் செய்திகள்

(தருவது- எழுமலை-இந்திய நிருபர்)



உட்கட்சித் தேர்தலில் வாக்களிக்கக் கூடியிருக்கும் அ.தி.மு.க.பெண்கள்

## உள்ளே நடந்த தேர்தல்

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே இதுவரை ஒழுங்காக உட்கட்சித் தேர்தல்களை நடத்தி கட்சியின் சகல மட்ட தலைவர்களையும் தெரிவு செய்து வந்தது.

இப்போது அ.தி.மு.க.வும் உட்கட்சித் தேர்தல் நடத்தி கட்சி நிர்வாகிகளை தெரிவு செய்வதில் ஈடுபட்டிருக்கிறது.

கட்சிக்குள் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்கும் தேர்தல் என்றாலும் கள்ள வாக்குகள் போடப்படலாம் என்ற காரணத்தால் கடுமையான கட்டுப்பாட்டு விதிகளோடுதான் தேர்தல் நடத்தப்பட்டது.

இதே வேளை நிர்வாகப் பதவிகளுக்கு போட்டியிடும் உறுப்பினர்கள் வாக்களிக்கும் உறுப்பினர்களுக்கு சாப்பாட்டு பொட்டலங்களை விநியோகித்தனர். போக்குவரத்து ஒழுங்குகளும் செய்து கொடுத்தனர். எல்லாம் பழக்க தோசம்.

## இது அரசியல் வாரிசுகள் சீசன்!

# இந்திய பிரதமரின் இரு மகன்கள் போட்டி



ரங்கராவ் ராஜேஸ்வரராவ்

இது வாரிசுகள் அரசியலில் குதிக்கும் காலம்.

இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்மராவின் வாரிசுகளும் அரசியலில் இருக்கிறார்கள்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆந்திர மாநில சட்டசபைத் தேர்தல் நடத்தப்பட வுள்ளது.

அத் தேர்தலில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் இரு புத்திரர்கள் போட்டி யிடுகிறார்கள்.

காங்கிரஸ் பட்டியலில் போட்டியிடும் இரு புத்திரர்களில் ஒருவர் பெயர் ரங்கராவ். மற்றவர் ராஜேஸ்வரராவ்.

சென்ற சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியே ஆந்திராவில் வெற்றி பெற்றிருந்தது.

இம்முறை என்.டி. ராமராவின் தெலுங்கு தேசம் கட்சி முன்னர் இழந்த ஆட்சியைப் பிடிக்க காங்கிரசோடு கடுமையாகப் போராடுகிறது.

என்.டி.ராமராவின் புதிய மனைவி சிவபார்வதி குறித்து தெலுங்கு தேச கட்சிக்குள் அதிருப்தி காணப்படுகிறது.

சிவபார்வதி சொல்வது போலவே ராமராவ் செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

அதனையும் காங்கிரஸ் கட்சி தனது பிரசாரத்தில் பயன்படுத்துகிறது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 1 மற்றும் 5ம் திகதிகளில் ஆந்திராவில் 140 சட்ட சபைத் தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெற வுள்ளது.

## திருப்பதி லட்டு விலை உயர்ந்தது

இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி கோவிலில் இந்துக்கள் கூட்டம் அலைமோதுவது தெரிந்த செய்தி.

இதனால் திருப்பதி கோவிலின் ஆண்டு வருமானம் இந்திய ரூபாய் மதிப்பின்படி 145 கோடியாகும்.

பக்தர்களின் காணிக்கை மூலமும், லட்டு விற்பனை மூலமும் அந்த நிதி சேருகிறது.

திருப்பதி தேவஸ்தான லட்டுக்கு படு கிராக்கி.

லட்டு ஒன்றின் விலை இதுவரை ரூபா 4 ஆக இருந்தது.

தற்போது அதன் விலையை ரூபா 10ஆக உயர்த்திவிட்டார்கள். தயாரிப்பு செலவு அதிகரித்தமையே விலை உயர்வுக்கு காரணம் என்று கோவில் நிர்வாகம் கூறியிருக்கிறது.

## சினிமா கட்டணம் உயர்வு

தமிழ்நாட்டில் சினிமா திரையரங்க உரிமையாளர்களது வேண்டுகோளையடுத்து அனுமதிச்சீட்டு விலைகளை உயர்த்த முதல்வர் ஜெயலலிதா சம்மதித்துள்ளார்.

ஆகக்கூடிய கட்டணமாக ரூபா 25 (இங்கு அதன் மதிப்பு கிட்டத்தட்ட 50 ரூபாய்) அறவிடப்படலாம் என்று தமிழக அரசு கூறியுள்ளது. முன்னர் 12 ரூபாவாக இருந்த ரிக்கற் விலை இப்போது 25 ரூபா.

## தமிழை மறுக்கும் தமிழ்க் கனவான்கள்!

தமிழ் பேசுவோர் மட்டுமே உள்ள கிழக்கிலங்கைப் புனர்வாழ்வுக் கழகத்தின் (ERO) வருடாந்தக் கூட்டங்கள் தமிழிலேயே நடத்தப்படவேண்டுமென்று அக்கழகத்தில் அங்கமாயுள்ள மட்டு காந்தி சேவா சங்கம் கொண்டு வந்த வேண்டுகோள் (ERO)வின் வருடாந்தக் கூட்டத்தில் அக்கழகத்தின் தமிழ்க் கனவான்களால் நிராகரிக்கப்பட்டது. தமிழ்ப் பகுதிகளில் நடக்கும் கூட்டத்தில் தமிழை ஏற்றுக்கொள்ள தமிழர்கள் மறுப்பது கேவலம்.

## பதிவில்லாத வைத்தியர்களால் படும்தொல்லை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில பதிவில்லாத வைத்தியர்களால் தங்களுக்கு பெருந் தொல்லை ஏற்பட்டுவருவதாக அரச வைத்திய வட்டாரங்கள் நொந்து கொள்கின்றன. இவர்கள் நோயாளிகளுக்கு பிழையான வைத்திய முறைகளைக் கையாண்டு நோய் அதிகரித்தபின் அரச ஆஸ்பத்திரிக்குப் போகுமாறு சொல்கிறார்களாம்.

(ஏறாவூர் நிருபர்)

## மட்டக்களப்பில் மலிந்துள்ள இலஞ்சமும் ஊழலும்!

## "இலஞ்ச ஆணையாளர் பிரிவு இங்கும் வேண்டும்"

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல நிருவாகப் பிரிவுகள் பலவற்றில் இலஞ்சம் பெறுவதும், ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதும் சர்வ சாதாரணமாகிவிட்டது.

பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதிகளில் அடிக்கடி நிவாரணக் கொடுப்பனவுகள் இடம் பெறுவது வழக்கம்.அதே வேளை இலஞ்சம் பெறுவதும் சில கிராம சேவகர்களின் வழக்கமாகிவிட்டது.

தமது கணவர் அல்லது உளவினர் கொல்லப்பட்டமைக்காக அரசினால் வழங்கப்படும் இழப்பீட்டைப் பெறும் ஒருவரிடம் கிராம சேவையாளர் ஒருவர் ரூபா 10-15 ஆயிரம் வரை பெறுவதாகவும், கொடுக்காது விட்டால் அந்த இழப்பீட்டைப் பெற மேல் நடவடிக்கைக்காக ஆவன செய்யப்படமாட்டாது என கூறியதாகவும் அறிய வருகிறது.

இதேபோல் நற்சான்றிதழ், வதிவிட அத்தாட்சிப் பத்திரம், உணவு முத்திரை, பொதுசன உதவி, அடையாள அட்டை, நிவாரணங்கள் போன்றவற்றைப் பெறுவதற்காக கிராம சேவையாளருக்கு ரூபா 100-500வரை கொடுக்க வேண்டியுள்ளதாகவும், மீளக் குடியமர்வு, தொழில் முயற்சிக் கொடுப்பனவுகள் போன்றவற்றிற்காக ரூபா 500-2000வரை கொடுக்க வேண்டியிருப்பதாகவும் அப்பாவிப் பொதுமக்களிடமிருந்து அறியமுடிகிறது.

இத்தகைய கைலாகுகளை வழங்காவிட்டால் அவர்கள் வேறொரு அலுவல்களையும் முடித்துக்கொடுக்காமல் வஞ்சம் தீர்ப்பார்கள் என பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள்.

இது விடயமாக மட்டக்களப்பிலும் உடனடியாக இலஞ்ச ஆணையாளர் பிரிவும், ஊழல் குற்றப் புலனாய்வுப் பிரிவொன்றும் ஏற்படுத்தப்படவேண்டும். அதன் மூலமே இவ்வாறான நடவடிக்கைகளை ஓரளவு நிறுத்த முடியும் என்று பாதிக்கப்பட்டோர் கூறுகின்றனர்.


## விளம்பரப் பகுதி

### மலையாள மாந்திரீகம்



27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

**தலைமைப்பீடம்**
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

**கொழும்பு இல்லம்-**
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464



## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபா 492/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் | ரூபா 251/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் | ரூபா 128/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


## ஆராயப்படவேண்டிய ஆய்வு கூடம்



(காரைதீவு நிருபர்)

காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரி கனகரெத்தினம் விஞ்ஞான கூடத்தின் அவலநிலையையே இப்படத்தில் காண்கிறீர்கள். அபிவிருத்தி மலிந்த காலகட்டத்தில் இப்படியுமொரு புறக்கணிப்பா? கூரை மட்டுமல்ல யன்னல் யாவும் தலைகீழாக தொங்குகின்றன.


அஸ்ஸலாமு அலைக்கும்

### ஒரு முக்கிய அறிவித்தல்

அன்பான சகோதரர்களே!

இஸ்லாமிய சட்டதிட்ட முறைப்படி எல்லாம் வல்ல அல்லாஹ்வின் உதவியால், அல்லாஹ்வின் கிருபையால் சைத்தானால் ஏற்படக்கூடிய,

★ நோய்களைக் குணப்படுத்தல்
★ வீடு காவல் படுத்தல்
★ வீட்டுப் பிரச்சனைகளை தீர்த்தல்

போன்ற இன்னும் பல பிரச்சனைகளை தீர்த்துவைக்க அல்லாஹ்வின் உதவியால் முடியும். எல்லாம் குர்ஆன் மூலமாகத்தான் செய்யப்படும் என்பதை அன்புடன் தெரிவிக்கிறேன்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
அல்ஹாஜ் என்.எம். அக்ரம்
இல. 193, முஹாந்திரம் ரோட்ட,
கொள்ளுப்பிட்டி,
கொழும்பு-3.

Advt.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

விளம்பர மேலாளர் **Advertising Manager**
இல.5, காவிந்த பிளேஸ், No.5, Kavinda Place,
கிருலப்பனை Kirulapone
கொழும்பு-06. Colombo-06.
Phone 852041


## கிடைக்குமா ஒளி?

(அ.சே.நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு உட்பட்ட ஒலுவில் கிராமம் இரவு வேளைகளில் இருளில் மூழ்கிக் கிடக்கின்றது.

சுமார் 12000 மக்கள் வாழ்கின்ற இக்கிராமத்தின் இருள் சூழ்ந்த நிலையினை பிரதேச சபைக்கு அறிவித்தும் தெரு மின்விளக்குகள் இணைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப் படவில்லை எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.

எனவே, கிராமத்திற்கு ஒளியேற்றுவதற்கு மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

## அடிக்கல்! அடிக்கல்!!

(அம்பாறை அரசியல் நிருபர்)

நிந்தவூர் பிரதம தபாலகத்திற்கென நிரந்தரக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு சமீபத்தில் (03.11.94ல்) இரண்டாவது தடவையாக அடிக்கல் நாட்டப்பட்டது. கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் ஐ.தே.கட்சியின் தபால் அமைச்சர் திரு.ஏ.எம்.எஸ். அதிகாரினால், இப்பிரதேசத்தில் 'அரசோச்சிய' ஒரு அமைச்சரின் ஏற்பாட்டில் முதலாவதாக அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் கட்டிடம் எழும்பவில்லை!

கடந்தவாரம் புதிய இடத்தில் மீண்டும் அடிக்கல், அமைச்சர் அல்.ஹாஜ். அஷ்ரஃபினால் நாட்டப்பட்டது. இந்த அடிக்கல்நாட்டுவிழாவில் பிரதி தபால் அமைச்சர் ஜனாப் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா உரையாற்றுகையில், முன்னர் யூ.என்.பி.காரர்களால் நிதி எதுவும் ஒதுக்கப்படாமல்தான் அடிக்கல் நாட்டப்பட்டது என்ற 'குட்டை' வெளிக்காட்டினார். இப்பொழுது இதற்கென 65 இலட்சம் ரூபாவை ஒதுக்கிக்கொடுக்க புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு முன்வந்துள்ளது.

### நவீன மயம்

அம்பாறை-கல்முனைப்பிரதேச தொலைத் தொடர்பு சேவைகள் சுவீடன் நிறுவன உதவியுடன் நவீனமயப்படுத்தப்பட்டு, தொலைத்தொடர்பு சேவைகள் விஸ்தரிக்கப்படவுள்ளன. நிந்தவூரில் தனியான தொலைபேசி பரிவர்த்தனை நிலையமும் அமையவிருக்கின்றது. இன்னும் ஆறு மாதகாலத்தில் நவீன மயத்தின் பயன் கிடைக்குமாம்!

### மகளிர் மகாநாடு

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மகளிருக்கென விரைவில் தனியான அரசியல் மகாநாடு ஒன்றை நடத்துவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது. காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான அல்.ஹாஜ் அஷ்ரஃப் இதனைத் தெரிவித்தார்.

## புத்தளத்தில் மாறிவரும் பெயர்கள்!

| பழைய தமிழ் பெயர் | தற்போதைய திரிவடைந்த பெயர் |
|---|---|
| 1. கற்பிட்டி | கற்பிட்டிய |
| 2. மதுரன்குளி | மதுரான் குளிய |
| 3. முந்தல் | முந்தலம |
| 4. உடப்பு | உடப்புவ |
| 5. தொடுவாய் | தொடுவாவ |
| 6. தில்லையடி | தில்லயடிய |
| 7. பாலாவி | பாலாவிய |
| 8. கல்லடி | கல்லடிய |
| 9. ஆனைமடுவம் | ஆனைமடுவ |
| 10. கண்டகுளி | கண்டகுளிய |
| 11. மறிச்சுக்கட்டி | மறிச்சுக்கட்டிய |
| 12. வண்ணாத்திவில்லு | வண்ணாத்த வில்லுவ |
| 13. ஆராய்ஞ்சுகட்டு | ஆராச்சிக்கட்டுவ |
| 14. சின்னப்பாடு | சின்னப்பாடுவ |

## விண்ணப்பம் புரியவில்லை தமிழில் தரும் எண்ணம் வேண்டும்

நுகேகொடை ஜமுனா கட்டிடத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்களத்தில் தமது அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்து, அது இதுவரை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அங்கு சென்று விசாரணை மேற்கொள்ளும்போது தமிழ் மக்களாகிய எமக்கும் சிங்கள மொழியில் அச்சடிக்கப்பட்ட விசாரணை விண்ணப்பப்படிவம் தரப்படுகிறது. இதனால் சிங்கள மொழி தெரியாத தமிழ் விண்ணப்பதாரிகள் பெரிதும் கஷ்டத்துக்கு உள்ளாக நேரிடுகிறது. தமிழ் மொழிக்கு அரசாங்க மொழி அந்தஸ்து வழங்கப்பட்டும் ஏன் இந்த பாகுபாடு? உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? தமிழ் மக்கள் குறை தீருமா?

க.சிவலோகநாதன்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# புலிகள் கவனிக்கிறார்கள்

# அமைதி திரும்புமா?

## நாரதர் — எக்ஸ்ரே ரிப்போர்ட்

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதில் உருப்படியான எந்தவொரு அடியையும் எவருமே இதுவரை எடுத்துவைக்கவில்லை.

ஆனால் அவ்வப்போது வெளிவரும் பரபரப்பான செய்திகளுக்கு மட்டும் குறைவில்லை.

போர் தொடரும் போது போரில் ஈடுபடும் தரப்புக்கள் பற்றிய செய்திகள் ஒன்றுக்குப் பத்தாக வெளிவருவது எங்கும் உள்ள நடைமுறைதான்.

ஆனால், நம் நாட்டில் வெளியாகும் செய்திகள் உடனடிப் பரபரப்பையும் எதிர்பார்ப்புக்களையும் உடனடியாக உருவாக்கிவிடுகின்றன.

ஆனால் ஒரு வாரத்திற்குள்ளாகவே அந்த செய்திகளில் ஒன்றுமேயில்லை என்று ஆகிவிடுவதே வழக்கமாக இருக்கிறது.

போர் நிறுத்தத்தை எடுத்துக் கொண்டால் பொதுஜன முன்னணி அரசு பதவிக்கு வந்தநாள் தொட்டு அது பற்றிய பேச்சுக்கள் அடிபடத் தொடங்கிவிட்டன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் போர் நிறுத்தமோ அல்லது பேச்சுவார்த்தையில் முக்கியமான திருப்பமோ ஏற்பட சாத்தியமில்லை என்று முரசு மட்டும்தான் சொல்லியிருந்தது.

ஆனால் செய்தி உலகத்தில் எத்தனை கதைகள்?

காட்டுக்குள் போன பிரபாகரன் தனது கெரில்லாக்களுக்கு போரை நிறுத்துமாறு உத்தவிட்டுள்ளார் என்றது ஒரு செய்தி நிறுவனம்.

அந்தச் செய்தி வந்தது முன்னால்; 'சாகரவர்த்தன' கப்பலை கரும்புலிகள் மோதித் தகர்த்த செய்தி வந்தது பின்னால்.

ஜனாதிபதி தேர்தலை புலிகளது காவல்துறையினர் நடத்திக் கொடுப்பதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் செய்திகள்!

புலிகள் ஒருபோதும் அதற்கு உடன்படமாட்டார்கள் என்று முரசின் தலைப்புச் செய்தி மட்டுமே தெரிவித்தது.

இரு தரப்புக்கும் இருக்கக்கூடிய நெருக்கடிகள், அகப்-புறச் சூழ்நிலைகளை விருப்பு வெறுப்பின்றி நோக்கும் போது பெற்ற முடிவுகளே அவை.

நீண்டகால ஆயுதப் போராட்டத்தில் பிரபாகரன் தன்னை தனித்துவமான ஒருவராக நிலைநிறுத்திக் கொள்ள காரணமாக இருந்த அடிப்படைகளையே ஆட்டம் காணவைக்க, அவரே எப்படி சம்மதிக்க முடியும்?

இலங்கை ஒரு தீவு; அதில் இரு நாடுகள்.

ஒன்று சிறிலங்கா; மற்றையது தமிழ் ஈழம்.

தமிழ் ஈழத்தை உருவாக்கக்கூடிய ஒரே தலைவர் பிரபாகரன்.

அதற்காகத்தான்- அதனை நம்பித்தான் நூறு நூறாக புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் உயிர்த்தியாகம் புரிந்தார்கள்.

கொழும்பில், வடக்கு-கிழக்கை விடவும் வேறான ஒரு சூழலில், நீண்டநாட்களாகக் குறித்த இலக்குக்காக காத்திருந்து தன்னையே மனிதக் குண்டாக மாற்றுகின்ற ஓர் உறுப்பினரின் மனவலிமை நிச்சயமாக சுடில்லாதது.

நோக்கம், அதன் விளைவுகள் குறித்து கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் தற்கொலை தாக்கலுக்கு முன்வரும் உறுப்பினரின் மனோவலிமை பற்றிய மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை.

அந்த மனோவலிமை திடீரென்று தோன்றிய தற்காலிக உணர்ச்சியல்ல.

'தமிழ் ஈழம் நிச்சயம் உருவாகும். நான் போயினும் என் தலைவன் உள்ளான் அதை நிறைவேற்ற' என்ற நம்பிக்கையே அந்த மனோவலிமையின் அடிப்படையாகும்.

கரும்புலிகளின் கீதமும் அதுதான்- "பிரபாகரன் நினைத்தது நடக்கும் அவன் புலிப்படை நெருப்பாற்றைக் கடக்கும்."

ஒவ்வொரு தற்கொலைத் தாக்குதலுக்கும் முன்னர் அதற்கான கரும்புலி புறப்படும்போது அந்தப் பாடல்தான் இசைக்கப்படுகிறது.

இவ்வாறான சூழ்நிலையின் பின்னணியில்தான் நாம் விடயங்களை நோக்க வேண்டும்.

ஆனால், சில விமர்சகர்கள் தமது விருப்பு வெறுப்புப்படியெல்லாம் எழுதி ஒரு கற்பனையை வளர்த்து விடுகிறார்கள்.

அரசாங்கம் பொருளாதாரத் தடையில் ஒரு பகுதியை நீக்கியவுடன், பிரபாகரன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அரசாங்கத்தை கட்டியணைக்க ஓடிவந்துவிடுவார் என்பது போல மக்களை எதிர்பார்க்க வைத்தார்கள்.

ஏதோ பொருளாதரத் தடைக்கெதிராகத்தான் போரட்டமே ஆரம்பித்தது மாதிரியும், தடை விலகிவிட்டது இனியென்ன பிரச்சனை என்பதுபோலவும் ஒரு கருத்தை தோற்றுவித்தார்கள்.

ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த பின் நேபாளத் தலைநகரான திம்புவில் ஆரம்பித்து பிரேமதாசா அரசாங்கத்தோடு வரை பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன.

இடைக்கிடையே போர் நிறுத்தங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

1985இல் திம்புவில் நடந்த பேச்சில், இந்திய மத்தியஸ்தத்தோடு புலிகள் உட்பட சகல தமிழர் அமைப்புக்களும் இலங்கை அரசுப் பிரதிநிதிகளோடு பேசினார்கள்.

முதலில் பேச்சு நடத்தவே சகல இயக்கங்களும் மறுத்துவிட்டன.



புலிகள், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்புக்கள் அப்போது கூட்டமைப்பாக இருந்தன. ஈழத்தேசிய முன்னணி (ENLF) என்பது அதன் பெயர்.

அந்தக் கூட்டமைப்பு 'ஈழமே இறுதித் தீர்வு. குறைந்தபட்சத் தீர்வுக்கு பேச்சு எதற்கு?' என்றுவிட்டது.

இறுதியில் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தனக்கு நெருக்கமான அமைச்சர் திரு. சிதம்பரத்தை தமிழ்நாட்டுக்கு அனுப்பிவைத்தார்.

தமிழ் நாட்டில் ஈ.என்.எல்.எவ். கூட்டமைப்பின் தலைவர்களை சந்தித்த சிதம்பரம் ராஜீவ் காந்தியின் செய்தியைச் சொன்னார்.

**"பேச்சுவார்த்தை-போர் நிறுத்தம் என்பவற்றுக்கு நீங்கள் சம்மதிக்காவிட்டால் உங்கள் நாட்டுக்கு நீங்கள் செல்ல வேண்டியிருக்கும். அங்கு போய் உங்களை நிலைப்படுத்திப் போராடிக்கொள்ளலாம். இந்தியா தலையிடாது."**

அது அதிர்ச்சி வைத்தியம்! தமிழ் அமைப்புக்கள் பேச்சுவார்த்தைக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் முன்வந்தன.

பேச்சுக்கோ, சமாதானத்திற்கோ நாம் எதிரிகளல்ல என்று உலகுக்குக் காட்ட திம்பு பேச்சில் கலந்துகொள்வதாகக் கூட்டமைப்பு முடிவு செய்தது.

அதே சமயத்தில் போர் நிறுத்தத்தை வாய்ப்பாக வைத்து வடபகுதியில்- குறிப்பாக யாழ் குடாநாட்டில் படையினரது முகாம்களுக்கு முன் இயக்கங்கள் நிலைகொண்டன.

திம்பு பேச்சு முறிந்தபோது போர் நிறுத்தமும் முடிந்தது. ஆனால் படைகள் முகாம்களை விட்டு வெளியேறுவதற்கு போராடவேண்டி ஏற்பட்டது.

திம்புவில் மாற்றுத் திட்டம் முன்வைக்கும் போதும் இலங்கை அரசை சிக்கவைக்கும் தந்திரமாக அது கருதப்பட்டதே தவிர தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிடுவதாக முடிவு செய்து முன்வைக்கப்படவில்லை.

அந்த மாற்றுத்திட்டத்தை ஏற்பதும் ஒன்றுதான் ஈழத்தைக் கொடுப்பதும் ஒன்றுதான் என்று அன்றைய ஜே.ஆர்.அரசு நினைத்தது.

"நாங்கள் பேச்சுக்கு போனோம். சிங்கள அரசு நியாயமான தீர்வுக்கு தயாராக இல்லை." என்று தமிழ் அமைப்புக்கள் அறிக்கை விட்டதோடு அந்த பேச்சுவார்த்தை முடிந்தது.

இந்தியாவோடும் பகையில்லை. சமாதானத்தின் எதிரிகளாக தம்மை சுட்டிக்காட்டவும் இலங்கை அரசுக்கு வழியில்லை என்றளவில் தமிழ் அமைப்புக்களுக்கு பேச்சுவார்த்தை முயற்சி சாதகமாக அமைந்தது மட்டுமே பலாபலன்.

இன்று திருமதி சந்திரிக்காவை தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானோர் நம்புகிறார்கள் என்பது உண்மைதான்.

அதற்காக புலிகளும் நம்புகிறார்கள் நம்புவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்தியாவிலும் தமிழர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர்.

இந்தியப்படை வந்தபோது வாஞ்சையோடு வரவேற்றனர்.

சுதுமலையில் அப்போது நடந்த கூட்டத்தில் திரு. பிரபாகரன் உரையாற்றினார்.

**"எமது மக்களது பாதுகாப்பை இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம். ஆயுதங்களை கையளிக்கிறோம்"** என்று அவர் பேசியபோது கரகோசம் வானைப் பிளந்தது.

ஆயுத ஒப்படைப்பை மக்கள் வரவேற்றதைத்தான் கரகோசம் காட்டியது.

ஆனால் புலிகள் அதனை மனம் விரும்பியா செய்தார்கள்?

பிரபாவே சொன்னார், **"சிங்கள அரசில் எமக்கு நம்பிக்கையில்லை. ஆனால் இந்தியா சொல்கிறது- ஆயுதங்களைக் கேட்கிறது, அதனால் செய்கிறோம்"** என்றுதான் கவலையோடு சொன்னார்.

மக்களின் விருப்பத்திற்கு எதிராக இந்தியாவை உடனடியாக புலிகள் கண்டிக்கவில்லை.

பின்னர் படிப்படியாக அதிருப்தியை வெளியிட்டு, திலீபனின் சாகும் வரை உண்ணாவிரதத்தோடு அந்த அனுதாபத்தை இந்தியாவைப் பற்றி மக்கள் அதிருப்தியடையும் படியான நிகழ்வாக்கினார்கள்.

குமரப்பா, புலேந்திரன், திலீபன் போன்ற தமது முக்கியமான தலைவர்களை கொடுத்து, அதன் மூலமாக இந்தியா மீதான அதீத நம்பிக்கை தவறு என்று செய்தியை பிரபா தெரியப்படுத்த வேண்டியிருந்தது.

பிரேமா அரசோடு பேச்சு நடந்தகாலத்திலும், பிரபா யாழ்ப்பாணத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் "பிரேமதாசா மீது நம்பிக்கை இருக்கிறது" என்று சொல்லியிருந்தார்.

அதே சமயம் யாழ் குடாநாட்டில் உள்ள எழுத்தாளர்களை அழைத்து **"போர்க் குணத்தை வளர்க்கும் விதமாக எழுதுங்கள். மக்கள் எல்லாம் ஏதோ போர் முடிந்துவிட்டது என்ற மனநிலையில் இருக்கிறார்கள். நான் அப்படிக் கருதவில்லை. மாத்தையாவும், அன்ரன் பாலசிங்கமும் அரசோடு பேசுகிறார்கள். பேசிப் பார்க்க ஒரு கால அவகாசம் கொடுத்திருக்கிறேன். அதற்குள் சரிவரா விட்டால் நான் போரை ஆரம்பிப்பேன்."** என்று கூறியதாக தகவல்கள் வந்தன. எந்தவொரு சிங்கள் அரசும் பிரச்சனைகளை தீர்க்காது என்பதுதான் பிரபாவின் ஆழமான நம்பிக்கை.

அதனைத்தான் அவர் தனது உறுப்பினர்களுக்கும் கூறி வருகிறார்.

பிரபாவின் எண்ணத்தில் நியாயம் இருக்கவும் செய்கிறது.

புலிகளிடம் பலம் இருப்பதால்தான் அரசாங்கமும் உலகமும் அவர்களோடு பேசித்தான் ஆகவேண்டும் என்று சொல்கின்றன.

உதாரணமாக, காமினி கொல்லப்பட்டுவிட்டார்.

அதுகுறித்து புலிகள் மீது சந்தேகம் இருக்கிறது. விசாரணைகளும் நடக்கின்றன.

ஆனாலும் புலிகள் பற்றி அரசாங்கம் இதுவரை கடுமையாகப் பேசவில்லை.

புலிகளோடு அடுத்த கட்டப் பேச்சு எப்போது என்றுதான் அரசாங்கத்திடம் கேட்கிறார்கள்.

இதையே- புலிகள் ஒரு பலவீனமான அமைப்பாக இருந்திருந்தால்,

"புலிகள் மீது எப்போது நடவடிக்கை எடுப்பீர்கள்?" என்றுதான் கேட்டிருப்பார்கள்.

ஒருவேளை பிரபாவும் ஆயுதங்களை ஒப்படைத்து ஜனநாயக வழிக்கு வந்துவிட்டால் "பிரபா மீது நடவடிக்கை எடுப்பீர்களா? எப்போது எடுப்பீர்கள்?" என்று வீரமாக- ஜனநாயகமாக கேள்வி கேட்க ஆட்கள் இருப்பார்கள்.

புலிகளை பாசிஸ்டுகள் என்று உறுதியாகக் கூறிய தமிழ்க்கட்சிகள் கூட "எம்மோடு பேசாவிட்டாலும் புலிகளோடு போய் பேசுங்கள்" என்று சொல்கிறார்கள் என்றால் காரணம் புலிகள் மீது கொண்ட பாசமல்ல- புலிகளது பலம்.

வடக்கே தேர்தல் நடத்தப்படுவது ஜனநாயக மீறல் என்று துடித்த கட்சிகள் கூட புலிகளது கட்டுப்பாட்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றி அரசு பேசியபோது, மௌனமாக-நல்ல பிள்ளைகளாக இருந்தார்கள் என்றால் காரணம் புலிகளின் பலம்.

புலிகள் தொடர்பான விடயம் என்றாகும் போது ஜனநாயக வாதிகள் சிலருக்கு வேறு அவசர வேலைகள் வந்துவிடுகின்றன (?!) அதனால் அது பற்றி கருத்துக்கூற நேரமிருப்பதில்லை.

ஆயுதமும், அதிகாரமும்தான், புலிகளை அரசு முதல்- அவர்களை மனதார விரும்பா விட்டாலும்- வாயாரப் புகழும் ஆட்கள்வரை புலிகளை அங்கீகரிக்க முக்கிய காரண மாகிறது.

அரசாங்கம்கூட தமிழ்பேசும் மக்களது முக்கியமான அரசியல் அபிலாசைகள் தொடர்பாக இதுவரை கருத்துக் கூறவில்லை.

சகல தமிழ் கட்சிகளும் நான் முந்தி நீ முந்தி என்று ஜனாதிபதி சந்திரிக்காவை ஆதரிக்கின்றன.

ஆனால் அக் கட்சிகளோடு கூட வடக்கு- கிழக்கு நிரந்தர இணைப்புப் போன்ற விடயங்கள் பற்றி அரசாங்கம் பேசவில்லை. இப்போதே தீர்வு திட்டத்தை முன்வைத்து விட்டால் புலிகளோடு பேசும்போது மேசையில் வைக்க எதுவுமில்லாமல் போய்விடும் என்றுதான் அரசு நினைப்பதாகத் தெரிகிறது.

எனவே-தமது பலத்தின் பெறுமதியை ஏனையோரே உணரும்போது புலிகள் உணராமலிருப்பார்களா?

நிறைகுடம் தழும்பாது. பலம் இருப்பதால் புலிகள் அவசரப்படமாட்டார்கள்.

நிபந்தனையில்லா ஆதரவு என்று அறிக்கைவிடாவிட்டால் ஏனைய கட்சிகள் முந்திக்கொண்டு அரசோடு ஒட்டிவிடுமோ என்று தமிழ்க்கட்சிகள் தமக்குள் போட்டி நடத்துவது போன்ற அவசரம் புலிகளுக்கில்லை.

ஆகவே- புலிகள் நிலமையைக் கவனிக்கிறார்கள்.

அவர்கள் ஆறுதலாக இருக்கும்போதே புதிய அரசுக்கு நல்லெண்ணம் காட்ட அவசரப்பட்டு ஓடித்திரிவது போல செய்திகளை சிலர் சமைத்துத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

**"காமினி கொலை புலிகள் மறுப்பு"** இது ஒரு செய்தி. யார் மறுத்தது? இதுவரை புலிகள் உத்தியோகபூர்வமாக மறுக்கவில்லை.

கடந்த 14ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகையாளர் மாநாடு. திரு அன்ரன் பாலசிங்கமும், திரு தமிழ் செல்வனும் கலந்துகொண்டனர்.

காமினி கொலை என்ற ஒரு சம்பவம் நடந்தது மாதிரியோ தம்மோடு இணைத்துப் பேசப்பட்டது பற்றியோ அவர்கள் ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை.

இப்படித்தான் போர் நிறுத்த ஒட்டுச் செய்தி விடயத்திலும் நடந்தது. உடனே விமர்சகர்கள் 'புலிகள் மக்களின் குரலுக்கு வரவேற்பு! போர் நிறுத்தம்!' என்றெல்லாம் கூறினார்கள்.

ஞாயிறு-திங்கள் இருநாட்களும் இந்த செய்தி அடிபட புலிகள் யாழிலிருந்து அதனைக் கவனித்தனர்.

செவ்வாய்க்கிழமை பாலசிங்கம் சொன்னார், **"சிறீலங்காவில் புதிய ஜனாதிபதியாக சந்திரிக்கா குமாரதுங்க பொறுப்**

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## அதிரடி அய்யாத்துரை



அவர் ஒரு அரசியல்வாதி. பெயரில் காந்தம் இருந்தாலும் சென்ற தேர்தலிலை திருவானமலை மக்களை அவராலை கவர முடியேல்லை. அஞ்சலிக்கூட்டம் ஒண்டிலை அவர் பேசின விடயத்தை தமிழ் பத்திரிகை ஒண்டு போடேல்லையாம். வந்த கோபத்திலை பத்திரிகை அலுவலகத்திற்கு நேரடியாப் போய் துள்ளு துள்ளெண்டு துள்ளிப் போட்டு வந்திட்டார். கூட்டத்திலை பேசினது 25 நிமிசம். பத்திரிகை காரியாலத்திலை பேசினது 35 நிமிசம். என்ன பொன்னான நேரம்? வீணாகிப்போச்சுதே. மனம் புண்ணாப்போனா உப்பிடித்தானாம்.

வன்னியிலை வழக்குப் போட்ட தமிழ் கட்சி வழக்குப் போடும் முறையிலை பிழை விட்டுப் போட்டுதாம். சட்டப் புலியளே சறுக்கிப்போட்டினம். வன்னியில் வெற்றிபெற்ற தமிழ கட்சி பிரமுகர் கூட்டான தமிழ் கட்சி பிரமுகரிடம் கூறினாராம். "அண்ணே செலவுக் காசும் தரவேண்டியிருக்கும். ரெடி பண்ணி வைச்சிருங்கோ."

பிரிட்டனின் மகாராணியின் தாயார் இறந்ததாக பிழயான மரணச் செய்தியை அறிவிச்ச பி.பி.சி. செய்தி எப்படி வந்தது எண்டு விசாரணை நடக்குதாம். எங்கடை நாட்டிலை எண்டால் எத்தனை விசாரணை நடத்தவேண்டியிருக்கும்?

யாழ்ப்பாணத்திலை தேங்காய் விலை 27 ரூபா 50 சதம். என்ன, விறைச்சுப் போனியளோ? விபரம் சொல்லுறன் கேளுங்கோ. கிளிநொச்சியிலை 10 ரூபா. கிளிநொச்சிக்கு வெளியே கொண்டுபோக வரி 10 ரூபா. பிறகு திருநெல்வேலிச் சந்தையிலை வரி 1 ரூபா 50 சதம். எல்லாம்போக விற்கிற வருக்கு குறைந்தது 6 ரூபா கையிலை நிக்கிறதுதானே நியாயம்! அதனாலைதான் அந்த விலை. எனக்கொரு டவுட்! இலங்கையிலை இரு நாடு எண்டது ரெண்டு எழுத்தார் பொலிசி- சரி. பிறகேன் ஒரு நாட்டிலையே இரண்டு இடத்திலை வரி அறவிடுகினம்? கிளிநொச்சியும் யாழ்ப்பாணமும் தமிழ் ஈழத்துக்குள் தானே வருகுது?

இன்னொரு விறைப்பான செய்தி: யாழ்ப்பாணத்திலை சீமெந்து விலை ஆயிரத்தி நூறு ரூபா. விபரம் தேவையல்லோ. சொல்லுறன் குறியுங்கோ. கொழும்பிலை 230 முதல் 275 வரை விலை போகுது. அதை வாங்கி கப்பலிலை ஏற்றுக்கூலி, இறக்குக்கூலி, ரீ சாப்பிட்ட கூலி எண்டு எல்லாம் சேர்த்து யாழ்ப்பாணத்திலை சேர 550 ரூபாவாகுது. அதை நேரடியாக கூட்டுறவுச் சங்கம் விற்பனை செய்தா 550க்கு கொடுக்கலாம். ரெண்டு எழுத்தார் தமது நிதித் தேவை கருதி அதை கூ.சங்கத்திடமிருந்து வாங்கி விக்கிறதாலை ஒரு ஐநூறு ரூபா கூட வைச்சு விக்க வேண்டிக் கிடக்காம். இதுகளை தவிர்க்கத்தான் வெளிநாட்டு தமிழாகள நிதி உதவி செய்ய வேண்டும் எண்டு வேண்டுகோள் விடுத்திருக்கினம்.

படைத்துறை செயலரை மாற்றப் போவதாக கடந்தவாரம் செய்திகள் பரவினது. அதிலை உண்மையில்லையாம். உடனடியா அப்பிடி ஒரு அபிப்பிராயம் மேலை இல்லையாம்.

தலைநகரிலை பழையபடி தேடல் துருவல் ஆரம்பிச்சிட்டுதல்லோ. ஒரே விடுதிக்கு ஒரு நாளைக்கு ரெண்டு தரம் போயும் துருவல் நடக்குதாம். துருவினாலும் தொடர்ந்து வெடிச்சுக் கொண்டுதானோ இருக்குது எண்டு சிலர் சலித்துப் பேசுகினமாம்.

தனித்துவ தலைவர் பச்சை அணி விடயத்திலை கோபமாய் இருக்கிறாராம். 'ஊழல்' பட்டியல் எண்டு பச்சை அணி கூறித்திரியறதுதான் கோபத்துக்கு காரணமாம்.

தம்பதியர் இடையே ஊடல். யார் முதலில் பேசுவது எண்டு பிரச்சனை. அந்த நேரத்திலை கைகொடுக்கும் நாட்டுப்பாடல்:

"ஏண்டி குட்டி
பேசல்ல.
என்னடிக் குட்டி பேசல்ல
போன மாச சம்பளம்
பொட்டியில இருக்குது.
இந்த மாச சம்பளம்
இடுப்பிலேயே இருக்குது.
காப்புப் பண்ணி போட்டுக்கோ
கடயம் பண்ணி போட்டுக்கோ
மிஞ்சிப் போன பணத்துக்கு
மிஞ்சிப் பண்ணி போட்டுக்கோ."

தேவைப்பட்டால் நீங்களும் முயற்சி பண்ணுங்கோ.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்..... 3

# இருக்கும்போது பாடப்பட்ட வசை!

# இறந்தபின் தெரிவிக்கப்பட்ட வருத்தம்!!

(சென்றவாரத் தொடர்ச்சி)

நான்கு இளைஞர்களும் "வணக்கம் ஐயா" என்றதும், பதில் வணக்கம் சொன்னார் மேயர் அல்பிரட் துரையப்பா.

அதுவே அவரது இறுதி வணக்கமும் ஆனது.

துரையப்பா என்ன நடக்கப் போகிறது என்று நிதானிப்பதற்கிடையிலேயே இளைஞர்களில் ஒருவர் கைத்துப்பாக்கியால் சுட்டார்.

மார்பில் ரவைகள் பாய இரத்த வெள்ளத்தில் விழுந்தார் யாழ் மேயர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் தொண்டைக் குழாய்களால் பிரசார மேடைகளில் தினமும் சுடப்பட்டுக்கொண்டிருந்த துரையப்பாவின் கதையை இறுதியாக கைத்துப்பாக்கி முடித்துவைத்தது.

1975ம் ஆண்டு ஜூலை 27ம் திகதி துரையப்பா உயிர் இழந்த செய்தி காட்டுத் தீயாக நாடெங்கும் பரவியது.

அப்போது பிரதமராக இருந்தவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

செய்தி கேட்டு அவர் துடித்துப் போனார்.

உடனடியாக கொலையாளிகளை கண்டுபிடிக்குமாறு அரசு உத்தரவிட்டது.

அப்போது யாழ்ப்பாணத்தில் பொலிஸ் துறையில் தமிழ் அதிகாரிகள் தான் துப்புத் துலக்குவதில் பிரபலமானவர்களாக இருந்தனர்.

இன்ஸ்பெக்டர்கள் பஸ்தியாம்பிள்ளை, பத்மநாதன், தாமோதரம் பிள்ளை ஆகியோர் முக்கியமானவர்கள்.

பொலிசாரின் சந்தேகப் பார்வையில் முதலில் விழுந்தவர்கள் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள்தான்.

இறுதிச் சடங்கின் முன்னர் கொலையாளிகளை வளைத்துப் பிடித்துவிட வேண்டும் என்று பொலிஸ் தீவிரமாகியது.

'கொலையாளிகள் யார்?' யாழ்ப்பாணம் எங்கும் வலைவீசி தேடல் நடந்தது.

அந்த நான்கு இளைஞர்கள் யார் என்று நாடே அறியாத இரகசியத்தை அறிந்தவர்கள் இருந்தார்கள்.

அவர்கள்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்டத் தலைவர்கள்.

அவர்களே இலக்கை அடையாளம் காட்டினார்கள்.

அவர்கள்தான் அந்த இலக்கை அழித்தவர்களையும் அறிந்து வைத்திருந்தார்கள்.

குறிப்பாக, தலைவர் அமிர்தலிங்கம் அந்த நான்கு இளைஞர்களதும் வரலாற்றை ஆதியோடு அந்தம் வரை அறிந்தவர்.

நான்கு இளைஞர்களில் ஒருவரான பிரபாகரனை 'தம்பி' என்று வாஞ்சையோடு அழைத்துப் பேசுவார் அமிர்.

அப்போது பிரபாகரனுக்கு 'தம்பி', 'கரிகாலன்' போன்ற பெயர்கள் வழங்கி வந்தன.

'துரோகி துரையப்பா' என்று எதுகை மோனையோடு, சந்த நயத்தோடு தமிழர் விடுதலைக் கூட்டணியால் துரையப்பா வசை பாடப்பட்டபோதும், யாழ்ப்பாணத்தில் அவருக்கென்றும் கணிசமான செல்வாக்கு இருந்தது.

கூட்டணி எதிர்ப்பாளர்கள், மற்றும் அவரால் வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர், யுவதிகள், சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களில் கணிசமானோர் துரையப்பாவை ஆதரித்தவர்களில் அடங்கியிருந்தனர்.

சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களிடம் அப்போதெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியினர் தமிழ் ஈழக் கோரிக்கை குறித்து அச்சத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

இடது, வலது என்று பிரிந்திருந்த போதும் சகல கம்யுனிஸ்ட் கட்சிகளுமே தமிழ் ஈழக் கோரிக்கையை எதிர்த்துக் கொண்டிருந்தன.

"ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை?" என்று காசி ஆனந்தன் கவிதை எழுதியிருந்தார் அல்லவா?

**ஆண்ட பரம்பரை என்பது உயர் சாதியினரைத்தான் குறிக்கும். அவர்கள் மீண்டும் ஆள வந்தால் நீங்கள் சிரட்டையில்தான் தேநீர் குடிக்க வேண்டும்.**

**கை கட்டி வாய்பொத்தி நிற்கவேண்டியிருக்கும்** என்றெல்லாம் 'கம்யுனிஸ்டுக்கள்' என்று தம்மை அழைத்துக் கொண்டவர்கள் விளக்கம் சொன்னார்கள்.

காங்கேசன்துறைத் தொகுதி எம்.பி பதவியை துறந்து, தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்து அமரர் தந்தை செல்வநாயகம் (தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்) போட்டியிட்டபோது ஒரு தமிழர் அவரை எதிர்த்துப் போட்டியிட்டார்.

அவர்தான் சமீபத்தில் கனடாவில் காலமான 'கம்யுனிஸ்ட் 'வி. பொன்னம்பலம்.

தந்தை செல்வநாயகத்தை 'செவிடன்' என்றெல்லாம் திட்டித் தீர்த்தார்கள் கம்யுனிஸ்ட் கட்சியினர்.

அப்போது வெளிவந்துகொண்டிருந்த 'தினபதி' பத்திரிகை கூட்டணியினரை கேலி செய்தும், கிண்டல் செய்தும் எழுதியது.

அதனால் தமிழர்களுக்கு எதிரான பத்திரிகை என்று யாழ்ப்பாணத்தில் 'தினபதி' கருதப்பட்டது.

அனைத்தையும் மீறி தந்தை செல்வா காங்கேசன்துறை இடைத் தேர்தலில் மாபெரும் வெற்றியீட்டினார்.

எனினும் ஒடுக்கப்பட்ட சாதி மக்களிடம் கம்யுனிஸ்ட் கட்சிகள் தீவிரமாகப் பணியாற்றியதால் அவர்களிடம் தமிழ் ஈழக் கோரிக்கை குறித்து அச்சம் நிலவியது.

சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து பலருக்கு துரையப்பா சுட்டுறவுச் சங்கங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

துரையப்பாவின் இறுதிச் சடங்கில் ஆயிரக் கணக்காண மக்கள் கலந்துகொண்டனர். பலர் கண்ணீர்விட்டு கதறினார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் துரையப்பா மறைவுக்கு ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

> **சுருதி மாறிய குரல்**
>
> **1972**
>
> "எங்களக் கேட்டோ சிவகுமாரன் குண்டெறிஞ்சவர்? வழக்காட முடியாது போ."
>
> **1974**
>
> "தம்பி சிவகுமாரன் எங்களுக்கு வழி காட்டிவிட்டார்."

### கூட்டணி கண்டனம்

'கொலைக்கு காரணமானவர்களை தாம் வன்மையாக கண்டிப்பதாக' தெரிவித்து அகிம்சை வழியே தம் வழி என்று சொல்லிக்கொண்டனர்.

கூட்டணிமீதும், தலைவர் தளபதி அமுதர் மீதும் இருந்த தீவிர நம்பிக்கையால் கூட்டணியினரது அறிக்கையை 'சாணக்கிய தந்திரம்' என்று இளைஞர்கள் நினைத்தனர்.

விசாரணைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிசாரால் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இருவர் மட்டுமே கொலையில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள்.

ஒருவர் கலாபதி. மற்றவர் கிருபாகரன்.

பிரபாகரனும், பற்குணராஜாவும் கைது செய்யப்படவில்லை.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள்மீது கொழும்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் சட்டத்தரணிகளாக இருந்த தலைவர்களில் அநேகமாக எல்லோருமே சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரானார்கள்.

### அற்புதன்



அல்பிரட் துரையப்பா

### வழக்கில் தலைவர்கள்

அவர்களில் முக்கியமனவர்கள் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலமும், அமரர் திருச்செல்வமும்.

குற்றவாளிக் கூண்டில் நின்ற இளைஞர்கள் சிலர் தமது சட்டையில் உதய சூரியன் 'பட்ஜ்' அணிந்திருந்தனர். அது தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னம்.

தமிழ்ஈழ சுதந்திரக் கொடியாகவும் உதயசூரியன் கொடியை கூட்டணி அறிவித்தது.

பெப்ரவரி 4ம் திகதி சிங்கக் கொடிகளை ஏற்றுங்கள் என்று அரசு அறிவிக்கும்.

'அன்று இல்லங்கள் தோறும் உதய சூரியன் கொடியை ஏற்றி சுதந்திர தாகத்தை வெளிப்படுத்துங்கள்' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி ஆணையிடும்.

அது சுதந்திரக் கொடியாக நீடித்ததோ இல்லையோ தேர்தல்களில் கூட்டணியின் சின்னமாக இன்றுவரை இருக்கிறது.

வாக்காளர்கள் சுலபமாக கூட்டணியின் சின்னத்தை இனம் காணவும் கொடி ஏற்றங்களும், 'பட்ஜ்' அணிதல்களும் மிக வசதியாகப் போய்விட்டன.

தேர்தல் சின்னத்தையே தேசியக் கொடி என்று அறிவித்து பிரபலப்படுத்திய கூட்டணித் தலைவர்களது விவேகத்தை இப்போதுகூட மெச்சத் தோன்றுகிறது.

அது மட்டுமல்ல, துரையப்பா கொலை வழக்கையே பாரிய பிரசாரமாகவே மாற்றியமைத்துவிட்டனர் கூட்டணியினர்.

மறுபுறம், 'எங்களைக் காக்க கூட்டணியினர் இருக்கிறார்கள். சட்டம் எதுவும் செய்ய இயலாது' என்ற நம்பிக்கையும் தீவிரவாத இளைஞர்களிடம் ஏற்பட்டது.

"நீங்கள் செய்யுங்கள். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என்ற மறைமுகச் செய்தியும் துரையப்பா கொலை வழக்கில் அணி அணியாக ஆஜரான சட்டத்தரணிகள் மூலம் தெரிவிக்கப்பட்டது எனலாம்.

**தமிழ் ஈழம் ஒரு தனிநாடு. இறைமையுள்ள நாடு. சிறிலங்கா சட்டங்கள் அதனைக் கட்டுப்படுத்த முடியாது** என்று ஆதாரங்களை அள்ளிவைத்து வாதாடியவர் அமரர் திருச்செல்வம்.

### செல்வரும்-லிங்கமும்

திருசெல்வம் பற்றிய ஒரு சுவையான குறிப்பு-

1972ம் ஆண்டு யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு பிரதியமைச்சர் சோமவீர சந்திரசிறி விஜயம் செய்தார்.

அவரது காருக்கு குண்டு வீசப்பட்டது. வீசியது சிவகுமாரன்.

அதனைத் தொடர்ந்து சிவகுமாரன் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மல்லாகம் மாஜிஸ்ரேட் நீதிமன்றில் சிவகுமாரன் சார்பில் ஆஜரானவர் அமரர் சுந்தரலிங்கம்.

'அடங்காத் தமிழர்' என்று அழைக்கப்பட்ட சுந்தரலிங்கம், **"பணம் தரா விட்டால் வழக்காட மாட்டேன்"** என்று சிவகுமாரின் தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரையிடம் அடம் பிடித்தார்.

தருவதாகச் சொன்னார் சிவகுமாரின் அம்மா. ஆனால் கொடுக்க வசதியில்லை.

சுந்தரலிங்கத்தின் கார்சாரதி தினமும் சிவகுமாரின் வீட்டு வாசலில் காவல் நின்று நச்சரிப்பார்.

"ஐயா வாங்கி வரச் சொன்னார்" என்பார் சாரதி. மல்லாகம் நீதிமன்றம் தனக்கு சிவகுமாரன் விடயத்தில் பிணை வழங்கும் அதிகாரம் இல்லை என்று விட்டது.

உடனே தலைவர் அமிரை சிவகுமாரன் வீட்டார் சந்தித்தனர்.

அவர் கொழும்பில் இருந்த திருச்செல்வத்திற்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார். மேல் நீதிமன்றத்தில் மனுப்போட்டு பிணை வாங்கிக் கொடுக்குமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடிதத்தோடு வந்த இளைஞர் கொழும்பில் திருச்செல்வத்தை சந்தித்தார்.

கடிதத்தை படித்துவிட்டு திருச்செல்வம் அந்த இளைஞரைப் பார்த்துக் கேட்டார்,

"எங்களைக் கேட்டோ செய்தனீங்கள்?"

பிணை கேட்க மறுத்துவிட்டார் திருச்செல்வம்.

> **எப்படி?**
>
> **துரையப்பா கொலையில் பிரபாகரன் பங்கு கொண்டிருந்தார். ஆனால் துரையப்பா கொலைக்கு காரணம் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்ல! எப்படி? வரும் வாரம்வரை பொறுத்திருங்கள்.**

### செத்தபின் வாழ்த்து

பின்னர் பல மாதங்கள் சென்று சிவகுமாரன் விடுதலையானார்.

1974 ஜூலை 5ம் திகதி சிவகுமாரனுக்கு கொழும்பில் ஒரு அஞ்சலிக் கூட்டம்.

இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடந்த அந்த அஞ்சலிக் கூட்டத்தை தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

பிரதான பேச்சாளர் திருச்செல்வம். அவர் தனது உரையில் கரகோஷத்தின் மத்தியில் கூறினார்,

"தம்பி சிவகுமாரன் எங்களுக்கு வழிகாட்டி விட்டார்."

முன்னர் கடிதத்தோடு திருச்செல்வத்தை சந்தித்த இளைஞரும் அந்தக் கூட்டத்தில் அமர்ந்திருந்தார் என்பதுதான் இன்னும் சுவாரசியம்.

(தொடர்ந்து வரும்)

### எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

பேற்றுள்ளார். அதற்காக தாக்குதலை ஒத்திவைக்குமாறு தலைவர் உத்தரவிட்டுள்ளார்" ஆனால் அரசுக்கு அதிகார பூர்வமாக அறிவிக்கவில்லை.

இதன் பின்னர் கடற்படையினரின் தாக்குதல் ஒன்றில் மீனவர்கள் காயமடைந்தனர். 17ம் திகதி தனியார் பேருந்து ஒன்றின் மீது யாழ்ப்பாணத்தில் ஹெலி தாக்கி சாரதி காயமடைந்தார்.

உடனே புலிகளின் குரல் அறிவித்தது: "புலிகளது போர் நிறுத்தத்தை படையினர் மீறி விட்டனர். படைகளை கட்டுப்படுத்த புதிய ஜனாதிபதியாலும் முடியவில்லை."

இது அரசாங்கமே பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய கதை.

போர் நிறுத்தச் செய்தியை படைத் தரப்பு ஒட்டுக் கேட்டது உண்மையானால், அவர்களே அதை உலகறியச் சொல்லி விட்டு பிறகெதற்கு தாக்குதல் நடத்தினார்கள் என்று தெரியவில்லை.

தம்மீது தாங்களே படையினர் நம்பிக்கையீனங்களை உருவாக்கி வருகின்றனர்.

கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு நடந்தது. போர்நிறுத்தம் பற்றி நிருபர்கள் கேட்டனர். "எமக்கு அதிகாரபூர்வமாக புலிகள் அறிவிக்கவில்லை. எனவே நாம் போர் நிறுத்தம் செய்யவில்லை" என்றது அரச தரப்பு.

இதென்ன புதுக் குழப்பம்? இதைவிட ஒட்டுச் செய்தியை கேட்டுவிட்டு "அப்படியா சங்கதி? பார்க்கலாம்?" என்று இருந்திருக்கலாமே. அதை ஏன் வெளியே விடவேண்டும்? பிறகேன் கைவிரிக்க வேண்டும்?

ஆக, அரச தரப்புக்கு புலிகளோடு பேசியாக வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கிறது.

முதல் சுற்றுப் பேச்சு முடிந்தவுடன் காமினி கொலை இடையே வந்து குறுக்கிட்டு விட்டதால் மீண்டும் எங்கிருந்து தொடங்கலாம் என்று அரசு ஒரு முடிவுக்கு வராமல் தடுமாறுகிறது.

அதன் வெளிப்பாடுதான் ஒட்டுச் செய்திகள். இந்தா அந்தா போர் நிறுத்தம் வருவது போன்ற செய்திகளும் வெளியே வந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், ஒரு விசயம் உறுதி. அரசு மீண்டும் புலிகளோடு பேச்சை ஆரம்பிக்க உறுதியாக விரும்புகிறது.

ஆக, 'புலி வருகுது' கதை போல, இறுதியாக போர் நிறுத்தம் ஒன்றுக்கு அரசு வந்தேயாக வேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இல்லாவிட்டால் புலிகளிடமிருந்து பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை அரசாங்கம் சந்திக்க வேண்டியும் வரலாம்.

அப்படி நடந்தபின் உடனடிப் போர் நிறுத்தம் செய்ய முடியாமல் போய்விடும். ஏனெனில் அரசு தன்னைப் பலவீனமாகக் காட்ட விரும்பாது.

புலிகளும் தமது பலத்தை இழக்க விரும்பமாட்டார்கள்.

புலிகளது பலத்தை தக்கவைத்துக் கொள்ளும் வகையிலான தீர்வை அரசும் விரும்பாது.

இந்த நிலையில் பேச்சை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் இரு தரப்புக்கும் உண்டு.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு பேச்சை நடத்துவது தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதோடு சம்பந்தப்பட்டது.

தமிழ் மக்கள் ஜனாதிபதி சந்திரிக்கா மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு தாம் எதிராக செல்வது விவேகமல்ல என்ற ரீதியில் புலிகளும் பேச்சை மறுக்கமுடியாது.

இரு தரப்பும் உளப்பூர்வமாக அடிப்படை நம்பிக்கைகளோடு பேச்சை நடத்தினால் அமைதி திரும்பும்- நீடிக்கும்.

அதற்கு தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசைகள் தொடர்பான கோரிக்கைகள் குறித்து அரசின் நிலைப்பாடும் முக்கியமானது.


ஈழக் கோரிக்கையை கைவிட பிரபாகரன் உளப்பூர்வமாக முன்வரும் விடயமும் முக்கியமானது.

இரண்டும் இல்லாவிட்டால் இரு தரப்பும் ஒருவரை ஒருவர் அம்பலப்படுத்த முயலும் முயற்சியாக பேச்சுக்கள் முடிவடையலாம். அமைதி கனவாகிவிடும்.

அதைவிடுத்து அரசு வடக்குக்கு சீமெந்து அனுப்புவதை வைத்தோ அல்லது பிரபா எழுதும் கடிதத்தில் திருமதி சந்திரிக்கா குமாரதுங்கா மீது நம்பிக்கை இருப்பதாக ஒரு வரி இருப்பதை வைத்தோ எதிர்பார்ப்புக்களை வளர்க்க முடியாது.

ஏனெனில் இவை போன்ற காட்சிகள் முன்னரும் தோன்றி மறைந்தவைதான்.

www.padippakam.com







# பரிசீலிக்கப்பட வேண்டிய சமாதான முயற்சிகள்

பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ரோனி பால்ட்றி கடந்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். கொழும்பில் வெளிநாட்டமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட முக்கிய அரச பிரமுகர்களை திரு. பால்ட்றி சந்தித்ததுடன் வடக்கே வவுனியாவுக்கும் சென்று அங்குள்ள அகதிகள் முகாம்களைப் பார்வையிட்டிருந்தார்.

பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் பால்ட்றியின் இலங்கை விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இருக்கின்றது. ஏனெனில் இலங்கையின் நான்காவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவானதையடுத்து இலங்கைக்கு விஜயம் செய்த முதலாவது வெளிநாட்டுப் பிரமுகராகவே பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் பால்ட்றி விளங்குகின்றார்.

பிரிட்டிஷ் பாராளுமன்றம் உலக பாராளுமன்றங்கள் அனைத்தினதும் அன்னை என்று வர்ணிக்கப்படுமளவுக்கு ஜனநாயக மரபுகளைப் பேணிப் பாதுகாக்கும் ஒரு பழம்பெரும் அமைப்பாக இருந்து வருகின்றது.

இலங்கை, இந்தியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் பாராளுமன்ற ஆட்சிமுறையை அறிமுகப்படுத்தி

இன்றுவரை இந்நாடுகளில் ஜனநாயக மரபுகளை நிலைபெறச் செய்த பெருமை பிரிட்டிஷ் ஆட்சியாளர்களையே சாரும்.

காலனித்துவ ஆட்சியாளர்களாக ஆபிரிக்கா, தென் ஆசியா, தென்கிழக்காசியாவில் பிரிட்டிஷ்காரர்கள் பல்வேறு நாடுகளையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருக்கலாம். ஆனால் அவர்கள் வருகையாலும், ஆட்சி முறையினாலும் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார ரீதியிலான விழிப்புணர்வே உலக அரங்கில் தென் ஆசியா, தென்கிழக்காசிய, ஆபிரிக்க நாடுகள் பலவற்றை ஜனநாயக ரீதியிலான மரபுகளைப் பேணி நிற்கச்செய்பவையாக மாற்றியுள்ளது.

இலங்கை 1948ம் ஆண்டு சுதந்திரம் பெற்றதிலிருந்து 1978ம் ஆண்டுவரை பிரிட்டனின் வெஸ்ட் மினிஸ்டர் (West Minister) பாணியிலான பாராளுமன்ற ஆட்சிமுறையையே கொண்டிருந்தது.

பிரிட்டனின் பாராளுமன்ற ஆட்சியைத் தழுவியதாகக் காணப்பட்ட இலங்கையின் பாராளுமன்ற நடைமுறைகள் சமூகமான அரசியலுக்கு வழிவகுத்திருந்தது.

பாராளுமன்றமே நாட்டின் முக்கிய ஆட்சி அமைப்பாக விளங்கியது. ஆளுங்கட்சியினரைத் தட்டிக் கேட்க எதிர்க்கட்சியினர் இருந்தனர். ஆளுங்கட்சியினருக்குத் தலைமை தாங்கிய பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் பிரசன்னமாகி சகல பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கும் முகங்கொடுத்தார். ஆளுங்கட்சியினரின் குறை, நிறைகளையும் பிரதமமந்திரியின் நடவடிக்கைகளையும் நேரடியாகவே விமர்சிக்கும் வாய்ப்பை எதிர்க்கட்சியினர் பெற்றிருந்தனர்.

ஆனால் இத்தகைய பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு 1978ம் ஆண்டிலேயே ஆபத்து ஏற்பட்டிருந்தது. இலங்கைக்கு முற்றிலும் அந்நியமானதாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

எனவே 1978ம் ஆண்டிலிருந்து அமுலிலிருந்துவரும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை பாராளுமன்ற நடவடிக்கைகளை முற்றிலும் புறக்கணித்ததாகவே இருக்கின்றது.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினாலேயே அனைத்து ஆட்சியதிகார விடயங்களும் தீர்மானிக்கப்படுகின்றது. முப்படைகளுக்கும் அவரே பிரதம தளபதியாகவுள்ளார்.

பாராளுமன்றத்தைத் தங்கியிராது சுயமாக தமது விருப்பு, வெறுப்புகளுக்கேற்ற வகையில் நடந்து கொள்ளும் தன்மைகளைக் கொண்டவராகவே இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி காணப்படுகின்றது.

கடந்த மாதங்களில் நடந்து முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தல்,

## அரசியல் நடவடிக்கைகளை புலிகள் முன்னெடுக்க வேண்டும்

ஜனாதிபதித் தேர்தல் என்பனவற்றிலெல்லாம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையைப் பற்றியே அனைத்து அரசியல் கட்சிகளும் விமர்சித்திருந்தன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை இலங்கைக்குப் பொருந்தாததொன்று, பாராளுமன்ற ஆட்சிமுறையே மீண்டும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்றே ஆளுங்கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் தமது பிரசாரங்களில் குறிப்பிட்டு வந்தனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கடுமையாக விமர்சித்து, தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில்கூட அந்த ஆட்சிமுறையை அகற்றப்போவதாகத் தெரிவித்த பொதுஜன ஐக்கிய முன்னணியே தற்போது பாராளுமன்ற ஆட்சியையும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையையும் கொண்டிருக்கக் காணப்படுகின்றது.

ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார். அம்மகாநாட்டில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அகற்றுவது என்ற முடிவில் எதுவித தயக்கமும் காட்டப்படமாட்டாது என்று சந்திரிகா கூறியிருந்தார்.

"தேர்தல் பிரசாரங்களின்போது நாட்டுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் அடுத்த ஆண்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை இந்நாட்டிலிருந்தும் முற்றாக அகற்றிவிடப் போவதாக சந்திரிகா அழுத்தம், திருத்தமாகக் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் நீதி மற்றும் அரசியலமைப்பு ஆகியனவற்றுக்குப் பொறுப்பான அமைச்சராக இருக்கும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அகற்றுவது என்பதில் மிகஉறுதியாகவே இருக்கக்காணப்படுகின்றார்.


அடுத்த ஆண்டு ஜூலையில் புதிய அரசியல் அமைப்புக் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை இந்நாட்டிலிந்தும் நிராகரிக்கப்படும் என்று பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் அடுத்த ஆண்டு ஜூலை மாதம்வரை அதாவது அடுத்த எட்டுமாதங்கள் வரை திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஜனாதிபதியாகக் கடமையாற்றவுள்ளார்.

இந்த எட்டு மாதகாலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஜனாதிபதி ஆட்சியின் மூலமாக நாட்டில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகின்ற தென்றே முழு நாடுமே மிக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றது.

புதிய ஆட்சியாளர்களை நாட்டுமக்கள் பெருமளவில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதனையே நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

எனவே நாட்டு மக்களின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்யாத வகையிலேயே சந்திரிகா அரசு நடந்து



"அடுத்த ஆண்டு ஜூலையில் புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறை அகற்றப்படும்."

கொள்ளவேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வைக் காண்பது, நாட்டிலிருந்து ஜனாதிபதி ஆட்சிமுறையை அகற்றுவது போன்ற வாக்குறுதிகளையே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரதானமாகக் குறிப்பிட்டிருந்தது.

கடந்தகாலங்களில் மூன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் பதவியிலிருந்தனர். ஆனால் இந்த மூன்று ஆட்சியாளர்களும் வடக்கு-கிழக்கு நெருக்கடியை அரசியல் ரீதியாக கையாளுவதில் வெற்றிகொண்டிருக்கவில்லை.

தம்மிடமிருந்த முப்படைகளுக்குமான தளபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இராணுவ அணுகுமுறைகள் மூலமாகவே வடக்கு-கிழக்குப் பிரச்னையைக் கையாளுவதில் அவர்கள் ஆர்வங்காட்டியிருந்தனர்.

ஆனால் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள சந்திரிகா தாம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்கப்போவதாகக் கூறியுள்ள எட்டுமாதகாலத்தில் எத்தகைய விதத்தில் வடக்கு-கிழக்குப் பிரச்னையைக் கையாளப் போகின்றார் என்பதனையே முழு உலகமும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றது.

சந்திரிகாவின் தேர்தல் பிரசாரங்கள் அடிப்படை மனித உரிமைகளுக்கும், அடாவடித்தனமற்ற அரசியல் அணுகுமுறைகளுக்கும் முக்கியமளிப்பதாகவே அமைந்திருந்தன.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னையையும் மனிதாபிமான அடிப்படையில், இராணுவ அடக்கு முறைகளுக்கு இடமளிக்காத வகையிலேயே அவர் அணுகுவார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கே வவுனியா மற்றும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற வாக்களிப்பில் 90 சதவீதம் சந்திரிகாவுக்கே வெற்றி கிட்டியிருந்தது.

அத்துடன் கிழக்கிலும் அவருக்கு 85 வீதமான வாக்குகள் கிடைத்தன. வடக்கிலும், கிழக்கிலும் சந்திரிகாவுக்குக் கிடைத்த பெருமளவிலான இவ்வெற்றிகள் வடக்கு-கிழக்கு மக்கள் சந்திரிகா மீது கொண்டுள்ள விசுவாசத்தையும், அவரிடமிருந்து அரசியல் ரீதியாக நிறையவே எதிர்பார்ப்பதையுமே உணர்த்துவனவாக இருக்கின்றன.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் கடந்த 17 வருடங்களாக கொடிய யுத்தத்தின் கெடுபிடிகளால் நொந்து துவண்டு போயுள்ளன.

அப்பிரதேச மக்கள் கடந்த காலங்களில் தாம்பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் விடிவு கிட்டக்கூடியவகையில் ஒரு நிரந்தர சமாதானமும், கௌரவமான அரசியல் தீர்வும் கிட்ட வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றனர்.

சந்திரிகா பிரதம மந்திரியாகத் தெரிவானதும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நல்லுறவுகளை வளர்த்துக்கொள்வதில் ஆர்வம் காட்டியிருந்தார்.

முன்னைய ஆட்சியாளர்களால் வடபகுதி மீது போடப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தி அரசியல் ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகளை அணுகுவதில் சந்திரிகா ஆர்வங்காட்டியிருந்தார்.

ஆயினும் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான நல்லெண்ண அணுகுமுறைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கவிருந்த தறுவாயிலேயே கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கவின் ஜனாதிபதித் தேர்தல்வேட்பாளருமான திரு. காமினி திசநாயக்கா குண்டு வெடிப்பொன்றில் கொலையுண்டிருந்தார்.

இக்குண்டுவெடிப்பு சந்திரிகா அரசின் சமாதான முயற்சிகளைப் பெரிதும் உலுப்பி விட்டிருந்தது. அத்துடன் எதிர்கால சமாதான நடவடிக்கைகள் குறித்தும் ஒரு நிச்சயமற்ற தன்மையை இக்குண்டு வெடிப்பு உருவாக்கியுள்ளதாகக் காணப்படுகின்றது.

சந்திரிகாவைப் பொறுத்தவரையில் அவர் தற்போது நாட்டில் ஒரு பலம்பொருந்திய ஆட்சியாளராகவே இருக்கின்றார். பிரதமராக இருந்தபோது காணப்பட்ட அதிகாரங்களைவிட, பன்மடங்கு கூடுதல் அதிகாரங்கள் தற்போது ஜனாதிபதியாக இருக்கும் சந்திரிகாவிடம் காணப்படுகின்றது.

இந்நிலையில் சந்திரிகாவின் சமாதானம் குறித்த எதிர்கால அணுகுமுறைகள் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் சார்ந்ததாகவோ அல்லது அதிலிருந்தும் வேறுபட்டதாகவா? இருக்குமென்பதே நாட்டில் நிலவும் பிரதான கேள்வியாக இருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையென்பது முற்றிலும் ஒரு சர்வாதிகாரத்துக்கான இராணுவ ரீதியிலான பலத்தைக்கொண்டது என்ற வகையிலேயே கடந்த காலங்களில் காணப்பட்டது.

எனவே எதிர்காலத்தில் சந்திரிகாவும் நிறைவேற்று ஆட்சிமுறையிலுள்ள தன்னிச்சையான அணுமுறைகளைக் கையாண்டு வடக்கு-கிழக்குப் பிரச்னையை அணுகமுற்படுவாரேயானால், அவருக்கும் முன்பிருந்த ஆட்சியாளர்களுக்குமிடையே எதுவித வித்தியாசமும் இல்லாத தன்மையே காணப்படும்.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா தமது நிறைவேற்று அதிகாரங்களை முற்று முழுதான அரசியல் நடவடிக்கைகள் சார்ந்ததாக மாற்றி ஜனநாயக ரீதியிலான தீர்வு முயற்சிகளுக்கே வழிவகுக்க வேண்டியவராக இருக்கின்றார்.

ஜனாதிபதி சந்திரிகா ஜனநாயக அரசியல் அணுகுமுறைகளில் இறங்கி தமது சமரச முயற்சிகளை மேற்கொள்ளும்போது, மறுபுறத்தே தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசியல் ரீதியாகவே தமது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

இராணுவ ரீதியாக வெற்றிகரமாக இயங்கமுடியுமென்பதனையும், எத்தகைய இராணுவ அச்சுறுத்தல்களுக்கும் துணிச்சலாக முகங்கொடுக்க முடியுமென்பதனையுமே கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிரூபித்திருந்தனர்.

புதிய சமரச முயற்சிகளை எத்தகைய கோணத்தில் ஆரம்பிக்கலாமென சந்திரிகா அரசு தற்போது பரிசீலித்து வரும் தறுவாயில், தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசியல் ரீதியாக தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமானதாகும்.

இதன்மூலமே இரு தரப்பினரும் 'யுத்த எண்ணங்களுக்கு' இடந்தராது தூய சமரச யோசனைகளுக்கு இடமளித்து அரசியல் அணுகுமுறைகளை அர்த்தமுள்ளவையாக்கிக் கொள்ளமுடியும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மருத்துவ ✚ விந்தைகள்

## உங்களுக்கு உகந்த பழங்கள்!

## அழகு+ ஆரோக்கியம்

**ப**ழவகைகள், பெரும்பாலும் பலதரப்பட்ட நோய்கள் உடலில் ஒட்டா வண்ணம் பாதுகாக்கின்றன. நமது நாட்டுத் தட்ப வெப்ப நிலையில் உற்பத்தி யாகாத சில பழங்கள் குளிர்ந்த பிரதேசங் களில் வெகுவாகப் பயிரிடப்படுகின்றன. இத்தகைய சில பழங்களுடன் நமது நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் ஆனை வாழைப்பழம் மற்றும் பூசனி வகையைச் சேர்ந்த முலாம்பழம் ஆகிய பழங்களின் நோய் தடுப்புக் குணங்களையும் மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்து கூறியுள்ளனர்.

சில பழங்களையும் அவை தரும் குணங்களையும் இங்கே தருகிறோம்:

**ஆப்பிள்:** 'ஒரு நாளுக்கு ஓர் ஆப்பிள் வீதம் உண்டு வந்தால் மருத்துவர் நம்மை நெருங்க வேண்டிய அவசியமே இல்லை' என்ற கருத்தில் ஆங்கிலப் பழமொழி ஒன்றுண்டு.

ஆப்பிள் பழம் நார்ச்சத்து நிரம்பக் கொண்டது. கொழுப்பற்றது மட்டுமல்லா மல் ஏற்கனவே உடலில் சேர்ந்துவிட்ட கொழுப்பையும் கரைக்க வல்லதும்கூட. மூப்படைவதால் உடலில் தோன்றும் சுருக்கங்களை அகற்றும் சக்திவாய்ந்த அமிலங்களும் ஆப்பிளில் பொதிந்திருக் கின்றன. சருமம் வரண்டு போவதையும் ஆப்பிள் தடுக்கிறது.

புற்றுநோய் தோன்றுவதற்கான சில கிருமிகளையும், ஆப்பிளில் காணப்படும் நார்ச்சத்து அழித்துவிடும் தன்மை கொண்டது என்று விஞ்ஞானிகள் கண்டுள்ளனர்.

**முலாம்பழம்:** இது பூசனி வகையைச் சேர்ந்தது. தோல் பச்சையாகவும் உட்பாகம் சிவப்பாகவும் காணப்படும். கோடை காலத்தில் மட்டும் இப்பழங்கள் சந்தையில் தலைகாட்டும். தாகம் தீர்ப்பதற்குச் சிறந்த பழம் இது.

மார்ச் சளி போன்ற உபாதைகளையும் மூச்சுத் திணறல் போன்ற சிக்கல்களையும் தீர்க்கும். பெண்களுக்கு ஏற்படும் மாரடைப் பினை 50 சதவிகிதம் தீர்க்க வல்லது. பொதுவாக மாரடைப்புக்கு அருமருந்தாகக் கணிக்கப்படுகிறது. வயிறு மற்றும் வாயில் ஏற்படும் புற்றுநோய்களையும் கண்டிக்கும் அம்சங்கள் இப்பழங்களில் காணப்படு கின்றன.

**வெள்ளரிக்காயிலும் இத்தகைய மருத்துவக் குணங்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

**கொடி முந்திரிப் பழங்கள்:** இப்பழத்தின் சாறு நாடி நரம்புகளில் சேரும் கொழுப்பைக் கரைக்கும் தன்மை யினை உடையது. இதனால் இருதயக் கோளாறுகளோ மாரடைப்போ வருவது தவிர்க்கப்படுகிறது. கலோரியின் அளவு குறைந்த இப்பழங்களிலுள்ள சில அமிலங் கள் எலும்புகளில் ஏற்படும் சிதைவுகளையும் தவிர்க்கவல்லன. உறுப்புக்கள் ஊனமடை வதையும் கொடி முந்திரிப் பழங்கள் கட்டுப்படுத்த வல்லன.

**ஒரேஞ்ச் பழம்:** ஒரேஞ்ச் பழம் என்றால் நம் நாட்டிலுள்ள தோடம்பழங்க ளையே நாம் எண்ணுகிறோம். பிறநாடுகளி லிருந்து இறக்குமதியாகும் செம்மை கலந்த மஞ்சள் பழங்களுக்கும் நம் நாட்டுத் தோடம் பழங்களுக்கும் தோற்றத்திலும் வர்ணத்திலும் குணத்திலும் அதிக வேறுபாடுகள் இருப்பி னும் இரு வகைப் பழங்களிலும் விட்டமின் 'சி' அதிகம் காணப்படுகிறது. உடலில் நீர்த்தன்மை வற்றி வறட்சி ஏற்படும் காலங் களில் இதனை ஈடுசெய்ய ஒரேஞ்ச் பழம் பெரிதும் உதவுகிறது. தினசரி நான்கு பழங்கள் உண்டு வந்தால் உயர் இரத்த அழுத்தம் குறைந்து விடும். இவற்றின் சுளைகளில் புற்றுநோய்த் தடுப்புக்கான அம்சங்களும் காணப்படுகின்றன.

**ஆனை வாழைப்பழம்:** நம் நாட்டில் உற்பத்தியாகும் கதலி மற்றும் இதரை வாழைப்பழங்கள் பல மருத்துவச் சிறப்பு களைக் கொண்டுள்ளன. ஆனை வாழைப் பழத்தில் பொதிந்துள்ள குணங்களையே நாம் இங்கு தருகிறோம்.

குறைந்த கொழுப்புடையதும் பொட் டாசிய சத்து அதிகம் செறிந்துள்ளதுமான இப்பழங்கள் இரத்த நாளங்களையும் நாடிகளையும் செம்மையாக வைத்திருக்க உதவுகின்றன. நாளொன்றுக்கு ஒருபழம் வீதம் சாப்பிட்டாலே போதுமானது. இப்பழங்களில் மக்னீசியமும் அதிகமாகக் காணப்படுகின்றன. இருதயத்தை உறுதி யுடன் வைத்திருக்கவும் எலும்புகளைப் பாதுகாப்பதற்கும் மக்னீசியம் உதவுகிறது.

**செந்நாவல் அல்லது ஸ்ட்ரோ-பெரிஸ்:** இப்பழங்கள் நம்நாட்டில் கிடைப்பதில்லை. இருப்பினும் மணற் செறிவான நமது பகுதிகளில் காணப்படும் நாவற் பழங்களில் காணப்படுவதாகக் கூறப்படும் சத்துக்கள் செந்நாவற் பழங்களிலும் காணப்படுகின்றன.

நார்ச்சத்து இப்பழங்களில் போதிய அளவு காணப்படுகின்றன. ஈரல் மற்றும் நுரையீரல் ஆகியவற்றில் புற்றுநோய்க் கிருமிகள் ஒட்டாமல் பாதுகாக்கும் தன்மை இப்பழங்களுக்குண்டு. ஆய்கூடங்களில் சில பிராணிகளை வைத்து ஆராய்ந்ததில், புற்றுநோய் தடுப்பில் செந்நாவற் பழங்க ளின் சாறு நல்ல பலனைத் தந்துள்ளதாக ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். மனிதர்களை வைத்துப் பரிசோதனைகள் தொடர்வ தாகவும் கூறப்படுகிறது. ■



எரிக்கா அன்டர்சன் காகிதமலைமீனுள்-13 வருடத்துள் வந்தவை 33,800

நட்பில் சாதனை

# வலித்தது கரம்! இனித்தது மனம்!!

# உண்ண மறப்பதுண்டு; எழுத மறப்பதில்லை

**பே**னா நண்பர்கள் உலகெங்கும் இருக்கிறார்கள்.

நியூஸிலாந்திலும் இருக்கிறார்கள். ஆனால் அந்த நியூஸிலாந்தில் உள்ள எரிக்கா அன்டர்சன் என்னும் பெண்மணி பேனா நண்பி மட்டுமல்ல, பேனா நட்பில் சாதனையும் படைத்திருக்கிறார்.

ஆரம்பத்தில் பொழுது போக்காகத்தான் ஆரம்பித்தார். போகப் போக பேனா நட்பு தொடர்பு என்பது சுவாசிப்பது மாதிரியான அத்தியாவசிய காரியமாகிவிட்டது.

13 வருடங்களுக்கு முன்னர் பேனா நண்பர்கள் தொடர்பை ஆரம்பித்தவர் எரிக்கா அன்டார்சன்.

அப்போது திருமணமாகவில்லை. இப்போது திருமணமாகி இரண்டு குழந்தைகள். அரோன் 7 வயது. தம்மிராவுக்கு 5 வயது.

குழந்தைகளை கவனிக்க வேண்டும். கணவருக்கு உதவ வேண்டும். அது தவிர வயோதிப அம்மாவை பராமரிக்கும் கடமையும் உண்டு.

இதில் எதனையும் புறக்கணிக்காமல், முகம் சுளிக்காமல் செய்துவிட்டு பேனா நண்பர்களுக்கு (நண்பிகளும் உள் அடக்கம்) கடிதம் எழுத அமர்ந்துவிடுவார்.

சொன்னால் நம்பமாட்டீர்கள். தினமும் 278 கடிதங்கள் எழுதியே தீரும் சபதம்.

75 நாடுகளில் அவரது பேனா நண்பர்கள் இருக்கிறார்கள்.

ஜெர்மனி, ஜப்பான், பொலிவியா, சவூதி அரேபியா மற்றும் தென் ஆபிரிக்கா என்று பேனா நண்பர்கள் உள்ள நாடுகளின் பட்டியல் நீளுகிறது.

எரிக்காவின் பேனா நண்பர்களில் எல்லோரும் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது பதில் போடுகிறார்கள்.

எரிக்காவின் முதல் கடிதம் இந்தியாவில் பம்பாயில் உள்ள 13 வயதான மாணவிக்கு எழுதப்பட்டது.

சகல தொடர்புகளும் ஆங்கிலத்தில்தான். கடந்த 13 வருடங்களில் எரிக்கா அன்டர்சனிடம் வந்து சேர்ந்துள்ள கடிதங்கள்,

33 ஆயிரத்து எண்நூறு!

நிறுத்துப் பார்த்தால் ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து தொன் வரும்.

உலக சாதனைச் செய்திகள் இடம்பெறும் 'கின்னஸ்' புத்தகத்தில் எரிக்காவின் பெயரும் விரைவில் குறிக்கப்படப்போகிறது.

"எழுதுவது, எனக்கு வரும் கடிதங்களை படிப்பது மனதுக்கு நிறைவு தருகிறது" என்று பூரிப்போடு சொல்கிறார் எரிக்கா.

"உலகெங்கும் 300 பேனா நண்பர்கள் எனக்கிருப்பதை நினைக்கும்போது தினசரி எழுதுவது சலிப்பாக இல்லை. இனிப்பாக இருக்கிறது" என்று எரிக்கா சொல்லும் போது முகத்தில் பொய் இல்லை.

"அது சரி, 13 வருட பேனா நட்புத் தொடர்பில் கசப்பான, தித்திப்பான அனுப வங்கள்.....?

கேட்டவுடன் வருகிறது பதில்: "இல்லா மல்....? ஜெர்மனில் உள்ள வாலிபர் ஒருவர் எடுத்த எடுப்பிலேயே காதல் வசனங்களை எழுதி உருகியிருந்தார்.

**"எரிக்கா! உன் கையெழுத்தில் ஆரம் பித்த உறவு மண ஒப்பந்தத்தில் முடியு மானால் மகிழ்வேன்.**

**"டியர்! தினம் எழுது. கண்ணால் உன்னை காணாவிட்டாலும் கையெழுத்தை காணும் திருப்தியாவது மிஞ்சட்டுமேன்.**

**"எரிக்கா! உனக்கும் தெரியுமா? தினமும் காலையில் நான் கண் விழிப்பதே உன் கையெழுத்தில்தான்.'**

இப்படி ஒரே புலம்பல். "நட்பு என்பது உயர்வானது. கண்ணியமானது. மேலும் உனது கோரிக்கையையும் என்னால் ஏற்க முடியாது." என்று பதில் போட்டேன். அதன் பின்னர் அந்த இளைஞர் மன்னிப்புக் கேட்டு ஒரு கடிதம் போட்டார். அதன்பின்னர் அவர் கடிதங்களை காணவில்லை" என்கிறார் எரிக்கா.

"சபல புத்தியோடு பேனா நட்பை பயன்படுத்துவோர் இதன் உயர்ந்த நோக்கத் தையே களங்கம் செய்கிறார்கள்.

"முன்னர் பின்னர் தெரியாத முகமறியாக பெண்ணுக்கோ ஆணுக்கோ காதல் கடிதம் எழுதி உருகுவோர் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? நிச்சயமாக 'சபலிஸ்டுக்கள்'தான்" என்று சொல்லி சிரிக்கிறார் எரிக்கா.

"தினமும் எத்தனை மணி நேரம் எழுதுகிறீர்கள் எரிக்கா?"

"ஆக, ஆறு மணிநேரம்!"

ஆறு பேருக்கு தினம் கடிதம் எழுதினாலே நமக்கு கை வலிக்கும். எரிக்கா ஆறு மணிநேரம் எழுதுகிறார். அதுவும் 278 பேருக்கு. கைகொடுக்கலாம். கை குலுக்கும் நேரத்தில் அவர் ஒரு கடிதம் எழுதிவிடுவார். ஏன் இடையூறு?

'கின்னஸ்' புத்தகமே கவனி எரிக்காவை!


கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ்

# சாவதைக்காண ஆசைப்பட்ட பெண்!



ஜுவெல் கோர்னெல்

"நான் இரசிக்க வேண்டுமானால் நீ சாகவேண்டும்"



சிறுவன் லீ

"**எ**னது 4 வயதுக் குழந்தையைச் சித்திரவதை செய்து துடிதுடிக்கக் கொன்ற கொலைகாரன் தூக்குக்கயிறில் தொங்கி இறுதி மூச்சினை விடுவதை என் கண்களால் பார்த்தேன். என் குழந்தை எவ்வாறு துடிதுடித்துச் செத்துப் போனானோ அதேபோன்று அந்தக் கொலை காரனும் சாவதைக் கண்டு எனக்கு பெரு மகிழ்ச்சியே ஏற்பட்டது."

இவ்வாறு ஒரேகன் மாநிலம்- போட் லாண்ட் நகரைச் சேர்ந்த ஜுவெல் கோர்னெல் என்ற பெண்மணி கூறினாள். மூன்று வருடங்களாக தன் உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்த பெரும்பழி உணர்வு இப்போதுதான் தீர்ந்து, தனக்கு நிம்மதி ஏற்பட்டிருப்பதாக அவள் தெரிவித்தாள். ஜுவெல்லின் 4 வயதுச் சிறுவன் லீ என்பவனை 3 வருடங்களுக்கு முன்னர் அலன் டொட் என்பவன் கடத் திச் சென்று மூன்று நாட்கள் சித்திரவதை செய்த பின்னர் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டு, உடலை ஒரு கழிவறையில் கட்டித் தொங்கவிட்டுள்ளான். இதே போன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மேலும் 3 சிறுவர்களை டொட் கொலை செய்திருக்கிறான்.

டொட், 4 சிறுவர்களை சித்திரவதை செய்து கொன்றுள்ளான் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்ததை வைத்து நீதி விசாரணைகள் நடைபெற்றன. குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து டொட் டுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

குழந்தைகளை இழந்த பெற்றார். டொட் தூக்குக் கயிறில் தொங்கி உயிர் விடுவதைத் தாங்களும் பார்க்கவேண்டும் என்று கோரியமையினால் அவர்களுக்கு தண் டனை நிறைவேற்றப்படுவதைப் பார்ப்பதற் கான அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் லீயின் தாய் ஜுவெல் மட்டுமே கொலை கூடம் சென்றுள்ளார்.

வாஷிங்டன் மாநிலத்திலுள்ள வல்லா வல்லா என்ற இடத்திலுள்ள சிறைச்சாலை யில்தான் டொட்டுக்கான மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இத்தண்டனை நிறை வேற்றப்பட்ட கட்டடம் இரு பிரிவுகளைக் கொண்டதாகும்.

தூக்கிலிடப்படும் அறையின் ஒரு பகுதி கண்ணாடியால் பிரிக்கப்பட்டிருந்தது. இப்பக்கம் இருந்து உள்ளே நடப்பவற்றை பார்க்க முடியும்.

ஜுவெல்லை டொட், அந்த வேளை யிலும் கண்டு கொண்டான். தன்னை மன்னித்துவிடுமாறு அங்கிருந்த அதிகாரி கள் மூலமாக ஜுவெல்லைக் கேட்டுக் கொண்டான். ஆனால் ஜுவெல் அதற்கு இசைவளிக்காமல் மேலும் கடுமையா னாள். "அவனுடைய உயிர் பிரிவதைப் பார்த்தால்தான் என் மனம் ஆறுதலடை யும்" என்று கூறினாள்.



கொலையாளி அலன் டொட் தூக்கிலிடப்பட்ட அறை. அருகே அவதானிப்பு கூடம்

உரிய நேரம் வந்ததும் டொட்டின் முகத்தை மூடும் கவசத்துடன் பருமனான தூக்கு வளையமும் அவனுடைய கழுத்தில் மாட்டப்பட்டது.

அவனுடைய கால் பதித்திருந்த உலோகத்தரை விலகியதும் டொட்டின் உடல் அந்தரத்தில் தொங்கியது. சில நொடிகள் மட்டும் அவனுடைய உடல் துடித்து பின்னர் அமைதி கண்டது.

இத்தண்டனையை நேரடியாகப் பார்த்தபின்னர் வெளியே வந்த ஜுவெல் லின் முகத்தில் பெருமகிழ்ச்சி தென்பட் டது. பெரும் திருப்தி கண்டவளைப் போன்று சிரித்து மகிழ்ந்தாள். ●

# தகவல் பெட்டி

## எங்கே அவள்? தேடுகிறார் தேவதையை!

தமிழ் நாட்டில் அதிஷ்ட லாபச்சீட்டு விற்று வயிற்றுப் பாட்டைக் கவனித்து வருகிறார் முருகன்.

மூன்றடி முருகனுக்கு சில பிச்சைக்காரர்கள் ஆலோசனை சொன்னார்கள்.

"ஏம்பா இப்படி அலையறே? நம்மகூட வந்து கோயில், குளம் பக்கம் உட்கார்ந்தேயானா சம்பாதிக்கலாம்!"

"அட போங்கடா" என்று விட்டார் முருகன். சூம்பிப் போன கால்களோடு சூம்பிப் போகாத மனவலிமையோடு லாட்டரி சீட்டு விற்பனையில் இறங்கிவிட்டார்.

முருகனை நம்பி அவரது அக்கா லட்சுமி கல்யாண வயதில் இருக்கிறார். "கஷ்டப்பட்டு உழைத்து அவளை கரைசேர்ப்பேன்" என்று முருகன் கூறுவதில் தன்னம்பிக்கை பளிச்! பளிச்!

எல்லாம் ஓ.கே. முருகனுக்கு எப்போ கல்யாணம்? சிரிக்கிறார். அது வெட்க 'மார்க்' சிரிப்பு!

"எனக்கென்று ஒருத்தி பிறக்காமலா போயிருப்பாள். என்னைப் புரிந்துகொண்டு என்னுடன் வாழப்போகும் அவள் யார் என்று தேடிக் கொண்டிருக்கிறேன்."

என்கிறார் முருகன். முருகன் தேடும் அந்த தேவதை கிடைப்பாளாக!





## சூப்பர் :: போட்டோ

காட்டு யானை வேட்டையாடவும் 'ஹெலி'யின் உதவி தேவைப்பட்டுவிட்டது. 'ஹெலி'யிலிருந்து குதிக்கும் காளை ஸம்பியா நாட்டின் காட்டிலாகா அதிகாரி. ஸம்பியா காட்டுப்பகுதியில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சி இது.

# குள்ளர் ஸ்பெசல்

## "நீதானே எனக்கு மணவாட்டி!"

## காதல் ஓ.கே-ஆனாலும் சோகம்!

**உலகப் புகழ் பெற்ற 'கோள்களின் போர்கள்' (ஸ்டார் வோர்ஸ்) என்ற திரைப்படத்தின் இயக்குநர் ஜோர்ஜ் லூக்காஸ், குள்ள நடிகர்களை வைத்து ஒரு திரைப்படத்தை தயாரித்து வந்தார். அவருடைய தேடலில் கிடைத்தவர்தான் வோர்விக் டேவிஸ். இவருடைய உயரம் 3 அடி 4 அங்குலம்.**

வோர்விக் பல திரைப்படங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்துப் பெரும்புகழும் பணமும் திரட்டியவர். 1991ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'வில்லோ' என்ற படம் வோர்விக்குக்கு மிகச் சிறந்த பாராட்டுக்களைத் தேடித்தந்தது.

தான் குள்ளமாக இருப்பதனால் தனக்கு ஒரு குடும்பம் அமையப் போவதில்லை என்று மனம் வருந்திய போதும் தனக்கேற்ற ஒரு வாழ்க்கைத்துணையினை அவர் தேடிக் கொண்டே இருந்தார்.

'வில்லோ' என்ற படத்தில் நடிப்பதற்காக ஐரோப்பா முழுவதிலுமிருந்து 200க்கும் அதிகமான குள்ள நடிக நடிகைகள் கொண்டு வரப்பட்டனர். ஆனால் அந்த நடிகைகளில் எவரும் வோர்விக்கின் மனதில் இடம் பிடிக்கத் தவறிவிட்டனர். இதனால் தன் மனத்தளவில் அவர் துயரடைந்தார்.



ஒரு தடவை இங்கிலாந்து சென்று ஒரு மேடை நாடகத்தில் பங்கெடுத்தார். இங்கிலாந்தையே பிறப்பிடமாகக் கொண்ட சமந்தா என்ற குள்ள நடிகையும் இதே நாடகத்தில் நடித்தார். இவ்விருவரும் கண்டதும் காதல் கொண்டனர். விரைவில் திருமணமும் சிறப்பாக நடைபெற்றது.

சில மாதங்களில் சமந்தாவிடம் தாய்மைக்கான அறிகுறிகள் தென்பட்டன. தங்களைப் போன்று குள்ள உருவில் குழந்தை பிறக்கக் கூடாது என்று பிரார்த்தித்தனர். பின்னர் எத்தகைய நிலையில் குழந்தை பிறந்தாலும் பரவாயில்லை- தங்களுக்கு ஒரு குழந்தை கிடைத்தால் மட்டும் போதும் என்று தங்களைத் தேற்றிக் கொண்டனர்.



குழந்தை பிறந்தது. தம்பதியினர் மகிழ்ந்தனர். மகிழ்ச்சி நீடிக்கவில்லை. பிறந்து ஒன்பதாவது மாதம் அக் குழந்தை இறந்துவிட்டது.

குழந்தை இறந்த துக்கத்தை தம்பதியினர் தாங்கிக் கொள்ளமுடியாமல் தவித்தனர். வோர்விக் தற்கொலை செய்யவும் பல தடவை முயற்சித்திருக்கிறார். கவலையில் உணவு உட்கொள்ளாமலே பல நாட்களைத் தம்பதியினர் கழித்துள்ளனர்.

உயரக் குறைவால் ஏற்படாத சோகம் குழந்தை இழப்பால் சூழ்ந்துவிட்டதுதான் பரிதாபம்.

சில மாதங்கள் படப்பிடிப்புக்குப் போகாமலே இருந்த வோர்விக்கை திரைப்படத் தயாரிப்பாளர்கள் சமாதானப்படுத்தி படப்பிடிப்பிற்கான இடத்துக்கு அழைத்துச் செல்லவே பெரும்பாடாகிவிட்டது. தனது மனைவியையும் தனித்திருக்க விடாமல் தன்னுடன் அழைத்துச் சென்று படத்தை முடித்துக் கொடுத்துள்ளார். ●

## உயரம் எப்படி உபயோகிக்கும் பொருட்களும் அப்படி!

பில்லி பாட்டி என்ற ஹொலிவுட்டின் பிரபல குள்ள நடிகர் பல படங்களில் நடித்து பணமும் புகழும் சேர்த்தவர். இவருடைய உயரம் 3அடி 9 அங்குலம்தான். கலிபோனியாவில் இவர் தனக்கென ஒரு அழகான வீட்டைக் கட்டிக் கொண்டு குடியேறினார். இவருடைய மனைவி ஷேர்லியும் ஒரு குள்ளப் பெண்தான். குள்ளத் தம்பதி என்பதனால் இவர்கள் கட்டிய வீடும் சிறிய வீடல்ல. சாதாரண அளவிலான வீடுதான். ஆனால் இத்தம்பதியினரின் பாவனைக்கான தளபாடங்கள்தான் உயரம் குறைக்கப்பட்டு, இவர்களது வசதிக்கேற்ப அமைக்கப்பட்டன. மேசை, நாற்காலிகள், கட்டில் மற்றும் சமையலறையிலுள்ள அடுப்பு, தண்ணீர்த் தொட்டி போன்றவை உயரத்தில் குறைவாகவே அமைக்கப்பட்டுள்ளன. யன்னல் போன்றவையும், பில்லி தம்பதியினர்



தங்களைச் சுற்றியுள்ள வனப்புகளைப் பார்த்து இரசிப்பதற்கேற்ற வகையில் அமைக்கப் பட்டுள்ளன. வாயிற் கதவுகள் சாதாரண உயரத்திலேயே இருந்தபோதும் அவற்றுக்கான பூட்டுகள் தம்பதியினரின் வசதிக்கேற்ப பதிவாகவே வைக்கப்பட்டுள்ளன. பில்லிக்கு இப்பொழுது 69 வயதாகிறது. இத்தம்பதியினரின் மகன் பார்டன். இவனுக்கு வயது 25. இவனுடைய உயரம் 6 அடியாகும். ஆனால் இவர்களுடைய பெண் லோறி, பெற்றாரைப் போலவே குள்ளமாகவே இருக்கிறாள். இவளுக்கு 30 வயதாகிறது. உயரத்தில் குறைபாடு இருந்தபோதிலும் இக்குடும்பத்தில் வேறு எக்குறையும் இல்லை. எப்பொழுதும் மகிழ்ச்சியுடனேயே உள்ளனர். இதற்கு பில்லியின் நகைச்சுவையே காரணம் என்று கூறப்படுகிறது. எத்தகைய பிரச்சனையையும் சிரித்து மழுப்புவதுடன் ஏனையோரையும் சிரிப்பிலாழ்த்திச் சமாளித்துவிடுவார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## அழகுக் குறிப்பு

# புருவ இரகசியம்

கண்களை அழகு செய்வது புருவம். கண்ணுக்கு புருவம் அழகு.

புருவங்கள் இரண்டும் சம நீளமாக இருக்க வேண்டும். நடுவில் ஒன்று சேரக்கூடாது. வெளி நுனிகளில் அவை குறுகி இருக்க வேண்டும்.

புருவ உரோமங்கள் மிருதுவாகவும், கடுமையாகவும் இருக்கவேண்டும். வெளி நுனி நோக்கி உரோமங்கள் படிந்திருக்கவும் வேண்டும்.

புருவத்தை அதன் விருப்பப்படியே வளர விட்டு விடுங்கள்.

வெட்டி வேறு வடிவம் கொடுத்தால் முகத்தின் அமைப்பு பின்னால் மாறும்போது புருவ அமைப்பு அதற்கு பொருந்தாமல் போய்விடும்.

மூக்கிலிருந்து கண் ஓரம் வழியே நெற்றிக்கு ஒரு கோடு இடுங்கள். அங்கேதான் புருவத்தின் வெளி நுனி முடியவேண்டும்.

புருவத்தின் வெளி நுனி உள் நுனியைவிட தாழ்வாக இருக்கக்கூடாது.

புருவ ஜோடிக்கு இடையே உரோமம் வளர்ந்திருந்தால் சிலர் அதைப் பிடுங்கி எறிவார்கள்.

அதனால் உரோமம் பிடுங்கப்பட்ட சருமக் குழியில் கிருமிகள் தங்கி கெடுதி செய்ய வாய்ப்புண்டு.

புருவத்தை அழகு செய்ய பென்சில் வர்ணத்தை தீட்டுதலே நல்லது. புருவத்தை குறுக்க வெண்டுமானால் உரோமங்களை சேர்த்து சீவுவது நல்லது.

புருவம் வளர்ச்சி குன்றியிருந்தால் தினமும் இரவில் சிறிது விளக்கெண்ணெயை புருவம் மீது தடவி விடுங்கள். சில மாதங்கள் செல்லப் பயன்தெரியும்.

சிலர் வெட்டி விட்டால் புருவம் அதிகம் வளரும் என்று நினைக்கிறார்கள். அது தவறு. நினைப்பது மாதிரியெல்லாம் புருவம் வளரமாட்டாது.

### புருவமும் குணமும்

புருவம் பற்றி சாமுத்திரிகா இலட்சணம் சொல்வதைப் பார்ப்போம்:

தடித்த உரோமங்கள் இருந்தால் பலசாலியாக இருப்பார்கள்.

அதீத தடிப்பாக இருந்தாலோ சுருண்டு இருந்தாலோ, நடுவில் வெளி விட்டிருந் தாலோ ஏழ்மையாகிவிடுவார்கள்.

புருவம் சிறிதாக இருப்பவர் சகிப்புத் தன்மை கொண்டவர்களாக இருப்பார்கள்.


உரோமங்கள் கீழ் நோக்கித் தொங்கியிருந் தால் உடல்நிலை பாதிக்கும்.

சாமுத்திரிகா இலட்சணம் கூறுவதெல் லாம் நூற்றுக்கு நூறு சரியான முடிவுகளல்ல என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும்.

## நீங்களும் செய்து பாருங்கள்

### கிறிஸ்மஸ் பிளவர்

எஸ்-எஸ்



**தேவையான பொருட்கள்:**

சிவப்புநிற ஸ்ரொக்கிநெற் பெரிது 1
தங்க நிறக் கம்பி 18
பச்சைநிற ஸ்ரொக்கிநெற் பெரிது 1
மகரந்தம் பெரிய அளவில் உள்ளது ஒரு கட்டு
கம்ரேப் (ஒட்டுவதற்கு)
கட்டுக்கம்பி
நூல்
பெரிய தங்கநிற இலை 3

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**

பெரிய பூ
12 அங்குல அளவில் 15 துண்டுகள்
இலைகள்
10 அங்குல அளவில் 5 துண்டுகள்

**செய்முறை:**

12 அங்குல அளவிலான தங்கநிறக் கம்பியை எடுத்து இரு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கி படம் 1ன் உருவத்திற்கு அமைய நெளிவுகளை அமைத்துக்கொள்ளவும். இவ்வாறு ஏனைய இதழ்களுக்கான கம்பிகளையும் அமைத்துக் கொள்ளவும்.


கம்பியினால் அமைக்கப்பட்ட இதழ்க ளுக்கு சிவப்பு நிற ஸ்ரொக்கிநெற் போட்டு கட்டவும். இவ்வாறு கட்டிய இதழ்களை தனியே எடுத்துக் கொள்ளவும். பெரிய மகரந்தத்தில் 3 நெட்டுகளை எடுத்து கட்டுக் கம்பியில் வைத்துக்கட்டவும். அதனைக் கட்டியபின்னர் இதழின் ஒன்றை மகரந்தத் தின் கீழ் வைத்து நூலினால் கட்டவும். இவ்வாறு ஏனைய நான்கு இதழ்களையும் அருகருகே வைத்துக்கட்டிக் கொள்ளவும். இதனைப்போன்று அடுத்து இரு பூக்களை யும் அமைக்குக.

**இலையினைச் செய்யும் முறை:**

10 அங்குல அளவிலான கம்பிகளை எடுத்து படம் 2ன் படி நெளிவுகளை அமைத்துக்கொள்ளவும். அவ்வாறு அமைத்த கம்பிகளுக்கு பச்சைநிற ஸ்ரொக்கிநெற் போட்டுக்கட்டவும். கட்டிய இலைகளுக்கு தண்டுப் பகுதியை அமைப்பதற்காக கட்டுக் கம்பியினால் கட்டி கம்ரேப் சுற்றி தண்டினை அமையுங்கள்.

**செண்டாக கட்டும் முறை:**

தடித்த கட்டுக்கம்பியை எடுத்து 5 இலைகளையும் ஒரே விதத்தில் வைத்துக் கட்டிக் கொண்டு அதன்கீழ் 3 மலர்களையும் ஒரேமுறையில் வைத்து கட்டுக்கம்பியினால் சுற்றிக்கொள்ளவும். பின் பெரிய தங்கநிற இலைகளை வைத்து கட்டுக்கம்பியினால் கட்டி கம்ரேப்பினால் சுற்றவும். மலர்ச் செண்டின் தண்டு சிறிதாக இருத்தல் நன்று.




சிறிய சாடியில் இம்மலர்ச்செண்டை வைத்து விரிவாக்கி அழகுபடுத்தவும். இவ்வாறு அழகாக்கிக் கொண்ட செண் டினை வரவேற்பறை மேசையில் வைத்து சிறிஸ்மஸ் மெழுகுதிரி கொழுத்தி அதன் அருகே இச்செண்டினையும் வைத்து கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்களை எமது விருந்தினருக்கு தெரிவித்து சந்தோஷப் படுத்தலாம்.

* **விரும்பினால் 1995ம் ஆண்டின் நல்வாழ்த்துக்க ளையும் தெரிவிக்கலாம். ஆங்கில எழுத்துக்க ளால் வாழ்த்துக்களை எழுதி அழகுபடுத்தலாம்)**

## முரசின் பரிசு

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* *50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.*


| முரசின் பரிசு |
|---|
| கூப்பன் இல 17 |
| உண்மை-நேர்மை-வெளிப்படைத்தன்மை |

* *பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.*
* *பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.*
* *நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.*
* *மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.*
* *இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.*

## லேடீஸ் ஸ்பெசல்

# மசாஜ்

சோம்பலாக இருக்கும் போது, யாராவது மசாஜ் செய்தால் சுகமாக இருக்குமே என்று தோன் றும். மசாஜ் செய்வதால் தசை பிடிப்புக்கள், மற்றும் வியர்வைத் துவார அடைப்புக்கள் நீங்கி புத்துணர்ச்சி உண்டாகும்.



பெரியவர்களுக்கு மட்டும்தான் மசாஜ் செய்ய வேண்டும் என்ப தில்லை. பிறந்த குழந்தைகளுக்குக் கூட எளிமையான மசாஜ் செய்யலாம்.

பிறந்த குழந்தைகளுக்கு முறையான மசாஜ் செய்வதால் அந்தக் குழந்தைகள் மற்றக் குழந்தைகளை விட உருண்டு, திரண்டு வேகமான வளர்ச்சியைப் பெறும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துக் கூறியுள்ளனர். இதுதவிர மசாஜ் செய்யப்படும் குழந்தைகள் நன்கு உறங்கும்.

குழந்தைகளுக்கு மசாஜ் செய்ய தாவர எண்ணையையே பயன்படுத்த வேண்டும்.

பிறந்த குழந்தைகளுக்கு நரம்புகள் நன்கு வளர்ச்சியடையாமல் இருக்கும் என்பதால் மிகமிக மெதுவாகவே தடவிக் கொடுத்து மசாஜ் செய்ய வேண்டும்.

குழந்தைகளுக்கு உடல் நலம் இல்லாத போதோ அல்லது பசியுடன் இருக்கும் போதோ மசாஜ் செய்து விடாதீர்கள். பால் கொடுத்த பின் ஒரு மணிநேரம் கழித்து மசாஜ் செய்வது நல்லது.




எதிரேயிருப்பவர் நலன் பொசுங்கும் வகையில் நா சுழற்றக்கூடாது என்பதும் அர்த்தம்.

அதற்காக எதிரே யிருப்பவர் நலன் பொது வான நலனுக்கு விரோத மாகும் போது அவர் நலனை எண்ணி மூச்சுக் காட்டாமல் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரக்கூடாது.

## சிந்திக்கலாம் இங்கே

'உள் ஒன்று வைத்துப் புற மொன்று பேசுவோரோடு உறவு வேண்டாம்' என்று ஒருவர் ஆண்டவனிடம் வரம் கேட்டார்.

அப்படிப் பேசுவோரைக் கண்டு பிடிக்க அவரால் முடியவில்லை.

தன்னால் முடியாதபோதுதான் தனக்கு மேல் ஒரு சக்தி உண்டு என்று மனிதன் நம்பத் தொடங்கு கிறான்.

அப்படித்தான் தனது கண்ணால் காண முடியாத அடுத்தவர் அகத்தை கண்டறிந்து உதவ அவரும் கடவுளிடம் கையேந்தினார்.

உள்ளதைப் பேசு என்றால் உள்ளத் தில் இருப்பதையெல்லாம் உடனே பேசிவிடுவது என்று சிலர் அர்த்தப் படுத்தி விடுகிறார்கள்.

போரில்கூட பின்வாங்கி பொருத்த மான நேரத்தில் முன்னேறிப் பொருதும் தந்திரம் இராணுவ உத்தியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

**பேசுதலிலும் நேரம் பார்த்து- எதிரில் இருப்பவர் நிலை அறிந்து பேசுவதே உறவை நிலைநிறுத்த உகந்த வழி என்று ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.**

அதற்காக சந்தர்ப்பத்துக்கு ஏற்ப நடிக்கவேண்டும் என்ற முடிவுக்கு ஆதரவாகக் கொடி பிடிப்பதாக நினைத்துவிடவேண்டாம்.

எங்கே எதைப் பேசுவது என்று தெரிந்து பேசவேண்டும் என்பதே அர்த்தம்.

மருத்துவ மனைக்கு செல்கிறோம். உறவினர் நோயில் மாட்டி படுக்கையில் கிடக்கிறார்.

'அய்யோ பாவமே! இந்த இளவயதில் இப்படி ஒரு நோயா? இப்படி ஒரு நிலையா?' என்று உள்ளத்தில் அனுதா பம் உதிக்கத்தான் செய்யும்.

உள்ளதைப் பேசுவதாக நினைத்துக் கொண்டு "அடடே உங்களுக்கு இந்த வயதில் போய் இந்த நோய் வந்து தொலைத்ததே.... நான் என்றால் உயிரையே விட்டிருப்பேன்."

என்று சொன்னால் எதிரேயிருப்ப வர் சோர்வில் சுருண்டுபோவார்.

நோயை எதிர்த்துப் போராடும் ஆற்றலும் அவரிடமிருந்து அகன்றுவிடும்.

"நோய் வருவது இயல்புதானே. தைரியமாக இருங்கள். சரியாகிவிடும்,"

என்று கூறுவது 'ரொனிக்' போன்று நோயாளிக்கு உதவும் உற்சாக வார்த்தைகள்.

உள்ளதைப் பேசியிருந்தால் உங்கள் உறவினரின் உள்ளம் உடைந்திருக்கும்.

உங்களையும் பாதிக்கும் என்பத னால் உணர்த்தவேண்டிய கருத்தை உரைக்க மறுப்பது சுயநலம்.

உங்களைச் சேர்ந்தவர்கள் சோர்ந்து விடக்கூடாது என்பதால் மனதில் பட்டதை மறைத்தீர்களே- அதில் பொதுநலம் இருக்கிறது.

சொன்னதில் பாதி பொய்யாக இருந்தாலும் அதில் மனிதாபிமான ஈரம் இருப்பதால், காந்தி இருந்திருந்தா லும் கோபித்திருக்க மாட்டார்.

'நா காக்க' என்று திருக்குறள் சொன்னதில் நாகரிகம் இல்லாமல் பேசுவதும் அடக்கம்.

இடம் அறிந்து பேசுதல், சூழல் அறிந்து பேசுதல் என்பவற்றை உள்ளதைப் பேசுகிறேன் என்று நினைத்துக்கொண்டு மறந்துவிட வேண்டாம் என்றுதான் அர்த்தம்.

நீங்கள் துணிக்கடைக்குச் சென்று மிகவும் சிரத்தையாக ஆடை தெரிவு செய்து வந்து அணிந்து வருகிறீர்கள்.

"எப்படியிருக்கிறது?" என்றும் கேட்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

"சே.... சகிக்கவேயில்லை. நீயும் உன் உடுப்பும்."

என்று பதில் சொன்னால் நெருப் பில் இட்ட புழுவாய் துடிக்கத்தானே செய்வீர்கள்.

பிறர் விடயத்திலும் தனிப்பட்ட விமர்சனங்களை வீசும் போது, உங்களை அவர்கள் இடத்தில் வைத்து ஒருமுறை சிந்தியுங்கள்.

நீங்கள் கூறப்போவதை அவர்கள் உங்களுக்கு கூறினால் எப்படியிருக்கும் என்று யோசியுங்கள்.

அதன்பின்னர் விமர்சனத்தை நாகரிகமாய் சொல்லுங்கள்.

நம்மில் சிலருக்கு விமர்சிக்க மட்டுமே தெரிந்திருக்கிறது. விமர்சனத்தை ஏற்கவோ, ஏற்றுத் திருந்திக்கொள்ளவோ தெரியாமல் இருக்கிறது.

விமர்சனம் உனக்குத்தானே, நீ உடைந்தால் என்ன- விழுந்தால் என்ன என்ற பாணியில் பேசுவதும் அதனால் தான் என்று புரிகிறது.

அவ்வாறானவர்கள் பட்டியலில் உங்கள் பெயரும் சேரவேண்டுமா? வேண்டாமே!

## உபயோகமான வீட்டுக் குறிப்புகள்

* எலுமிச்சைச் சாறுடன் மோரைக் கலந்து குடித்தால் மூளை உற்சாகம் பெறும்.
* தேனில் பலாச்சுளையை போட்டு 15 நாள் அப்படியே மூடிவைத்து விடவேண்டும். அதன்பின் சாப்பிட்டால் நல்ல பலன்கள் கிடைக்கும்.
* திராட்சைப் பழத்திற்கு உடல் உஷ்ணத்தை தணிக்கும் சக்தியுள்ளது.
* கொய்யாப் பழத்திற்கு பேதியை நிறுத்தும் ஆற்றல் இருக்கிறது.
* கொய்யா இலையை வாயில்போட்டு மென்றால் பசி உண்டாகும். குடல் வலுவடையும். பல் வலி இருந்தால் பறந்து போய்விடும்.
* ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள். ஆனால் உண்மை யிலேயே சுரைக்காய்க்கு மனக் கவலையை போக்கும் சக்தி உள்ளது.
* தீக்காயம் ஏற்பட்டால் அந்த இடத்தில் தேனை தடவுங்கள். புண் ஆறிவிடும்.
* காமாலை நோய் குணமாக வேப்பங் கொழுந்தை அரைத்து எருமைத் தயிர் கலந்து 3 நாட்கள் சாப்பிட வேண்டும்.
* பேன் தொல்லையா? எலுமிச்சம் பழச் சாற்றில் உப்பை கலந்து தலையில் தேய்த்து வந்தால் பேன்கள் ஒழியும்.
* பார்லி அரிசியை பாலில் கலந்து காய்ச்சி கொடுத்தால் குழந்தை கொழு கொழுவென்று ஆரோக்கியத்துடன் வளரும்.
* சிலருக்கு மூல நோய் வலி தாங்க முடியாதபடி இருக்கும். அப்படிப் பட்டவர்கள் எலுமிச்சை சாறை பசும்பாலில் பிழிந்து சாப்பிட்டு வந்தால் பலன் கிடைக்கும்.
* கட்டிகள் மேல் எருக்கம் பாலை தடவி வந்தால் கட்டிகள் உடைந்து விடும்.
* நெல்லிக்கனியானது சிறுநீரைப் பெருக்கு ரத்தத்தை சுத்தம் செய்யும்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### குஜராத்தி தால்

**தேவையான பொருட்கள்:**

துவரம் பருப்பு - 100 கிராம்
பச்சை மிளகாய் - 3
இஞ்சி - சிறியதுண்டு
மஞ்சள்தூள் - கால் தேக்கரண்டி
வெல்லம் - 2 மேசைக்கரண்டி
எண்ணெய்- ஒரு மேசைக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
புளி - சிறிதளவு
கடுகு - சிறிதளவு
வெந்தயம் - சிறிதளவு
பெருங்காயம் - ஒரு சிட்டிகை

**செய்முறை:**

ஊறவைத்த துவரம் பருப்புடன் மஞ்சள் தூள் சேர்த்து வேகவைத்து நன்கு மசித்துக் கொள்ளவும். புளியிலிருந்து கெட்டியாகச் சாறு எடுத்துப் பருப்புடன் கலக்கவும். பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சி ஆகிய வற்றையும் சேர்க்கவும். இக்கல வையில் வெல்லம் சேர்த்து அரைமணி நேரம் இளஞ் சூட்டில் அடுப்பில் வைத்து இறக்கவும். கடுகு, வெந்தயம், பெருங்காயம் ஆகியவற்றைத் தாளித்து பருப்பில் சேர்த்து கலந்து, சோற்றுடன் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்



## பல உருவில் கவிஞன்!

கடவுளைக் கூடத் தட்டிக் கேட்போன்
கவிஞன் ஒருவன்தான்! –அவன்
மடமை இருளை விரட்டி ஓட்டும்
மகிமை ஒளி ஆவான்!
படரும் மூடக் கொள்கை மாய்க்கும்
பண்பில் தீ ஆவான்– நிதம்
தொடரும் புன்மை நிலையைத் துரத்தும்
துணிவின் குன்றாவான்!

ஆட்சிக் கதிரை அடக்கு(ம்) முறையை
அறையும் முரசாவான்! –ஒரு
மீட்சி காணத் துடிக்கும் எண்ணம்
மிளிரும் செயல்வீரன்!
நாட்டார் நலனில் அக்கறை கொண்ட,
நல்ல பண்பாளன்! – அவன்
'தோட்டா' கண்டும் துவளா நெஞ்சன்
துளைக்கும் துப்பாக்கி!

வாழும் கொடுமை ஓடப் பொருதும்
வடிவில் போர் வீரன்! –அவன்
நாளும் புதுமை நடக்கப் பாடும்
நல்ல பாவேந்தன்!
கோளும், புறமும் கொள்ளா நிற்போன்
கொள்கைக் குரிசிலவன்! – இங்கு
நாளும் போரை முடிக்க நினைக்கும்
முனைப்பில் ஒருதீரன்!

கவட்டுத் தரையாம் மனங்கள் குளிரக்
கனியும் கார்மேகம்! – நிதம்
உலகில் வறுமை துரத்தும் போதும்,
உலவும் மென்காற்று!
நலன்கள் செய்ய நாடும் அவனே
நாட்டிற்(கு) உரமாவான்! – இவன்
நலங்கும் வையம் சமைக்கும் கவிஞன்,
தொடரும் வரலாறு!

அ. கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு.

## 'ஹைகூ' கவிதைகள்

ஒவ்வொரு நாளையும்
கசக்கி எறிந்தான்
கையில் கலண்டர்த்தாள்.

•••

அவன் பாலையில் நடந்தான்
அவள் பின்னே தொடர்ந்தாள்
திடீரென்று மணற்புயல்.

•••

மற்றவருக்கு இடையூறாய்..
நிஸப்தமாய் தூங்கினான்
அறையினுள் குறட்டைச் சத்தம்.

•••

முதிர்ந்தோர் முரண்பட்டால்
வீட்டினுள் தங்கமாட்டார்களோ..
மரத்தினடியில் உதிர்ந்த இலைகள்.

•••

நீ வந்தது போலிருந்தது
நீ பேசியது போலிருந்தது
வாசலில் தபால்காரன்.

சோ. ஸ்ரீதரன்
பொகவந்தலாவை.

## இரு பயணங்கள்

சத்தியம்
'சீதனம்' வேண்டாம்
வாழ்க்கை
கலைப்பணிக்கு
துணை போதும்!

முதல் பயணம்
ஆரம்பம்,
சுற்றுப்பேச்சு
முடிவுற்றதும்

'திருமணம்'

முதல் 'இரவு'க்கு
முன்பே
மணப்பெண்ணுக்கு
பயணச் சீட்டு
மத்தியகிழக்குக்கு
ரெடி!

இருபயணங்கள்
தொடரும்
இல்லறமா?
சீதனமா?

மானம்கெட்ட
மனச்சாட்சி
ஒழிந்துகொள்கிறது.

கிண்ணியா ஹசன்ஜி–

## அமைதி தொலைந்த தேசத்தில்

நேசம்
எனும் சொல்லை
மறந்து போனதால்
மாங்காய்த் தேசம்
சிதறு தேங்காய் ஆனது.......

அன்று
சொர்க்கத்திற்கு
உதாரணமாக
சுட்டிக்காட்டிய
விரல்களெல்லாம்
சுட்டுக் கொண்டதால்
நொடியில்
நொந்து போயின...

வரலாற்று நிகழ்வுகளில்
இருந்து
இன்னும் வாழ்வதற்கு
கற்றுக் கொள்ளாவிடில்
மறுபடியும்
ஓர் மகான்
அவதரித்துக் கூட
மாற்றம் ஏற்படுத்தும்
சாத்தியம்
நிச்சயம் இல்லை...

மரணத்தில் கூட
சுகம் தேட
ஆரம்பித்த மனங்களுக்கு
உலகம்
வியர்ப்பது தெரியும்.
ஆனால்
வாழத்தெரியாதவர்கள்
என்று
வாய்க்குள் சொல்வது
எப்போது புரியும்....?

குழலுக்கு
இசைவாக்கம்
அடைந்த விலங்குகளாக
மனித வேட்டைகளின் போது
பதுங்கி
பக்குவமாய்
தலைகாட்டும் செயற்பாடு
உணர்த்துவது
ஆறாவது அறிவை
அறியாதவர்களில்
நாமும் அடக்கம்
என்பது மட்டுமே!

–துதிகாந்தன்–வத்தளை–

## பார்த்துக்கொண்டேதான் இருக்கிறீர்கள்



நமது ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க தான் அந்த சுட்டிப் பெண். சரியாக நினைத்தவர்களுக்கு முதுகில் இரண்டு ஷொட்.

## மௌனத்தைப் பிடித்து வை....



அது...
என் நெஞ்சை
நீக்கிவிட்டு
உன் கண்களை
புகுத்திவிடும்
பொல்லாத ராக்கனவு...

••

நீ
என்னை
காதலிக்க விரும்பினால்
கடிதம் எழுது....

••

உன்னை
அந்த வயலோரமாக
சந்திக்கவரும்போது
பாழாப் போன மௌனத்தை
மடித்து
வரம்புகளின் இடுக்கே
சொருகி விட்டு...
என்னோடு
கதைக்கப் பழகு...

••

போதும்
உன் மௌனம்....

••

பொல்லாத
மௌனத்தை
எங்கடி வாங்கின...?

••

வா....
கடலோரமாக
குந்தி ஏதாச்சும்
பேச....

••

பொத்துவில்
பௌர்ணமி நிலா (பைசல்)

## காதல் கைக் குழந்தை

உன்
பிரேசகத்தனத்தில்
பிரண்டு கிடக்கிறது!
நீ பெத்து விட்டு
விட்டுப்போன
காதல்
கைக்குழந்தை!

*

உன் மோகனாந்திரம்
கொலை
செய்யப்பட்டதில்
நாடிச்சிறைக்குள்
மௌனத்தவமாய்
மரணித்துக்கொண்டிருக்கிறது
அது!

*

நிலாப்பாட்டும்
பாடியும்
நட்சத்திரங்களை
கணக்கெடுத்தும்
'மின்மினி'களை
சேஷ்டை செய்தும்
உன் வரவில்லாமல்
வரண்டுபோகும்
இரவுகளில்
கதறியழும் குழந்தையை
தேற்றிக்கொள்வேன்!

*

உன்
உச்சரிப்பின்
உச்சநிலையில்
உச்சந்தலை
நினைவிழந்து
கைக்குழந்தை
கண்ணயர்ந்து போகும்!

*

இரு இலத்திரனின்
இம்சையிலும்... மீண்டும்..
விழித்துக்கொள்ளும்!

*

விழித்திரையை
துருவியெடுக்கும்
நீ வருகிறாயென்று!

*

ஏமாற்றம்
மீண்டும்..
என் ஜீவன்
சித்ரவதையில்!


பாணகமுவ எஸ். முஸ்தாக்.

## கத்தரித்த கடி ஜோக்ஸ்



நோயாளி: நீங்க சொன்னபடி இந்தச் சீட்டை 3 வேளை சாப்பிட்டுப் பார்த்தேன் டாக்டர், நோய் குணமாகவே இல்லை.
டாக்டர்: .....?

□□□




அவள்: உங்க கணவர் ஓவியர் தானோ?
இவள்: ஆமாம்.
அவள்: அவரை ஏன் விவாகரத்து பண்ணுறீங்க?
இவள்: 'சித்திர' வதை பண்ணுறாருங்க.

□□□

ஒருவர்: எல்லாப் பத்திரிகையிலையும் புதிர் எழுதுவாரே... அவரைப்பற்றி ரெண்டு வார்த்தை சொல்லமுடியுமா?
மற்றவர்: 'புரியாத புதிருங்க' அவர்.

வக்கீல்: உங்க மனைவியை வேணும்னுதானே வெட்டினீங்க?
குற்றவாளி: ஏங்க, யாராவது வேணுமின்னு வெட்டுவாங்களா? வேணாம்னுதான் வெட்டினேன்.

□□□

டாக்டர்: (நோயாளிடம் மருந்து சீட்டைக் காட்டி) இதை ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட்டு வாங்க.
(இரண்டு நாள் கழித்து)

காதலி: நாம காதலிக்கிறதை எங்க அப்பா பாத்திட்டு என்னை நல்லாத் திட்டினார்.
காதலன்: என்னான்னு?
காதலி: உங்களைக் கல்யாணம் செய்துக்காம வீட்டுப்படி ஏறக்கூடாதுன்னு சொல்லிட்டார்.

□□□

ஜோசியர்: கல்யாணம் செய்து கொண்டால் உங்களுக்கு ஒரு தோஷம் போய்விடும்.
வந்தவர்: என்ன தோஷம்?
ஜோசியர்: சந்தோஷம்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(27.11.94 முதல் 03.12.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

விருட்சிகம் - சூரியன், புதன், வியாழன்
கும்பம் - சனி
மேடம் - கேது
கர்க்கடகம் - செவ்வாய்
துலாம் - வெள்ளி, இராகு

சந்திரன்–சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.
(01.12.94ல் சிம்மத்தில், செவ்வாய் பிரவேசம்)

### மீனம்:

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருட் செலவு, கடன் படல். | பி.ப. 2 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், கௌரவம். | காலை 9 மணி |
| செவ்வாய்- தூர இடப் பயணம், சுகக்குறைவு. | பகல் 12 மணி |
| புதன்- முயற்சித்தடை, பொருள் விரயம். | காலை 7 மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 8 மணி |
| சனி- பொருள் விரயம், பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 10 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பலவித நன்மை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கௌரவ நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- தனலாபம், காரியானுகூலம். | காலை 6 மணி |
| சனி- பெரியோர் பகை, வீண் மனஸ்தாபம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- கௌரவம், வெளியிடப் பயணம். | காலை 6 மணி |
| புதன்- துயர் நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- அந்நியரால் தொல்லை, சுபகருமம் தடை. | காலை 7 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- பயனற்ற செயல், மனக்கவலை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| திங்கள்- காரியானுகூலம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்தநிலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், புதிய முயற்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- அந்நியரால் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| சனி- துயர் நீங்கும், குடும்ப மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 9 மணி |
| திங்கள்- பெரியோர் சகவாசம், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- குடும்பக் கலகம், மனப் போராட்டம். | பகல் 12 மணி |
| புதன்- பயனற்ற செயல், அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியரால் உதவி, மனப் பயம் நீங்கும். | பகல் 11 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், மன நிம்மதி. | காலை 10 மணி |
| சனி- தூர இடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், மனக் கவலை. | பகல் 12 மணி |
| புதன்- புதிய முயற்சி, அந்நியர் சகவாசம். | காலை 6 மணி |
| வியாழன்- மனக்கவலை நீங்கும், பணவரவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, குடும்ப நன்மை. | காலை 10 மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துன்பநிலை நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| புதன்- துயர் நீங்கும், குடும்ப சுகம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- எதிர்பார்த்த நன்மை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| சனி- உறவினர் கலகம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம் -3

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், பணக்கஷ்டம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சிகளில் வெற்றி. | காலை 10 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் அனுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வியாழன்- எதிர்பார்த்த நன்மை, செய்தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- உறவினர் உதவி, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, கௌரவம். | காலை 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- தூர இடப்பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தேகசுகநன்மை, உயர்ந்தநிலை. | காலை 7 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- புதிய நம்பிக்கை, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -1

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், தொழில் மந்தம். | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் சகவாசம், கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- மறைமுக எதிர்ப்பு, தொழில் மேன்மை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, செல்வாக்கு. | காலை 6 மணி |
| வெள்ளி- பணக்கஷ்டம், கடன் தொல்லை. | காலை 7 மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- தூர இடப் பயணம், செல்வாக்கு மேன்மை. | காலை 9 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- குடும்ப சுகம், உறவினர் உதவி | காலை 8 மணி |
| வியாழன்- பொருள் நட்டம், மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- செல்வாக்கு மேன்மை, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- அந்நியரால் தொல்லை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 9

### கன்னி:


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | காலை 7 மணி |
| திங்கள்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- குடும்ப சுகம், மறைமுக எதிர்ப்பு. | காலை 6 மணி |
| புதன்- திடீர் பயணம், துக்க செய்தி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- தேகசுகம் பாதிப்பு, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- துன்ப மிகுதி, செய்தொழில் மந்தம். | பகல் 11 மணி |
| சனி- செலவு மிகுதி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## எங்கள் பாட்டி

பாட்டி எங்கள் பாட்டியாம்
பல் விழுந்த பாட்டியாம்
கூட்டி வைத்து கதைகள் சொல்லும்
கூன் விழுந்த பாட்டியாம்

சின்னச் சின்ன வீடு கட்டி
சிரிக்க வைக்கும் பாட்டியாம்
வண்ண வண்ண பூக்களையும்
வாங்கித் தரும் பாட்டியாம்

பாட்டுப் பாடி எங்களை
பாட வைக்கும் பாட்டியாம்
சாட்டுப் போட்டு என்றுமே
சலிக்க வைக்கும் பாட்டியாம்

சட்டி பானை கொண்டு வந்து
சமைத்துக் காட்டும் பாட்டியாம்
தொட்டில் கட்டி எங்களை
தூங்கச் செய்யும் பாட்டியாம்.

–அனுப்பியவர்–எம்.அகாறக்.

"உடன்பிறந் தார்களைப் போல- இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
இடம் பெரி துண்டுவை யத்தில்- இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?"

–சுப்பிரமணிய பாரதியார்–

## பாப்பா முரசு சிறுகதை

# சித்திரனின் புத்திமதி

ஒரு கடலில் ஏராளமான மீன்கள் வசித்து வந்தன. அந்தக் கடல் ஊருக்கு சற்றுதொலைவில் இருந்ததால், அங்கு வந்து யாரும் மீன் பிடிப்பதில்லை. அதனால் மீன்கள் எல்லாம் எவ்வித பயமும் இன்றி மகிழ்ச்சியோடு வாழ்ந்தன.

அந்தக் கடலில் சித்திரன் என்றொரு விரால் மீனும் இருந்தது. அதற்கு விசித்திரன் என்ற மகன் மீன் இருந்தது.

சித்திரன், தான் எங்கு சென்றாலும், தன் மகனான விசித்திரனையும் உடன் அழைத்துச் செல்லும். கடலின் அமைப்பையும், அதில் வாழும் முறைகளையும் எதிரிகளைப் பற்றியும், அவற்றின் மூலம் ஆபத்து வரும்போது எப்படித் தப்பிப்பது போன்ற விபரங்களைச் சொல்வதற்காகவே, தன் மகன்ன அழைத்துச் செல்லும்.

அந்தக் கடலில் மித்திரன் என்ற மற்றுமொரு விரால் மீன் ஒன்றும் இருந்தது. இது ஒரு காலத்தில் சித்திரனுடன் சிநேகிதமாய் இருந்தது.

சித்திரனோ அமைதியே உருவானது. எக்காரணத்திற்காகவும் அவசரப்படுவதில்லை. எப்பொழுதும் அது முன்னெச்சரிக்கையுடனேயே இருக்கும்.

மித்திரனோ அவசரக்குடுக்கை. எதையும் யோசிக்காமல் எங்கும் சுற்றித் திரியும். எதைப் பற்றியும் யோசிக்காமல் துணிச்சலாகச் செயற்படும். ஆபத்து வந்தால் சமாளித்துக்கொள்ளலாம் என்ற தைரியத்துடன் அது மிகவும் சுதந்திரமாகச் சுற்றித் திரியும். இந்தக் குண பேதங்களே இருவரும் பிரிவதற்குக் காரணமாயிருந்தது.

ஒருநாள் சித்திரன், தன்மகன் விசித்திரனை அழைத்துக்கொண்டு, இரை தேடப் புறப்பட்டது.

அந்தக் கடலில் நிறைய மீன்கள் இருப்பதைக் கேள்விப்பட்டு ஒரு மீன் பிடிக்கும் இளைஞன் தூண்டிலோடு அங்கே வந்திருந்தான்.

வசதியான ஒரு இடத்தில் அமர்ந்துகொண்டு தூண்டிலில் இரையைப் பொருத்தினான். பின்னர் தூண்டிலைக் கடலிற்குள் போட்டு மீனுக்காகக் காத்திருந்தான்.



சில விநாடிகளில் சித்திரனும் விசித்திரனும் அங்கே வந்தன. இருவரின் கண்களிலும் அந்த இரை தென்பட்டது. விசித்திரனுக்கோ ஒரே பசி. அந்த இரையை நோக்கி வேகமாகப் பாய்ந்தது. அதைக் கவனித்த சித்திரன் சட்டென்று விசித்திரனைத் தடுத்து நிறுத்தியது.

"விசித்திரா! அவசரப்படாதே அகோரப் பசியாய் இருந்தாலும், இரை கிடைத்தவுடன் சற்றும் யோசிக்காமல் நாம் பாய்ந்து விடக்கூடாது. எதிரிகள் நம்மைப் பிடிப்பதற்காகப் பயன்படுத்துவதும் நமக்குப் பிடித்தமான உணவைத்தான். எனவே உணவைப் பிடிக்குமுன் நாம் சற்று நிதானமாக யோசிக்க வேண்டும். உனக்கு முதலிலேயே அந்த இரையை நான் பார்த்துவிட்டேன். எனக்கும் பசிதான். ஆனாலும் நான் பாய்ந்து விடவில்லை. காரணம் முன்னெச்சரிக்கை மட்டுமல்ல முன் யோசனையும் கூடத்தான்" என்றது, சித்திரன்.

"நீங்கள் அதை இரை இல்லை என்கிறீர்களா அப்பா?", என்று கேட்டது விசித்திரன்.

"இரைதான். ஆனால் அது இருக்கும் சூழ்நிலை தான் என் தயக்கத்திற்குக் காரணம். தண்ணீரில் விழுந்த பொருட்கள் கனமாக இருந்தால் அவை நீரில் மூழ்கி விடும். கனமில்லாது இருந்தால் நீரின் மேல் மிதக்கும். இந்த இரையைப் பார். மூழ்கவும் இல்லை மிதக்கவும் இல்லை. பாதி நீருக்குள்ளேயே இருக்கிறது. இது எப்படி என்று யோசித்துப் பார்" என்றது.

விசித்திரன் யோசித்தது. அனுபவசாலியான தனது தந்தை கூறுவது, சரியென்றே பட்டது.

"அப்படியென்றால், இரையைப் போட்டுவிட்டு நம்மைப் பிடிக்க யாரேனும் மனிதன் மேலே இருக்கின்றானா?" என்று கேட்டது விசித்திரன்.

"ஆமாம் இதைக் கவனித்ததால்தான் உன்னை நான் தடுத்தேன். இந்த உணவு போனால் இன்னொரு உணவு நமக்குக் கிடைக்கும். ஆனால் உயிர் போய்விட்டால் திரும்பக் கிடைக்குமா?" என்று சொன்னது சித்திரன்.

விசித்திரனும் தன் தந்தை சொல்வதை அமைதியுடன் கேட்டுக்கொண்டிருந்தது.

ஒரு நிமிடம் ஓடியிருக்கும். அந்தப் பக்கம் வந்த சித்திரனின் பழைய நண்பனான மித்திரன் அந்த இரையைப் பார்த்துவிட்டது. சட்டென்று திரும்பி அந்த இரையை நோக்கிப் பாய்ந்தது.

தற்போது பகைவனாய் இருந்தாலும், ஒரு காலத்தில் நண்பனாய் இருந்தவனாயிற்றே? அவனைக் காப்பாற்ற வேண்டுமென்று நினைத்தது சித்திரன்.

உடனே அது, "மித்திரா! போகாதே அந்த இரையைப் பிடித்தால் நீ மாட்டிக் கொள்வாய்," என்று எச்சரித்தது.

மித்திரன் கடும் கோபத்தோடு சித்திரனை முறைத்துப் பார்த்தது.

"என்னைப் பிடிக்க வேண்டாமென்று சொல்லிவிட்டு அந்த இரையை நீ அபகரிக்கப் பார்க்கிறாயா? உன்னை மாதிரி எத்தனை பேரைப் பார்த்திருப்பேன். பைத்தியக்காரா எனக்குப் புத்தி சொல்வதை விட்டுவிட்டு, உனது வேலையைப் பார்த்துக் கொண்டு போ" என்று கத்திவிட்டு வேகமாகச் சென்று அந்த இரையைக் கவ்வியது.

தூண்டில் அசைவதைக் கண்ட அந்த இளைஞன், விருட்டென்று அதை மேலே இழுத்தான். அப்பொழுது இரையில் மாட்டப்பட்டிருந்த முள் மித்திரனின் தொண்டையில் வசமாக மாட்டிக்கொண்டது. தூண்டிலில் இருந்து விடுபட எப்படியெல்லாமோ துள்ளியது. துடித்தது. ஆனால் விடுபட முடியவில்லை.


"பார்த்தாயா விசித்திரா! நான் எவ்வளவு எச்சரித்தும் கேட்காமல் போய் மாட்டிக் கொண்டானே. வா மேல் மட்டத்திற்குப் போய் பார்க்கலாம்." என்று சொன்ன சித்திரன், விசித்திரனை அழைத்துக்கொண்டு நீரின் மேல் மட்டத்திற்கு வந்து பார்த்தது.

அங்கே அந்த இளைஞன், தூண்டிலில் இருந்த மித்திரனை விடுவித்து தனது கூடைக்குள் போட்டுக்கொண்டிருந்தான்.

"விசித்திரா! ஆபத்து எப்போதும் நம்மைச் சூழ்ந்தே உள்ளது என்று ஆபத்து இல்லாத காலங்களிலும், எவன் ஒருவன் நினைத்துக்கொண்டு அதன்படி செயற்படுகிறானோ, அவன் எவ்வகை ஆபத்திலிருந்தும், எப்படியும் தப்பிவிடுவான்," என்றது சித்திரன்.

"அப்பா! இந்தப் புத்திமதிப்படியே இனி நான் கவனமாக இருப்பேன்," என்று உறுதியாகச் சொன்னது விசித்திரன். ■

## ஆபிரிக்காவின் மிகப்பெரிய நாடு






- **ஆபிரிக்காவில் மிகப் பெரிய நாடு எது?**
  சூடான். ஆபிரிக்கா கண்டத்தின் வடகிழக்குப் பகுதியில் இது அமைந்துள்ளது.
  இதன் பரப்பளவு 250813 சதுர கிலோமீற்றர். இதன் தலைநகர் கார்டோம்.
- **இதன் மக்கள் தொகை எவ்வளவு?**
  26 கோடி. வடக்கு சூடான் மக்கள் அரபு முஸ்லிம்கள். தெற்கு சூடான் மக்கள் ஆபிரிக்க இனத்தவர். கிறிஸ்தவ மதத்தினரும் சிறிதளவில் உள்ளனர்.
- **இங்குள்ள மக்களின் முக்கிய தொழில் என்ன?**
  நைல் நதி மற்றும் அதன் கிளை நதியின் கரையோரத்தில் பல விவசாயிகள் உள்ளனர். விவசாயம்தான் முக்கிய தொழில். பாலைவனப் பகுதிகளில் நாடோடி மக்கள் வாழ்கின்றனர்.
- **சூடானின் மொழிகள் எவை?**
  நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் சூடானில் பேசப்படுகின்றன. வடக்கு சூடானில் அரபு மொழி பேசப்படுகின்றது. தெற்கே பல ஆபிரிக்க மொழிகள் பேசப்படுகின்றன. இணைப்பு மொழி ஆங்கிலம். தேசிய மொழி அரபு.
- **சூடான் எப்போது சுதந்திர நாடானது?**
  எகிப்து, இங்கிலாந்து ஆகிய நாடுகள் இணைந்து சூடானை ஆண்டன. 1956ம் ஆண்டு இந்நாடு சுதந்திரம் பெற்றது.

## அறிவோம் மனதில் பதிவோம்




சிங்கப்பூரின் முந்தைய பெயர் டெமாசெக் இந்தத் தீவுக்கு மலேசிய இளவரசர் சங்நிலா உதாமா வந்தபோது, அங்கு சிங்கம் போன்ற ஒரு பிராணியைப் பார்த்தார். அதனால் அந்த இளவரசர் அத்தீவை 'சிங்கபுரா' என அழைக்க அதுவே சிங்கப்பூர் ஆயிற்று.



அமெரிக்க ஓவியர் பாட்டி மோசஸ் தனது 76வது வயதில் ஓவியங்கள் வரையத் தொடங்கினார். 1961ம் ஆண்டு சாகும்வரை, தனது 101 வயது வரையும் ஓவியங்கள் வரைந்தார்.

ஜெர்மனியைச் சேர்ந்த சிக் மண்ட் பிரீட்பிராட் என்ற பலசாலி ஆணிகளைச் சுவரில் வைத்து கையால் குத்தி அடிப்பார். இவருக்கு சுத்தியல் தேவையில்லை.



கனடா நாட்டில் நோவா ஸ்காட்டியா என்ற இடத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் தொடர்ந்து முப்பது மணித்தியாலங்கள் பல்துலக்கி சாதனை படைத்தார்.

## விடுகதைகளும் விடைகளும்

01. சிறகில்லாமல் பறப்பான். கையில்லாமல் அடிப்பான். யார் அவன்?
02. ஆடையிலே உண்டு. கோடையிலே இல்லை. அது என்ன?
03. ஒரு தலைவன். அவனுக்கு பெயரோ பதினைந்து யார் அவன்?
04. ஆடும் ஆனால் மயிலல்ல. ஓடும் அது கடிகாரமல்ல. அது என்ன?
05. கண் இருந்தும் குருடு. தலையிருந்தும் பறட்டை. அவன் வாயின்றி நீர் பருகுவான். அவன் யார்?
06. வெடிக்கும். குண்டுமல்ல, பறக்கும். அது பறவையுமல்ல. அது என்ன?

**விடைகள்**

05. [illegible] 06. [illegible]
03. [illegible]-15 04. [illegible]
01. [illegible] 02. [illegible]

எம்.ஐ.நூறுல் பௌஸியா
யோனகபுர-திக்வெல்ல.

---

01. கொத்துக் கொத்து ஈச்சங்காய். கோடலி ஈச்சங்காய். மதுரைக்குப் போனாலும் வாடாத ஈச்சங்காய். அது என்ன?
02. விடிய விடிய பூப்பெட்டி விடிந்து பார்த்தால் வெறும் பெட்டி. அது என்ன?
03. சின்னஞ் சிறு குருவிக்கு பெரியதொரு வால். அது என்ன?
04. பகலிலே தூங்குவான். இரவிலே அழுவான். அவன் யார்?
05. அடுக்கு அடுக்காய் இருப்பாள். அழகு ராணி. அவள்யார்?

**விடைகள்**

05. [illegible]
03. [illegible] 04. [illegible]
01. [illegible] 02. [illegible]

வீ.எம்.ஸமீம்
மத்திய மகா வித்தியாலயம்-கிண்ணியா.

## எண் விநோதம்

| | | |
|---|---|---|
| 10×9 | =90 | +8=98 |
| 10×98 | =980 | +7=987 |
| 10×987 | =9870 | +6=9876 |
| 10×9876 | =98760 | +5=98765 |
| 10×98765 | =987650 | +4=987654 |
| 10×987654 | =9876540 | +3=9876543 |
| 10×9876543 | =98765430 | +2=98765432 |
| 10×98765432 | =987654320 | +1=987654321 |
| 10×987654321 | =987654321 | +0=9876543210 |

எம்.றூஸ்தீ-அம்பலாந்துவை, பாணந்துறை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.12.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 67
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 64

**பரிசுக்குரியவர்:**
தெ. ஜயந்திர நாத்-ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரி,திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

வி. சிறீகணன்-பேதுரு பாடசாலை, பம்பலப்பிட்டி.

என்.எம்.ஏ. மஹாஸின்-ஸாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம்.

வி. ஜெயந்தினி- விவேகானந்தா ம.ம.வித்தியாலயம், மட்டக்களப்பு.

கோ. கார்த்திக்-கல்கிசை.

எம்.ஜே.எம். சப்றான்- அலெக்சான்றா கல்லூரி, கொழும்பு.

சிங்கராயர் பயஸ் சிரோமியன்
கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலயம்.




**க**தவின் வழியாக வந்த உருவத்தைப் பார்த்ததும் காயத்திரி திடுக்கிட்டாள்.

இந்திராவிடம் எந்த மாறுதலும் தெரியவில்லை.

சலனமேயில்லாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

கேட்டது ஆண் குரலா? பெண் குரலா? இரண்டும் கலந்தது மாதிரியாக கேட்டதே! காயத்திரி உற்றுக் கவனிக்க,

வந்த உருவம் அவள் கவனிப்பது புரிந்து சிரித்தது.

கலப்படமேயில்லாத பெண் சிரிப்பு!

ஹெல்மேட்டை தலையில் இருந்து விலக்கினாள்.

பெண்ணேதான்! கூந்தல் அடையாளம் சொன்னது.

அழகான பெண்தான். இப்போது அவள் முன்னேவர முகம் தெளிவாகத் தெரிந்தது.

'யார் இவள்?' காயத்திரி யோசித்து, இந்திராவைப் பார்த்தாள்.

இந்திரா வந்தவளைப்பார்த்து புன்னகைப்பது மாதிரித் தெரிந்தது.

வந்தவள் மழைக் கோட்டைக் கழற்றி, இடது கையில் வைத்துக்கொண்டு, வலது கையை முன்னே நீட்டி,

"உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி மிஸ் காயத்திரி."

என்றாள். தயங்கிவிட்டு பின் கை குலுக்கிக்கொண்டு, 'இவளுக்கு எப்படி என்னைத் தெரியும்?' என்று யோசித்து,

"உங்களை நீங்கள் அறிமுகப்படுத்தவில்லையே? அறியலாமா நான்?"

அவள் கழுத்தை இடது புறமாய் சாய்த்து. அழகாய் புன்னகைத்துவிட்டு,

"யெஸ். தாராளமாக! என்ன தெரிய வேண்டும்?"

"முதலில் பெயர்?"

"வழக்கமான முதல் ஆர்வம்.

ஐ ஆம் சூர்யா."

காயத்திரிக்கு 'ஷொக்' அடித்தது போலிருந்தது.

"நீ...நீங்கள் கடத்தப்பட்டதாக.."

"வந்த செய்தி உண்மைதான். விரும்பியே கடத்தப்பட்டேன்."

"புரியவில்லை நீங்கள் சொல்வது?"

"அதாவது காய..... நீ என்றே அழைக்கலாமே. ப்ளீஸ்! அதாவது காயத்திரி நான் விரும்பாவிட்டால் என்னை கடத்தியிருக்க முடியாது."

"ஐ.ஸி. காரணம்?"

"என்ன அதற்குள்ளாகவே விசாரணையா? இப்போதுதானே உங்கள் சொந்த சோகம் இந்திராவிடம் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். உடனடியாகவே கடமை உணர்ச்சிக்கு மாறிவிட்டாயே காயத்திரி. வாவ்! ஆச்சரியமான பெண் நீ."

கேலியா என்று புரியவில்லை. ஆனால் முகத்தில் அப்படித் தெரியவில்லை. 'இவளுக்கு எப்படி என் கதை தெரியும்?'

"என் கதை எப்படி சூர்யா உங்களுக்கு..."

"உனக்கு..."

"சரி. உனக்கு எப்படித் தெரியும்?"

"அதுதான் சூர்யா!"

சுட்டுவிரலை தன் நெஞ்சில் வைத்து சொல்லிச் சிரித்தாள்.

தன்னம்பிக்கை அதிகம் என்று குரலில் காட்சி இருந்தது.

"இந்திரா! தேநீர் தரமாட்டாயா? சூடாக ஏதாவது வேண்டும் என்கிறதம்மா உடம்பு. காயத்திரி! நீ சொன்னது மட்டுமல்ல, மீதிக்கதையும் எனக்குத் தெரியும்."

நம்பாமல் சூர்யாவைப் பார்த்தாள் காயத்திரி.

"சொல்லட்டுமா?"

காயத்திரி தலையசைத்தாள்.

□□

**கா**யத்திரி ஃபோனில் ஹரிகரனை எச்சரித்தாள்.

"நான் ஒதுங்கிவிடுவேன் என்று நினைக்காதே ஹரி."

மறுமுனையில் ஹரிகரன் சிரித்தார்.

"அப்படியா? குட்! பெயரிலே திரி இருப்பதால் என்னை எரித்துவிடலாம் என்று நினைக்கிறாயா காயத்திரி? யூ வில் ட்றை. அட்வான்ஸ் வாழ்த்துக்கள்."

"நீ நெருப்போடு விளையாடுகிறாய் ஹரி"

"சமீபத்தில் ஏதாவது சினிமாப் படம் பார்த்தாயா காயத்? வசனம் நல்லாயிருக்கே! பட்... வாழ்க்கைக்கு ஒத்து வராது."

"உனக்கு உடம்பெல்லாம் திமிர். இப்போது புரியாதடா."

"இதென்ன டா போட்டுப் பேசுகிறாய்? ஏதோ அந்த நேரத்தில் பேசினாய். கிறக்கத்தில் 'டா'வும் இனித்தது என்று வை. இப்போது தேவையா? விடு."

"நான் உன்னைச் சந்திக்க வேண்டும்."

"நினைத்தேன். என்னிடம் வந்த எந்தப் பெண்ணும் சுலபத்தில் விடுபட்டுப் போவது கிடையாது. நினைத்தாலே இனிக்கும். நீ நினைப்பது பலிக்கும். வா. நேரேவா!"

"எப்போ?"

"வசதியாக இருந்தால் இப்போதே!"

றிசீவர் இரு முனையிலும் சாத்தப்பட்டது.

அலுவலகத்தில் ஹரிகரனை சந்தித்த காயத்திரியை தன் பிரத்தியேக பங்களாவுக்கு அழைத்துப் போனார் ஹரிகரன். "அங்கே போய் பேசலாம்." என்றதால் காயத்திரி உடன்பட்டுப் போனாள்.

பங்களாவுக்குள் ஹரிகரன் கேட்டார்.

---

**"உள்ளத்தில் இருக்குதய்யா**
**உண்மை சொல்ல மயங்குதய்யா**
**பொல்லாத தடையை எண்ணி**
**புலம்புதய்யா கலங்குதய்யா."**

—கவியரசு கண்ணதாசன்—

---

"என்ன முடிவு செய்திருக்கிறாய்?"

"எதைப் பற்றி?"

"வயிற்றை சுத்தம் செய்துவிட்டு இனிக் கவனமாக நடந்து கொள்வது பற்றி."

காயத்திரி அதற்கு நேரடியாக பதில் கூறாமல்,

"ஹரி உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் எ...என்...என்னை நேசிக்கவேயில்லையா?"

ஹரிகரன் அவளை கழுத்துக்குக் கீழே இரசித்துக்கொண்டு,

"எப்போதாவது சொல்லியிருக்கிறேனா அப்படி? ஹரி பொய் சொல்ல மாட்டான் காயத்திரி. உன்னை வாசித்துப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. வாசித்தேன். இரசித்தேன். சும்மா சொல்லக் கூடாது ஒவ்வொரு பக்கமும் அட்டகாசம். மறுக்க மாட்டேன். நன்றி என்ற ஒன்று இருக்கிறது பார்! மறக்கவும் மாட்டேன். இப்போதுகூட வாசிக்க..."

காயத்திரி இரத்தம் சூடானாள். ஹரிகரன் கன்னத்தை நோக்கி வலது கரம் உயர்த்தினாள்.

ஹரிகரன் தன் கரத்தால் தடுத்து கன்னத்தை காத்துக்கொண்டார்.

"இந்தளவுக்கு வந்துவிட்டாயா நீ..?"

கேட்டுவிட்டு குரல் உயர்த்தி,

"மனோகரன்!"

குரல் கேட்டு உள் அறையில் இருந்து மனோகரன் வெளிப்பட்டான்.

"என்ன பொஸ்?"

என்றான் அவரையும், காயத்திரியையும் மாறி மாறிப் பார்த்தபடி.

"துள்ளுகிறாளடா."

"அதிகமாகவா?"

"யெஸ்!மிக அதிகமாக!"

"அடக்கிவிடலாமா?"

"அதைச் செய்!"

விகாரமாகச் சிரித்தார்.

மனோகரனால் மறு நிமிடமே அவன் கரங்களுக்குள் சிறைப்படுத்தப்பட்டாள் காயத்திரி.

"பயப்பிடாதே. உன் உயிருக்கு ஒருசேதமும் வராது. ஒத்துழைத்தால் உடலுக்கு கூட சேதம் வராது."

காயத்திரி மனோகரனின் பிடியில் இருந்து திமிறிக் கொண்டு,

"இதைவிட என்னை கொல்லடா பாவி!"

"சேச்சே! 'பூக்களைப் பறிக்காதீர்கள்' என்ற பொலிசிக்கு பூரண ஆதரவு கொடுப்பவன் நான். உனக்காக கொள்கையை விட்டுக்கொடுக்கலாமோ?"

"உயிரோடு நான் இருக்கும் வரை உன்னை நிம்மதியாக இருக்க விடமாட்டேனடா!"

ஹரிகரன் மீண்டும் விகாரமாய் சிரித்தார்.

"மாட்டாய். குறுக்கிட மாட்டாய்! குறுக்கிட்டால் நீ வெட்கத்தில் கூனிப் போவாய். இந்த ஹரிகரன் முட்டாளல்ல."

காயத்திரிக்கு அவன் என்ன சொல்லுகிறான் என்று புரியாமல் இருந்தது.

"மனோ காரியம் முடிந்ததும் அந்த கசட்டைப் போட்டுக் காட்டு. இரசிக்கட்டும்!"

அதே நொடியில் காயத்திரியின் மூக்கருகே ஒரு நெடி வீசியது.

மனோகரன் ஒரு கைக்குட்டையை அவள் மூக்கருகில் காட்டிக்கொண்டிருந்தான்.

காயத்திரிக்கு தான் மயக்கமாவது புரிந்தது.

மயக்கம் தெளிந்து விழித்தபோது கட்டிலில் கிடந்தாள்.

வயிறு பயங்கரமாக வலித்தது.

உயிர் போவதுபோல் வலி வாட்டி எடுத்தது.

"என்ன காயத்திரி. உடம்பெல்லாம் வலிப்பதுமாதிரி இருக்கிறதா? வயிறு வலிக்குமே? எல்லாம் உனக்காகத்தான். டாக்டரை இங்கேயே அழைத்து வந்து, நாலு பேருக்குத் தெரியாமல், காதும் காதும் வைத்தமாதிரி சுத்தமாக துடைத்தாகிவிட்டது. செலவுதான்! பட். ஒரு பெண்ணின் வாழ்க்கை வீணாகிவிடக்கூடாதல்லவா? அதுதான்!"

கட்டிலில் அவளது தலைப் பக்கமிருந்து ஹரிகரன் பேசினார்.

காயத்திரிக்கு கரு அழிக்கப்பட்டது புரிந்து போனது.

அடக்க முடியாத சோகம். எதிர்க்க முடியாத இயலாமை.

வாய்விட்டு அழுதாள். மற்றொரு பேரிடி காத்திருந்தது.

ஹரிகரனிடம் ஐந்து நட்சத்திர ஹோட்டலில்- பலவீனமான நிமிஷங்களில் அவள் தன்னை இழந்துபோனது,

வீடியோ கமராவில் பதிவாகி, மனோகரனால் இப்போது போட்டுக் காண்பிக்கப் பட்டது.

"காயத்திரி! இப்போது உனக்கு தற்கொலை செய்யலாமோ என்ற கெட்ட எண்ணங்கள் எல்லாம் வரும். என் சாவுக்கு ஹரிகரன் என்ற மோசக்காரன்தான் காரணம் என்று மறக்காமல் ஒரு தாளில் எழுதிவைத்துவிட்டு சாகலாமோ என்றும் யோசனை வரும். ஆனால், அப்படி நடந்தால் இந்த கசட் வெளியே வரும். அதில் பார் என் முதுகு மட்டும்தான் தெரிகிறது. நீ மட்டும் பத்திரமாக தெரிகிறாய்."

ஹரிகரன் சொல்ல அருகில் கைகட்டிக் கொண்டு நின்ற மனோகரன் அட்டகாசமாகச் சிரித்தான்.

"சோ... நீ விபச்சாரம் செய்ததாக நிரூபிக்க அது போதும். நான் தப்பிவிடுவேன். உன் அப்பா- அம்மா இன்னும் யாராவது சொந்த பந்தம் இருந்தால் அவர்கள் எல்லோரும் உன்னால்- தலை இருக்கிறதே தலை, அதைக் குனிய வேண்டி வரும். கூனிக் குறுக வேண்டியிருக்கும். புத்தி சொல்லிவிட்டேன். ஏதோ என்னால் இதுதான் முடிந்தது. இனி உன் சமர்த்து."

காயத்திரி பங்களாவில் இருந்து நடைப்பிணமாக வெளியே வந்தாள்.

'யாரிடம் சொல்லுவது? எங்கே போய் முறையிடுவது?'

'தவறு என்னிடம்தான். நானாக ஏற்படுத்திக்கொண்ட தவறு.'

காயத்திரிக்கு தன்மீதே தாங்க முடியாத ஆத்திரமாக வந்தது.

"ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய் காயத்திரி?"

அம்மா வீட்டிலே விசாரித்தாள்.

"வேலைக்கு போக பிடிக்காவிட்டால் நில். நானா போகச் சொன்னேன்?" அப்பா புரியாமல் பேசினார்.

எதிலுமே ஒட்ட மறுத்தது மனம். "வேலை பிடிக்கவில்லை" என்று வீட்டில் சொல்லிவிட்டு நின்றுவிட்டாள்.

வீட்டில் அடைந்து கிடக்க நினைவுகள் வாளாக மாறி மனதை அறுத்தன.

'பொலிசிடம் சொல்லலாமா? சாட்சி என்ன? பொலிஸ் கேட்குமே.'

அப்போதுதான் பிரியாவின் ஞாபகம் வந்தது.

பிரியாவை சந்தித்து சகல விபரமும் கொட்டித் தீர்த்தாள்.

கதை சொல்லி முடித்து பிரியாவை நோக்கியவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

பிரியா வியக்கவில்லை. பிரியா துடிக்கவில்லை. பிரியா ஏற்கனவே தெரிந்த கதை ஒன்றைக் கேட்பது போல காயத்திரி சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாள்.

□□

**"எ**ப்படி கதை சரிதானா?" என்று கேட்டாள் சூர்யா.

காயத்திரி திகைத்துப்போய், 'எப்படி ஒரு மில்லி மீட்டர்கூட பிசகாமல் மிகச் சரியாக என் கதையை தொடர்ந்து அறிய முடிந்தது இவளால்?' என்று வியந்து போய் நிற்க;

காயத்திரியின் திகைப்பையும், வியப்பையும் இரசித்தபடி சூர்யா சொன்னாள்;

"காயத்திரி நீ எனக்கு நன்றி சொல்ல வேண்டும்?"

"நன்றி...எதற்கு?"

"ஹரிகரனை கொன்றதற்கு!"

காயத்திரி அதிர்ந்து,

"அப்படியானால் வினோ?"

"ஹரிகரனை சுண்டு விரலால்கூட அவன் தொட்டதில்லை!"

"உண்மையாகவா.... வினோ... அப்பாவியா?"

"ஆமாம்!"

என்றாள் சூர்யா!

"பொய்!"

என்றது மற்றொரு குரல். குரலுக்குரியவர் குலாம்ஷா.

குலாம்ஷா அருகே யூனிபோமில் டி.ஐ.ஜி. டென்சில்.

(தொடர்ந்து வரும்)

# பேனா நண்பர் அரங்கம்



* கிறிஸ்டோபர்
* 22
* 150, நில்மினி செவன, கலஹா.
* பத்திரிகை வாசித்தல், நண்பர்கள் தொடர்பு.



* எம். சியாம்
* 18
* 660, நீரல்லை, அக்குறணை.
* பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.




* சசி
* 23
* தெற்கிலுப்பைக் குளம், வவுனியா.
* வழமையான பொழுது போக்குகள்.



* எம். அமீராபானு
* 19
* 314/12, சின்னத்தோணா வீதி, காத்தான்குடி-01.
* முத்திரை சேகரித்தல், வானொலி கேட்டல்.



* எஸ். சுதர்ஸன்
* 24
* AL-HUDA-ENGINEERING P.O.BOX NO-17015, DOHA-QATAR.
* புத்தகம் வாசித்தல், ரீ.வி.பார்த்தல், வானொலி கேட்டல்.



* மொஹமட் நிஸ்தார்
* 27
* P.O.BOX- 52152 AL-RIGGA 53462 KUWAIT.
* பேனா நண்பர் தொடர்பு, பத்திரிகை வாசித்தல்.

# வீர மக்கள் தின கவிதைப் போட்டி

'ஐக்கியமே பலம்' என்ற தலைப்பில் சுவிற்ஸர்லாந்திலுள்ள ஐக்கியத்தை வலியுறுத்துவோர் தினமுரசு மூலமாக நடாத்திய கவிதைப்போட்டி முடிவுகள்—

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (PLOT) செயலதிபர் அமரர் க. உமாமகேஸ்வரனின் நினைவு தினத்தை முன்னிட்டு இப்போட்டி நடத்தப்பட்டது.

**ஆறுதல் பரிசுபெறுவோரின் விபரம் ஏற்கனவே தரப்பட்டது. ஐநூறு ரூபாவுடன் நினைவுப்பரிசு பெறும் 10 பேரில் ஐந்து பேரின் விபரம் கீழே தரப்படுகிறது. ஏனைய ஐவரின் விபரம் அடுத்த முரசில் இடம்பெறும்.**

01. **ஆயுதப் போராட்டத்தில் இணைந்து கொண்ட முதற் பெண் ஊர்மிளாதேவி நினைவுப்பரிசு-**
கவித்தென்றல் எஸ்.டெய்ஸி
கலவான ஹோட்டன் எஸ்டேட்,
கலவான.

02. **களத்தில் உயிர் நீத்த முதல் பெண் ஷோபா நினைவுப்பரிசு-**
புதுவித்தகன்.எம்.எல்.சம்மூன்
143, மத்திய வீதி,
பொத்துவில்-02.

03. **முதல் பலியான கரும்புலி வீரன் மில்லர் நினைவுப்பரிசு-**
மலையூரான் ராஜா
ஐரபி தனியார் தோட்டம்,
நோர்வூட்.

04. **தியாகி பொன். சிவகுமாரன் நினைவுப்பரிசு-**
செல்வி.ஏ.அம்பிகா
2ம் குறுக்குத்தெரு- சூசைப் பிள்ளையார் குளம்,
வவுனியா.

05. **டெலோ தலைவர் அமரர் சிறீசபாரட்ணம் நினைவுப்பரிசு-**
அழகையா உதயகீர்த்தி
மட்/பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம்
களுவாஞ்சிக்குடி.

—அன்புடன்—
ஐக்கியத்தை விரும்புவோர் —சுவிஸ்—

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

www.padippakam.com




# தாய்

## 1

இது வெறும் கற்பனைகளின்
அணிவகுப்பல்ல.
சர்வாதிகாரத்தின் கால்களுக்கிடையே
விழுந்து கிடந்தவர்களின்
உண்மை வாழ்க்கையின்
மிகச் சிறந்த படப்பிடிப்பு!

காதலும்,சோகமும்,வீரமும்
கலந்த புரட்சியாளர்களது
வாழ்க்கையின் பதிவுமிது!

ரஷ்ய எழுத்தாளர்
மக்சீம் கார்க்கியின்
எழுத்துக்கள் அமரத்துவமானவை.
என்றும் இளமையானவை.

மெல்ல ஆரம்பித்து
கதை நடக்கும் சூழல் சொல்லி
சூடாக, சுவையாக
தொடரப் போகும் கதையிது.
தவறவிடாமல் தொடர்ந்து
வாசியுங்கள்!

நெகிழ்ந்து, உரமாகி, வசமாகி
என்று பல்வேறு உணர்வுகளில்
-இத் தொடர்-
உங்களை ஆழ்த்தும்!

-ஆ-ர்-

## மக்சீம் கார்க்கி

புகையும் எண்ணெய் அழுக்கும் நிறைந்த காற்றில், தொழிலாளர் குடியிருப்புக்கு மேல், நாள்தோறும் அந்த ஆலைச் சங்கு அலறிக் கூச்சலிடும். வேலையால் இழந்த சக்தியைத் தூக்கத்தால் மீண்டும் பெறாத தொழிலாளர்கள், ஆலைச் சங்கின் அழைப்புக்குப் பணிந்து, அழுது வடியும் வீடுகளிலிருந்து கடுகடுத்த முகங்களுடன் அடித்து மோதிக்கொண்டு வெளியே ஓடி, கலைபட்ட கரப்பான் பூச்சிகளைப்போலத் தெருக்களில் மொய்ப்பார்கள். ஒரு அலட்சியமான தன்னம்பிக்கையுடன் நின்று கொண்டிருந்த அந்த ஆலை, பதிற்றுக் கணக்கான விளக்குகளால் புழுதி படிந்த சாலையில் ஒளிபாய்ச்சிக் கொண்டிருக்கும். குளிரும் குமரியிருட்டும் கவிந்த அந்த அதிகாலையில், செப்பனிடப்படாத சாலையில், அவ்வாலையின் கற்கூடாரங்களை நோக்கி விரைவார்கள் தொழிலாளர்கள். பரபரக்கும் அவர்கள் பாதங்களின் கீழே புழுதி நெறுநெறுக்கும், தூங்கி வழியும் கரகரப்பான கூக்குரல்கள் எங்கும் எதிரொலிக்கும். கொச்சைத் தனமான வசவுகள் காற்றைச் சீறிக் கிழிக்கும். இயந்திரங்களின் ஓங்காரமும், நீராவியின் முணமுணப்பும் இத்தொழிலாளர்களுக்கு எதிராக மிதந்து வரும். குண்டாந்தடிகள் போன்ற, நீண்ட கரிய புகைபோக்கிகள், அக்குடியிருப்புகளைவிட உயர்ந்து நின்று துயரமும், கடுகடுப்பும் காட்டிக்கொண்டிருப்பது தொலை தூரத்திலிருந்தும் தெரியும்.

சாயங்காலச் சூரியன், வீட்டுச் சாளரங்களின்மீது, ஓய்ந்துபோன தன் கிரணங்களைப் படரவிடும் மாலைப் பொழுதில், செமித்துத் தள்ளப்படும் கசடுபோல, தன் பாறை வயிற்றுக்குள்ளிருந்து, தொழிற்சாலை மக்களை வெளித்தள்ளும். மீண்டும் அவர்கள் அந்த அசுத்தமான தெருக்களின் வழியே கறுத்துப் புகையடித்த முகங்களோடு, பளபளக்கும் பசித்த பற்களோடு, யந்திர எண்ணெயின் பிசுக்கு நாற்றம் அடிக்கும் உடலங்களோடு, நடந்து வருவார்கள். அப்போது அவர்களது குரலில் ஓரளவு உயிர் இருக்கும்; உவகையும் கூட இருக்கும். அன்றைய நாள் வேலை முடிந்தது; வீட்டில் உணவும் ஓய்வும் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கும்.

தொழிற்சாலை யந்திரங்கள் தேவையான மட்டும் அந்தத் தொழிலாளர்களது சக்தியை உறிஞ்சித் தீர்த்து விடுவதோடு அந்த நாள் விழுங்கப்பட்டு விடும். எந்தவிதமான எச்சமிச்சங்களும் இல்லாமல் அன்றையப் பொழுது அழிந்து கழியும்; மனிதனும் தனது சவக்குழியை நோக்கி ஓரடி முன்னேறி விடுவான். ஆனால் இப்போதோ ஓய்வின் சுகத்தையும், புகை மண்டிய சாராயக் கடையின் சந்தோஷத்தையும் அவன் எதிர்பார்ப்பான்; அதில் அவனுக்குத் திருப்தி.

ஞாயிற்றுக்கிழமைகளில் அந்த ஜனங்கள் பத்து மணி வரையிலும் தூங்கிக்கொண்டிருப்பார்கள். கண்ணியமான இல்லறவாசிகள் தங்களிடமுள்ள சிறந்த ஆடையணிகளைத் தரித்துக்கொண்டு பிரார்த்தனைக்காகத் தேவாலயத்துக்குச் செல்வார்கள்; போகும் போது இளவட்டப் பிள்ளைகள் மதத்தின் மீது காட்டும் அலட்சியத்தைக் கண்டித்துச் சரமாரியாகப் பேசிக்கொண்டே செல்வார்கள். பிரார்த்தனை முடிந்த பின்னர் அவர்கள் வீட்டுக்குத் திரும்பி, அப்பம் சாப்பிடுவார்கள்; மீண்டும் மாலைவரை தூங்கத் தொடங்குவார்கள்.

வருஷக் கணக்காக அதிகரித்துக் கொண்டே வரும் அலுப்பினால், அவர்களது வயிற்றுப் பசிகூட மந்தித்துப் போய்விட்டது; அந்த வயிற்றை உணர்ச்சி பெறச் செய்வதற்காக அவர்கள் கார நெடி நிறைந்த ஓட்கா மதுவைக் குடித்துக்குடித்துக் கிளர்ச்சி தரும் எரிச்சலை உண்டு பண்ணிக் கொள்வார்கள்.

மாலை நேரங்களில் அவர்கள் வீதிகளில் சுற்றித் திரிவார்கள்; ரப்பர் செருப்பு உடையவர்கள், தெருவின் தரை காய்ந்து போயிருந்தாலும்கூட, அதைப் போட்டுக்கொண்டு திரிவார்கள்; குடை வைத்திருப்பவர்கள், பொழுது வெளிறிட்டு நிர்மலாக இருக்கும் போதும், அதை உடன் கொண்டு போவார்கள்.

வழியில் தங்கள் நண்பர்களைச் சந்திக்கும் போது தொழிற்சாலையைப் பற்றியும் யந்திரங்களைப் பற்றியும் பேசிக்கொள்வார்கள்; மேஸ்திரிகளை வைவார்கள். அவர்கள் தங்கள் தொழிலோடு சம்பந்தப்பட்ட விஷயங்களையே பேசினார்கள்; சிந்தித்தார்கள். பேசிய விஷயத்தையே பேசிப் பேசிச் சலித்துப் போன அவர்களது அன்றாடப் பேச்சில் என்றாவது ஒரு நாள்தான் ஏதோ ஒரு சக்தியற்ற எண்ணத்தின் ஒளி லேசாக மின்னிட்டுப் படர்ந்து மறையும். அவர்கள் வீட்டுக்குத் திரும்பியவுடன் தங்கள் மனைவிமாரோடு சண்டை பிடிப்பார்கள்; அடிக்கவும் செய்வார்கள்; தங்களது முஷ்டிகள் வலி கண்டாலும்கூட அடிப்பதை நிறுத்தமாட்டார்கள். இளைஞர்கள் சாராயக் கடைக்கு அடிக்கடி செல்லுவார்கள்; அல்லது வேறு யார் வீட்டுக்காவது சென்று பொழுது போக்குவார்கள்; அங்கு ஆர்மோனியம் வாசிப்பார்கள், ஆபாசமான பாட்டுக்களைப் பாடுவார்கள், ஆடுவார்கள், ஏசுவார்கள், குடித்துக் கிடப்பார்கள். அவர்கள் உழைத்து உழைத்து மிகவும் ஓய்ந்து போனவர்களாதலால், குடித்தவுடனேயே போதை வெறி உச்சிக்கு ஏறிவிடும். அவர்களது இதயங்களில் ஏதென்றறியாத எரிச்சல் குடிகொண்டிருக்கும். எனவே இந்த மாதிரியான உணர்ச்சிகளிலிருந்து விடுபடுவதற்காக, சிறு சந்தர்ப்பம் கிடைத்த போதிலும் அந்நேரத்தில் அவர்கள் சீக்கிரமே உணர்ச்சிவசப்பட்டு, ஒருவரையொருவர் மிருகத்தனமான மூர்க்க வெறியோடு கட்டித்தழுவி உருண்டு புரள்வார்கள். இதனால் ரத்தக் காயங்கள் காணும் சண்டைகள்தான் கண்ட பலன். சமயங்களில் அந்தக் காயங்கள் படுகாயமாய்ப் போவதுண்டு; சில வேளை கொலைகளே நிகழ்ந்து விடுவதுமுண்டு.

அவர்களது மனித சம்பந்தத்தை மறைமுகமான குரோத உணர்ச்சி ஆக்கிரமித்திருக்கும்; அவர்களது தசைக் கோளங்களின் தளர்ச்சியை எப்படி ஈடு செய்து முறுக்கேற்ற முடியாதோ அது போலவே இந்த உணர்ச்சியும் வெகு நாட்களாய் ஊறி உறைந்து போயிருக்கும். அவர்கள் பிறக்கும்போதே இந்தத் தீய உணர்ச்சியும் அவர்களோடு பிறந்து ஓர் இருண்ட நிழலைப்போல், அவர்கள் சாகிறமட்டும் அவர்களைத் தொடர்ந்து செல்லும்; இலக்கற்ற, வெறுக்கத்தக்க கொடுஞ் செயல்களுக்கே அவர்களைத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கும்.

விழா நாட்களில், இளைஞர்கள் வெகு நேரங்கழித்து அடிபட்ட முகங்களுடன் வீடு திரும்புவார்கள். திரும்பும்போது அவர்களது துணி மணிகள் எல்லாம் கிழிந்து தும்பு தும்பாகி, புழுதியும் சேறும் படிந்திருக்கும். சமயங்களில் அவர்கள் தமது தோழர்களுக்குத் தாம் கொடுத்த அடிகளைப் பற்றி வாய் வீச்சு வீசி வீறாப்புப் பேசுவார்கள்; சமயங்களில் தங்களது குடிவெறியை, பரிதாப நிலையை, இழி நிலையை, கசந்த வாழ்வை, அவமானத்தை எண்ணி அழுவார்கள்; சீறி யெழுவார்கள் அல்லது சோர்ந்து போவார்கள். சமயங்களில் எங்கோ ஒரு வேலிப் புறத்தின் நிழலிலாவது, சாராயக் கடையின் தரையிலாவது போதை மயக்கத்தில் கிடக்கும் தம் மக்களைத் தேடிக் கண்டு பிடித்துப் பெற்றோர்கள் வீடு கொண்டு வந்து சேர்ப்பார்கள். வீடு வந்து சேர்ந்த பிறகு முதியவர்கள் அவர்களை வாய்க்கு வந்தபடி திட்டுவார்கள்; அந்த இளைஞர்களது தொளதொளத்துப்போன உடம்பைக் குத்துவார்கள், பிறகு அவர்களை ஏதோ ஒரு அன்புடன் படுக்கையில் பிடித்துத் தள்ளித் தூங்க வைப்பார்கள். அதிகாலையில் அலறும் ஆலைச் சங்கின் கோபாவேசமான கூச்சலைக் கேட்டு எழுந்திருந்து வேலைக்குச் செல்ல வேண்டுமே என்பதற்காகவே இவ்வாறு செய்வார்கள்.



அவர்கள் தங்கள் குழந்தைகளைச் சரமாரியாக உதைப்பார்கள், திட்டுவார்கள்; என்றாலும் இளைஞர்கள் குடிப்பதோ சண்டை சச்சரவு செய்வதோ அவர்களுக்குத் தவறாகப் படுவதில்லை. தந்தைமார்கள் இளைஞர்களாயிருந்த காலத்தில் அவர்களுந் தான் குடித்தார்கள், சண்டையிட்டார்கள், அவர்களது பெற்றோர்களும் பதிலுக்கு அவர்களை உதைக்கத்தான் செய்தார்கள். வாழ்க்கை அப்படியே தான் பழகிப்போய் விட்டது. சீராகவும் மெதுவாகவும் எங்கோ அது வருஷக் கணக்கில் சேற்றுக் குழம்பாக ஓடிக்கொண்டிருந்தது; பழைய காலத்துப் பழக்க வழக்கங்களுடன் இறுகப் பிணைந்து நாள் தோறும் ஒரே மாதிரியான சிந்தனையும் செயலுமாய் இயங்கிக்கொண்டிருந்தது. அந்த வாழ்வில் எந்தவித மாறுதலையும் ஏற்படுத்த எவருமே விரும்பவில்லை.

சில சமயங்களில் வேறு பிரதேசங்களிலுள்ள மக்கள் அந்தத் தொழிலாளர் குடியிருப்புக்கு வருவதுண்டு. அந்த இடத்துக்குப் புது ஆசாமிகள் என்ற காரணத்தால், இங்குள்ளவர்களின் கவனத்தை ஆரம்பத்தில் அவர்கள் கவர்வதுண்டு; அவர்கள் வேலை பார்த்துவரும் இடங்களைப் பற்றிய அதிசயக் கதைகளைச் சொல்லும்போது இங்குள்ளவர்களுக்கு அதில் இலகுவில் ஈடுபாடும் ஏற்படுவதுண்டு. ஆனால், அந்தப் புதுமை சீக்கிரத்திலேயே போய்விடும்; அந்த மனிதர்களும் இவர்களுக்குப் பழகிப் போய்விடுவார்கள்; பிறகு அவர்களைக் கவனிப்பதைக்கூட இவர்கள் நிறுத்தி விடுவார்கள். புதிதாக வருபவர்கள் சொல்லுவதிலிருந்து இவர்களுக்கு ஒரே ஒரு உண்மை புலப்படும். தொழிலாளிகளின் நிலைமை எங்கும் ஒரே மாதிரிதான் இருக்கிறது என்பதுதான் அது. இதுதான் உண்மையென்றால், பிறகு எதைப்பற்றி, என்ன பேசுவது?

ஆனால், அந்தப் புதிய மனிதர்களில் சிலர் இந்தக் குடியிருப்பு மக்கள் இதுவரை கேட்டிராத புது விஷயங்களைப் பற்றிப் பேசுவார்கள். ஆட்சேபிக்காமல் நம்பிக்கையின்றி அவற்றைக் கேட்பார்கள். சிலருக்குக் குருட்டுத்தனமான கிளர்ச்சியை அவை உண்டாக்கும். சிலருக்கு லேசான இதய அதிர்ச்சியைத் தரும். சிலருக்கோ அடையாளமே தெரியாமல் மங்கித் தோன்றும் ஒரு சிறு நம்பிக்கை மனத்தில் எழும்பிக் குறுகுறுக்கும். ஆனால் அவர்கள் அனைவருமே தங்களது வாழ்க்கையை மேலும் சிரமத்துக்கு ஆளாக்கிவிடக் கூடிய அந்த வேண்டாத உணர்ச்சியையும் கிளர்ச்சியையும் மறக்கடித்து விரட்டுவதற்காக மேலும் மேலும் குடித்துத் தீர்ப்பார்கள்.

அந்தப் புதிய ஆசாமிகளில் யாரேனும் ஒருவரிடம் அவர்கள் ஏதாவது ஒரு புதுமையைக் காண நேர்ந்தால், அதை அந்தத் தொழிலாளர்கள் மறக்கவே மாட்டார்கள். தம்மைப் போலில்லாத அந்த ஆசாமியிடம் சர்வ ஜாக்கிரதையுடன் நடக்க முனைவார்கள். தங்களது தற்போதைய வாழ்வின் ஒழுங்கை அவர் கெடுத்துக் குலைத்து விடுவாரோ என்று அவர்கள் பயப்படுவது போலிருக்கும். இப்போதைய வாழ்க்கை சிரம ஜீவனம்தான் என்றாலும் அமைதியாகவும் குழப்பமற்றதாகவும் இருக்கிறதே என்பதே அவர்கள் அடையும் திருப்தி. நிரந்தரமாக ஒரே சுமையாகத் தம்மை அழுத்தும் வாழ்க்கையைத் தாங்கிக் கொள்வது அவர்களுக்குப் பழகிப்போய் விட்டது. மேலும் தங்களது கஷ்டத்துக்கும் ஒரு நிவர்த்தி உண்டு என்ற நம்பிக்கையே அவர்களுக்கு இல்லையாதலால், தமது வாழ்க்கையில் புதிதாக வரும் எந்த மாறுதலும் தங்கள் துயரங்களையும் கஷ்டங்களையும் அதிகரிக்கத்தான் செய்யுமேயன்றி ஒருக்காலும் அவற்றைக் குறைத்துவிடப் போவதில்லை என்றே அவர்கள் கருதினார்கள்.

எனவே, புதுக் கருத்துக்களைக் காதில் போட்டுக்கொள்ளாமலேயே ஒதுங்கிச் செல்வார்கள் அவர்கள். அந்தப் புதிய ஆசாமிகளும் அங்கிருந்து மறைந்து போவார்கள். அங்கேயே தங்கும் ஓரிருவர் அங்குள்ளவர்களைப் போலவே நாளடைவில் வாழத் தொடங்குவார்கள். அவ்வாறு ஒருங்கிணைய முடியவில்லையென்றால் ஒதுங்கி வாழ்வார்கள்...

இப்படிச் சுமார் ஐம்பது வருஷங்கள் வாழ்ந்த பிறகு, ஒரு தொழிலாளி செத்து மறைவான்.

(தொடர்ந்து வரும்)

# நிழல் எண்ணங்கள்




## அ. ரஜீசன்

கண்கள் அழுது சிவப்பாக இருக்க வேண்டும்.

உடலில் தழும்புகள் இருக்க வேண்டும்.

முகம் எதனையாவது பறிகொடுத்த ஏக்கத்தில் இருக்க வேண்டும்.

அவளுக்கு கண்கள் சிவப்பாக இருக்கவில்லை.

உடல் அழகாக இருந்தது.

முகம் மலர்ச்சியாகக் காணப்பட்டது.

எனக்கு எரிச்சல் வந்தது. பொறாமையால் உடல் கொதித்தது.

இவ்வளவு கால என் கவிதைகள் மரணித்ததாகத் தோன்றியது. மரணித்த கவிதைகள் என்னை முறைத்தன. முறைப்பு எனக்குள் ஆத்திரம் தந்தது. ஆத்திரம் தீர்க்க யாருமே, எதுவுமே இல்லாததினால் என் மீதே வெறுப்பு வந்தது. வெறுப்பு எனை நிமிர விடாமல் குனிய வைத்தது. குனிந்து என்னைப் பார்த்தேன். எனக்குள் இறங்கி நடந்து போனேன். என் சுயநலம் மிக்க போலித் தனங்கள் அவளைப் பார்த்தபின் தமக்குத்தானே சூடுபோட்டுக் கொண்டு இருந்ததை பார்க்க யோசனை வந்தது. யோசனை தெளிவு தந்தது.

கௌரி!

மூன்று வருடங்களுக்கு முன்பு மனவாசலில் தோரணம் கட்டி இதயத்தில் திருவிழா நடத்தியவள்.

கௌரி-ஈஸ்வர் என்றால் அந்த வளாகம் எம் விலாசம் சொல்லும்- சொல்லியது. என் பொருளாதார பலத்தில்தான் அதன் திரட்டுதலில்தான் என் இரு தங்கைகளுக்கும் திருமணம் என கௌரியின் வீடு அறியும் வரை அது சொல்வது இனித்தது. அறிந்தபின் முதலில் கௌரியின் வீட்டாருக்குக் கசந்தது. பின் கௌரிக்குக் கசந்தது.

பின் கௌரி எனக்குள் கசந்தாள்.

இருவரும் சண்டைபோடாமல், ஆர்ப்பரிக்காமல், ஒருவரை ஒருவர் திட்டித் தீர்க்காமல் விலகினோம்; மறந்தோம். வளாகத்தின் ஆலமர விழுதுகளின் மறைவினில் முத்தமிட்டுக்கொண்டதை; ஒரு நுவரெலிய இரவின் குளிரில் அவளின் பெண்மையை நானும் எனது ஆண்மையை அவளும் அடையாளம் கண்டதை எல்லாம் மறந்தோம்.

புன்முறுவலுடன் விலகினோம்.

முறுவலுக்குப் பின்னால் எம்மிருவருக்கும் காயங்கள் இருந்தன. கண்களுக்கு பின்னால் கண்ணீர் இருந்தது.

காதல் சுகமும் இதமும் வீணானது பற்றி கவலை இருந்தது. ஆனால் இன்றைய யுகத்திற்கு சுகமும், இதமும் சோறு போடாது எனப் புரிந்து விலகினோம்.

சோறுதான் வாழ்க்கை என இல்லாவிடினும் அதன் முக்கியத்துவத்தின் பின்தான் ஏனையவை என புரிந்து நாகரிகமாக விலகினோம்.

போராடி இருக்கலாம் என பிறர் கூறுவர். என்னால் போராட முடியவில்லையே என அவளை பிரிந்த பின்தான் கவலை வந்தது.

அதன் பின் நான் மாறித்தான் போய் விட்டேன். என் கவிதைகளில் சோகம் கலந்தது. கவலை தெரிந்தது. அபலப் பெண்ணுக்கு வாழ்வு கொடுப்பதாகவும், அவள்மீது அக்கறை கொள்வதாகவும் இருந்தது. சிறுகதை எழுதினால், அதன் கரு காதலித்து ஏமாற்றிய பெண் தன் புருஷனால் வதை படுவதாகவும், தன் முதல் காதலனை எண்ணி ஏங்குவதாகவும் இருக்கும். உண்மையிலேயே உள் மனதில் அப் பெண் கௌரியாக இருப்பாள். அது இன்றுவரைக்கும்- கௌரியை பதுளையில் வைத்து காணும்வரைக்கும் எனக்கும் தெரியாமல் இருந்தது. இப்படி எழுதுவதன் காரணம் அவள்மீதான தூய காதலென்றே இன்றுவரை நினைத்து வந்தேன். இப்போதுதான் புரிகிறது. முற்றிலும் சுயநலமானது எனவும் அவளுக்கு அப்படி ஒரு நிலை வராதா எனும் கெட்ட எண்ணமும் தான். ம்..ம்.. எவ்வளவு கெட்டவன் நான்.

இன்று காலையில் பதுளையில் கௌரியை எதிர்பாராவிதமாக சந்திக்க நேர்ந்தது. அழகாக இருந்தாள். கையில் ஒரு குழந்தை- அது கொடுத்த தாய்மையின் இலட்சணமாக மேலும் பொலிவுற்று இருந்தாள். அருகில் அவள் கணவன். என்னைக் கண்டதும் ஓடிவந்து கதைத்தாள். தன் கணவனை அறிமுகப்படுத்தினாள்.

"இவர்.... என் ஹஸ்பெண்ட். பெயர் தினேஷ்" என்றவள் தொடர்ந்து-

"தினேஷ். நான் முன்னமே சொல்லல.. இவர்தான் அந்த ஈஸ்வர்" என என்னை அறிமுகப்படுத்தினாள்.

"அந்த" வில் அழுத்தம் கொடுத்திருந்தாள். என்னைப் பற்றிய அவளின் அறிமுகம் எனக்குள் அதிர்ச்சியாக இருந்தது. மேலும் என் சேம நலன்கள் விசாரித்து பரஸ்பரம் கைகுலுக்கி விடைபெற்றோம்.

எனக்கு அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும், சிறிது பொறாமையாகவும் இருந்தது. அவளது கணவன் நல்லவன். முக்கியமாக என்னைவிட நல்லவன், என புரியும் பொழுது எனக்கு ஏற்பட்ட தன் நிலை விளக்கம்தான் என்னை எனக்குள் அடையாளம் காண உதவியது. எனது காதலின் உண்மை புரிந்தது- சுட்டது.

இப்போது நான் ஓடும் ரயிலில் இருந்து கொண்டு இவ்வளவையும் நினைத்துப் பார்க்கின்றேன். மெதுவாக என் சூட்கேசை திறந்து என் கவிதை கொப்பியை எடுத்து பார்க்கின்றேன். அதில் நேற்று எழுதி முடிக்கப்படாத கவிதை எனை உறுத்தியது. 'உதிர்ந்த ரோஜா' எனும் கவிதை அது. ரோஜாவாக கௌரியை உருவகப்படுத்தி எழுதிய கவிதை அது. வெறுப்பாக இருந்தது. கொப்பி முழுதும் அது போன்ற கவிதைகள்தான் நிறைந்திருந்தன. எனக்குள் என் மீதான அருவருப்பு அதிகரிக்க கொப்பியை ரயில் யன்னலினூடாக வீசி எறிந்தேன். சூட்கேசினுள் இருந்து ஒரு வெள்ளைத் தாள் எடுத்து புதிதாக ஒரு கவிதைக்கு தலைப்பிட்டேன். "மலர்ந்த ரோஜாவிற்கு'...

வெளியிலிருந்து வந்த காற்று- குளிர் காற்று என்னை முழுவதுமாக தழுவி வெளியே சென்றது. ரயில் தன் பாட்டுக்கு ஓடிக் கொண்டு இருந்தது.

www.padippakam.com


# எச்சில் உறவுகள்

-மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்-

## சிறுகதை

'இன்று காலை!
லயத்தில் ஒரு கூட்டம் கூடுது. தோட்டத் தொழிலாளர்கள் அத்தனைபேரும் சமூகமளிக்க வேண்டும். மீறினால் தண்டிக்கப் படுவீர்கள். அல்லது விசாரணைக்கு ஆளாகுவீர்கள். பெரியதுரைதான் கூட்டத்துக்கு தலைமை தாங்குகிறார்' என்று கங்காணி வேலு சொல்லிப்போனதன் நிமித்தம் லயத்துக்குப் போகத் தயாராகிக்கொண்டிருந்தாள் செண்பகம்.

துரைசிங்கம் தலைமை தாங்குவதால் மகள் அழகை அழைத்துப்போகவும் பயம். ஆகவே, அழகை வீட்டில் இருக்கச் சொல்லி விட்டு, கதவை பலமாக இறுக்கி மூடிக் கொண்டு, ஆயிரம் தடவை கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு புறப்பட்டுப் போனாள்.

கூட்டம் கூடியது.

துரை வந்திருக்கவில்லை. பதிலாக அவரது உதவியாளர் ஒருவரே தலைமை தாங்கினார். சம்பளம், போனஸ் விஷயமாகவே கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

செண்பகத்துக்கு இருப்புக்கொள்ளவில்லை. அழகை நினைக்க நினைக்க நெஞ்சில் கிலி பிறந்தது. கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டாள்.

காலை எட்டு மணிக்குத் துவங்கிய கூட்டம் கலையும்போது மதியம் பன்னிரெண்டு மணி. கங்காணி மாரியின் மனைவி செண்பகம் ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிச் சென்றாள். தூரத்தில் இருந்தே வீட்டை அவதானித்தவளின் நெஞ்சில் 'சுருக்' என்றது. வீட்டின் கதவு திறந்து கிடந்தது.

செண்பகம் ஓடிப்போனாள்.

வீட்டில் அவள் மகள் அழகு இல்லை.

வீடு ஒரு போர்க்களமாக மாறிவிட்டிருந்தது.

நெஞ்சு 'படக் படக்' என அடிக்க, அழகைத் தேடி அலைந்தாள் செண்பகம்.

தூரத்தே அழகு வந்துகொண்டிருப்பது கண்ணுக்குத் தெரிந்தது.

அருகே ஓடிப்போனாள்.

அழகின் சேலை கசங்கி, ஜாக்கெட் கிழிந்து, கூந்தல் கலைந்திருந்தது.

அன்னையைக் கண்டதும் நெஞ்சில் முகம் புதைத்து ஓவென அழத் தொடங்கினாள் அழகு. செண்பகமும் மகளை இறுக்கமாகத் தழுவிக்கொண்டாள்.

"அம்...அம்மா... அம்மா... எ.... என்னை து...துரை கெடுத்திட்டான்மா." செண்பகத்தின் தலையில் இடியிறங்கியது.

□□□

அந்தக் குடிசையில் இன்று அடுப்பு எரியவில்லை. அன்னைக்கும் மகளுக்கும் பசியும் தெரியவில்லை. மனதில் பிரச்சினைகள் வெந்துகொண்டிருக்கும் பொழுது, பசியெங்கே தெரியப்போகிறது.

மதிய நேரம், மாலைப் பொழுதாய் மாறிக்கொண்டிருந்தது. மேகங்கள் அவசரமாய் ஓடிக்கொண்டிருந்தன.

செண்பகம் மகளை உற்றுப் பார்க்கிறாள். அழகு காலில் முகம் புதைத்து அழுவது தெரிகிறது. சத்தமின்றி மனதுக்குள் அழுகின்றாள். அவளைப் பார்க்க செண்பகத்தின் உள்ளமும் ஓவென அழத் தொடங்கியது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

"அழகு.."

"என்னம்மா?"

அண்ணார்ந்து கேட்டாள் அழகு.

"வாம்மா போய் அந்த துரைகிட்ட ஒரு முடிவு கேட்டுட்டு வருவோம்."

"அம்மா... அவன்தானே அப்பவே முடிவு சொல்லிட்டான். இப்போ நாம போனாலும் இதே முடிவுதானம்மா. தவிர, என்னை ஏத்துக்கமாட்டான்மா..."

அழகின் குரல் தெளிவாகக் கேட்கிறது.

"முடிவு சொல்லிட்டான்னியே... எதுக்கும்மா முடிவு சொன்னான்? நம்ம வாழ்க்கைக்கா- இல்ல நம்ம சாவுக்கா?" செண்பகம் பேசமுடியாமல் திணறுகிறாள்.

"அம்மா.."

"அழகு...அந்த துரைக்கு நம்ம கற்பு ஒரு விளையாட்டுப் பொருளா இருக்கு. ஆனால்... நம்ம குடும்பத்தில் இதுவரைக்கும் இப்படி நடந்ததில்ல. கற்புங்கிறது நம்மோடை வாழ்க்கைம்மா. ஆனால்... நீயோ வாயும் வயிறுமா வந்து நிற்கிறே. நான் என்னம்மா பண்ணிக்கிறது? நாளைக்கு நம்ம தோட்டத்து ஆட்களுக்கு இது தெரிய வந்தால் காறித் துப்புவாங்கம்மா. இதெல்லாம் நமக்குத் தேவையா?"

"அம்மா நீங்களுமா?"

"இல்லே அழகு... முள்ளுல சேலை பட்டாலும், சேலையில முள்ளு பட்டாலும் சேலைக்குத்தான்மா நஷ்டம். அவங்க ஆண் பிள்ளைங்க, அதுவும் நாலெடத்துல செல்வாக்கு உள்ளவங்க, ஆனால்... நாம சாப்பாட்டுக்கே கஷ்டப்படுற பொண்ணுங்க. எது நடந்தாலும் நமக்குத்தான் நஷ்டம்.



வாம்மா போகலாம். துரையோட கையைக் காலைப் பிடிச்சாலும் வழி பண்றேன். வாம்மா."

செண்பகம் எழுந்து அழகின் அருகே போய் நிற்கிறாள்.

தாயின் வார்த்தைகள் அழகின் மனதில் உறைக்கின்றன.

கட்டாயம் இதற்கு நீதி வேண்டும். சாதாரண நீதியல்ல.

அழகு கண்களைத் துடைத்தபடியே "வாம்மா போகலாம்." தாயையும் அழைத்துக் கொண்டு நீதி கேட்கப் போகிறாள்.

அவர்கள் துரையின் பங்களாவை நோக்கிப் போகிறார்கள்.

துரையின் பங்களாவை நெருங்க, ஏதோ வித்தியாசம் நடப்பதாக அந்த இருவரும் உணர்ந்து கொள்கின்றனர்.

வானம் புகைமண்டலமாக மாறி, எங்கும் புகை மண்டியிருக்கக் காணப்படுகிறது. பச்சை மரங்களுக்கு இடையேயும், மேலாகவும் புகைக்கோவைகள் சுருள் சுருளாகப் பரந்து விரிந்து...

"அம்மா...அதோ பாரும்மா."

அழகு சுட்டிக்காட்டிய திசையில் தன் பார்வையை செலுத்துகிறாள் செண்பகம்.

அங்கே! துரைசிங்கத்தின் அழகான இரண்டு மாடி பங்களா தீக்குள் அமிழ்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. தீ வானை எட்டியிருக்க... பொலிசாரும் தோட்டத் தொழிலாளர்களும் ஓடியோடி தீயை அணைக்க முற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

தீ கொழுந்து விட்டெரிகின்றது.

தீயை அணைக்க முற்பட்டவர்கள் தோற்றுப் போகின்றனர்.

"ஐயோ பரிதாபம்!"

அழகு இலேசாய் முணுமுணுக்கிறாள்.

அந்தப் பக்கம் யதார்த்தமாய் ஓடிவந்த கங்காணியிடம் செண்பகம் என்ன நடந்ததென்று விசாரிக்கிறாள்.

"அதை என் வாயால எப்படிச் சொல்வேன் செண்பகமக்கா. மதியம் சாப்பிட்டு விட்டு துரை தூங்கிட்டு இருந்தாரு. மேலே ஃபேன் சுத்திட்டிருந்தது... கரன்ட் போற வயர்ல என்னமோ கோளாறுபோல, திடீரென்று தீப்பிடிச்சிருச்சி. அவரோதான். துரையைக் காப்பாத்தவும் முடியல. அவரு அப்படியே கருகிப் போயிட்டாரு.." அழுத கண்களுடன் கங்காணி அப்பால் ஓடுகிறார்.

செண்பகத்துக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

மகளின் நிலையை நினைக்க அடிவயிற்றில் இருந்து அழுகை பீறிட்டது.

"வாம்மா போகலாம்."

"எங்கே அழகு?"

"வூட்டுக்குப் போவோம்மா. இங்கேயிருந்து என்ன பண்றது?"

"அப்போ... வயிற்றுல வளர்ற குழந்தை..?"

"வளரட்டும்மா.."

"என்ன?" செண்பகம் அதிர்ந்து போகிறாள்.

"அம்மா.. நான் கெட்டுப் போனது ஊரு உலகத்துக்குத் தெரியவிட்டாலும்கூட, என் மனசாட்சிக்குத் தெரியும்மா. வயிற்றுல வளர்ற குழந்தையைக் கலைச்சுப் போட்டாலும், மனசுல இருக்கிற காயத்தை மாத்திட முடியாதம்மா.."

"அப்போ...என்ன பண்ணுறது அழகு?"

செண்பகத்தின் குரல் அடைபட்டுப் போனது.

"குழந்தையைப் பெத்து வளர்க்கிறேன்மா. என் குழந்தையையாவது நல்லதோர் நிலைக்குக் கொண்டு வர வேணாமா? தேயிலைக் கொழுந்து பறிக்கிற நாமகூட, கொழுந்து மாதிரி கிள்ளப்பட்டுப் போறோம். இதற்கு விடிவே இல்லையா? அதனால... நான் குழந்தையை வளர்க்கப் போறேன்மா. அந்த துரை எனக்குத் தாலி கட்டாவிட்டாலும்கூட, நான் அவருடன் ஒரு சில நிமிடங்களாவது உடலால வாழ்ந்துட்டேன்மா. அதே மாதிரி உள்ளத்தால வாழவும் பழகிக்குவேன்மா. ஏம்மா...இது தப்பா?"

அழகு கேட்கிறாள். கண்ணீர் முத்துக்கள் உதிர்கின்றன.

"ஆனாலும்...இது எச்சில் உறவம்மா. அழிச்சிடுறதுதான் நல்லது."

செண்பகத்தின் வார்த்தைகள் கரகரக்கின்றன.

"அம்மா... உறவு மட்டும் எச்சிலாகிப் போனால் அழிச்சிடலாம்மா. ஆனால்... உடம்பே எச்சிலானப்புறம் என்னம்மா பண்றது? அழிச்சிக்கச் சொல்றியாம்மா...?"

"அ..ழ...கு..!"

செண்பகத்தினால் பதில் சொல்லத் தெரியவில்லை. அழகு மெய்மறந்து திரும்பவும் சொல்கிறாள். "பெண் பாவம் பொல்லாததம்மா.."

அதை ஆமோதிப்பதுபோல-
பங்களா கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்றது,
-செண்பகத்தின் உள்ளத்தைப்போல...

# தங்கமடி தங்கம்

வெளிநாடுகளில் புகலிடம் தேடியுள்ள நம்மவர்கள் இலக்கியம் படைப்பதை மறக்கவில்லை. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களால் பாரிசிலிருந்து வெளியிடப்பட்டுள்ள கதைத் தொகுப்பிலிருந்து மற்றுமொரு கதை பெறப்படுகிறது.

சுவிஸிலிருந்து
-ஏ.ஜே.ஞானேந்திரன்-

நேரத்திற்கு வந்துவிட்ட டிராமில் ஏறிக்கொண்டபோது காந்தனுக்கு மனதிற்குள் உற்சாகம் கொப்பளித்தது.

"உனக்கு எங்கடா டிக்கட் கிடைக்கப் போகிறது" என்ற ஒரு 'நக்கல்' சிரிப்போடல்லவா வசந்தன் சொல்லியிருந்தான். "சும்மா பேய்க் கதை கதையாதையும். டிக்கட் போட வரேல்லையெண்டா ஒரு பக்க மீசையை வழிச்சிப் போடுறன்" என்ற சவாலோடல்லவா அவன் புறப்பட்டுப் போனான். வசந்தன் சொன்னதிலும் பிழையில்லைத்தான். கடையில் டிக்கட் எடுத்த ஒரே அடிபாடுதான். எனினும் ஒரு பெரிய நோட்டும், இன்னொரு சிறிய நோட்டுமாக 150 பிராங்கை எறிந்து, ஒரு டிக்கட்டின் சொந்தக்காரனாகியபோது, அவனுக்கு இமயமலையின் உச்சியில் ஏறிய பூரிப்பு.

'பேயன் வசந்தன்- என்னையும் பேயன் எண்டு நினைச்சிட்டான்போல கிடக்கு.'

ஓடிக்கொண்டிருந்த டிராமில் அவனையறியாமல் அவனுள் ஒருசிரிப்பு முளைத்தது.

அடுத்த தரிப்பிடத்தில் டிராம் நின்றது. ஒரு சிலர் இறங்கினார்கள். இன்னும் சிலர் ஏறினார்கள். விதூஷன் அந்த டிராமில் ஒரு பயணியாக ஏறுவது காந்தனுக்குத் தெரிந்தது. தன் உற்சாகத்தை தனக்கு ஏற்கனவே அறிமுகமான விதூஷனோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் போலிருந்தது.

"விது.." என்றான் மெல்லிய குரலில். காந்தனின் குரல் கேட்டு, புன்முறுவலோடு விது காந்தனின் இருக்கையின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

அவன் உட்கார்ந்ததும் உட்காராததுமாக, காந்தன் ஷேர்ட் பாக்கட்டிலிருந்த டிக்கட்டை விதுவின் கண்முன்னே நீட்டினான்.


மிட்டாயை குழந்தை ஆவலுடன் பார்ப்பதுபோல விது டிக்கட்டை கையிலெடுத்து மேலும் கீழுமாக ஆவலோடு பார்த்தது காந்தனுக்கு படு உற்சாகத்தைக் கொடுத்தது.

"குஞ்சுவின்ர புரோகிராமுக்கு டிக்கட் வாங்கிப் போட்டீர் போல கிடக்கு" என்றான் விது.

"பெரிய கஷ்டப்பட்டு எடுத்துப் போட்டன் விது. நீரும் புரோகிராமுக்கு போறீரோ?"

"என்ன பகிடி விடுகிறீரா காந்தன்? வந்து ஒரு வருஷத்துக்கு மேல போய்ற்றது. வேலை ஒண்டை தாறாங்களா இந்த வெள்ளைக்காரன்கள்? இப்போதைக்கு வேலை செய்யேலாது என்கிறாங்க... இந்த இழவில எந்தக் குஞ்சுவைப் பார்க்கிறது?"

விதுவின் பேச்சில் அவன் இயலாமை பளிச்சிட்டது. அவன் நிலைமையைப் பார்த்து பரிதாபப்படுகிற நிலையிலா இருக்கிறான் காந்தன்?



அவன் உற்சாகத்தோடு மேலும் பேச்சுத் தொடுத்தான். "ஒரு ஐஞ்சு பவுண் சங்கிலியாவது குஞ்சுக்கு போடலாமெண்டு இருக்கிறன். போடுற நேரத்தில ஒரு போட்டோ எடுக்க வேணும்.." விது அவனை வியப்போடு பார்த்தான். 'அஞ்சு வருஷத்துக்கு மேல சுவிஸ்ஸில இருக்கிற இவன் அஞ்சு பவுணிலும் போடுவான். பத்துப் பவுணிலும் சங்கிலி வாங்குவான். என்னால் முடியுமா?'எ

"கொக்காவின்ர நகைகளை வித்துத் தான் இங்க வந்தனான். அதுகளைச் செய்து கொடுக்க இரண்டு வருஷம் உழைக்க வேணும். இப்போதைக்கு எந்த குஞ்சுவையும் நினைக்கேலாது. சரி, டிராம் ஹால்ட் வந்திட்டுது. நான் இறங்கப் போறன்.. போட்டோ எடுத்தால் எனக்கும் ஒரு கொப்பி தாரும்.."

சமயாசமயத்தில் ஒரு வேலை இல்லாததும், உழைத்து ஏதாவது சேர்த்தாலும் ஊருக்கு அனுப்பியே ஆக வேண்டும் என்ற ஆதங்கமும் அவனுள் வியாபிக்க, டிராமிலிருந்து இறங்கிச் சென்றான் விது. காந்தனோ குஞ்சுவின் கனவில் பயணத்தைத் தொடர்ந்தான்.

□□□

"உங்கட கரைச்சல் பெருங்கரைச்சல்... அவன் காந்தன் காசு அனுப்பி இப்ப எத்தனை மாசம்? எட்டு மாசத்திற்கு முந்தி இருபதினாயிரம் அனுப்பினான். பேச்சு மூச்சே இல்லை. போன மாசம் ஒரு கடிதம் போட்டிருந்தான். கையில காசில்லையாம். மிச்சம் பிடிக்க ஏலுதில்லையாம். எங்களை இப்ப சமாளிக்கட்டுமாம். பிறகு காசு அனுப்புறானாம். இவன் நாய் எங்க அனுப்பப் போகிறான்? நீங்க என்னண்டா சித்திராவுக்கு கல்யாணமெண்டு பேசிறியள்... நகையளுக்கு எங்க போகிறது?"

கனகம்மாவின் பேச்சில் வெறுப்புத் தொனித்தது. வாய்க்குள்ளிருந்த வெற்றிலைச் சாறை அவள் வேலிப் பக்கமாக துப்பிய போது, யார் மீதோ கோபத்தோடு காறி உமிழ்ந்த வேகம் தெரிந்தது.

தோளில் இருந்து நழுவிய துண்டை லாவகமாக மேல் தோளுக்கு நகர்த்தியபடி "உனக்கு எப்பவுமே அவன் காந்தனைப் பற்றி கீழ்த்தரமான நினைப்புத்தான்."

வாயிலிருந்த சுருட்டு அணைந்திருக்க வேண்டும். பக்கத்திலிருந்த கைவிளக்கை எடுத்து, சுருட்டை மீண்டும் பற்ற வைத்து, இரண்டு தடவை ஆசை தீர புகையை உள்ளிழுத்து வெளியே ஊதிய செல்லத்துரை இருமியபடி பேச்சைத் தொடர்ந்தார்.

"கனகம்.. மாப்பிள்ளை வீட்டார் இப்ப எத்தனை பவுண் நகை கேக்கினமாம்..?"

பக்கத்து வீட்டு பாக்கியம் தனது தோட்டத்தில் விளைஞ்ச கத்தரிப் பிஞ்சுகளில் ஐந்து ஆறை அன்று கொடுத்திருந்தாள் கனகத்திற்கு. அவற்றை நீட்டாக சீவி பாத்திரத்தில் போட்டபடி கணவனை ஒரு முறைப்போடு பார்த்தாள் கனகம்.

"இந்த வீட்டோட மொத்தம் இருபது பவுண் நகை கேக்கினம். வெறும் கமஞ் செய்யிற பொடியனுக்கு இவ்வளவாம். என்ன செய்யிறது? பொடியன் பஞ்சத்தால, பொட்டைக் குஞ்சுகளைப் பெத்த எங்களுக்கு பெரிய வேதனை. என்ர கழுத்தில இருந்த கொடியையும் வித்து அஞ்சரை வருஷமாச்சு. இண்டு வரை என்ர கொடிதான் இல்லை. கூடப்பிறந்த கொக்காவிற்கு எண்டாலும் நகை நட்டைச் செய்யப் பணம் அனுப்பினானா பாவிப்பயல்? பிச்சைக் காசு அனுப்பிற மாதிரி நாக்கு வழிக்க வருஷத்தில இரண்டு தரம் இருபதாயிரம் இருபதாயிரம் அனுப்பி வைக்கிறான்.."

அவள் மனநிலை, கத்தி வேகமாகக் கத்தரிப் பிஞ்சுகளைச் சீவித் தள்ளியபோது தெரிந்தது.

"எடி பிள்ளை.. வீணா அவனைக் கரிச்சுக் கொட்டாத... நான் கொழும்புக்குப் போய் ஃபோன் பண்ணிக் கேக்கப் போறன். கட்டாயம் பணம் வரும்... யோசிக்காதை... மேற்கொண்டு காரியத்தைப் பார்.."

அவர் நம்பிக்கைகளில் வாழ்பவர். தன் இரத்தத்தின் இரத்தம் தனக்கு காலை வாரிவிடாது என்ற மன உறுதியில் அவர் வாழ்கிறார். பெற்றவளுக்கோ அந்த நம்பிக்கை தகர்ந்து போயிருக்கிறது. கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்கள், வருங்காலக் கோலங்களை அவளுக்குத் தெளிவுபடுத்துகின்றன.

"கப்பல் கொழும்புக்கு எப்ப போகுது எண்டு கேட்டிட்டு வாறன் கனகம்."

தோளில் கிடந்த துண்டை ஒருமுறை உதறி மீண்டும் தோளில் போட்டுக்கொண்டு புறப்பட்டார்.

□□□

'என்ன கோலாகலமான வரவேற்பு..? எவ்வளவு ஸ்வர்சியாக குஞ்சு வலம் வந்தாள்? 'கையிலிருந்த போட்டோவை அவன் இத்தோடு நூறாவது தடவைக்கு மேல் பார்த்து இரசிக்கிறான்..'

போட்டோ எடுத்த ரமேஷ் சூரன்தான். (அதற்குகூட அவன் லஞ்சமாக 20 பிராங் பிரத்தியேகமாகக் கொடுத்திருந்தானல்லவா?) அந்த வாளிப்பான உடலை ஒட்டியும் ஒட்டாததும்போல காந்தன் நிற்கிறான். அந்த 5 பவுண் சங்கிலியை கழுத்தில் போட்டபோது, சங்குக் கழுத்தை கைகளில் ஸ்பரிசித்தபோது- மின்சார அதிர்ச்சிக்கு உள்ளானவன் போலானான். அந்தக் கணம் அவன் கால்கள் நிலத்தில் இல்லை... அந்த மயக்கும் அழகியின் மாம்பழக் கன்னங்களைத் தொட்டும் தொடாத நிலையில் (குன் முகம்) கழுத்தில் சங்கிலியைப் போட்ட விரல்கள் சங்குக் கழுத்தை வருடியும் வருடாத நிலையில் அல்லவா போட்டோ எடுத்திருக்கிறான் அந்த எமகாதகன் ரமேஷ். இன்னொரு இருபது பிராங் பரிசாகக் கொடுக்கலாம் போலிருந்தது. அப்பப்பா. ஒரு போட்டோ.

வாழ்க்கையில் ஒரு அர்த்தமே இல்லை என்று இதுவரை நினைத்தவனுக்கு இப்பொழுது வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு விட்டது போன்ற ஒரு உணர்வு மனதை நிறைக்க ஆரம்பித்திருந்தது. குஞ்சுவே தனது வாழ்க்கைத் துணைவி யாகவும், தான் கழுத்தில் போட்ட சங்கிலியே ஒரு தாலிக் கொடியாகவும் எண்ணங்கள் சிறகடித்து அகண்ட வானில் உற்சாகமாகப் பறக்க ஆரம்பித்தபோது தான் அந்த பாழாய்ப்போன டெலிபோன் அடித்தது.

'சைஸ' (இது ஜெர்மன் பாஷையில் தரித்திரம்) கனவுகள் அறுபட்ட ஆத்திரத்தோடு, டெலிபோனைக் கையிலெடுத்து "ஹலோ காந்தன் ஹியர்" என்றான். இடக்கை டெலிபோனைப் பிடிக்க வலக்கையிலிருந்த போட்டோவிலுள்ள குஞ்சு அவனைப் பார்த்து, ஓரக்கண்ணால் சிரிப்பதுபோலிருந்தது.

"உங்கட அப்பா பேசப் போகிறாராம். பேசுங்க.."

'அப்பர் கொழும்புக்கு வந்திட்டரோ..' குஞ்சு ஒரு கணம் தனியனானான்.

"அப்பா நான் காந்தன் பேசுறன்.."

"தம்பி சுகமாக இருக்கிறியா? இண்டைக்குத்தான் வந்தனான். கொக்காவின்ர கல்யாண விசயமா வந்தனான்" என்று மறுதரப்பில் அப்பா சொல்லத் தொடங்கிய போது, காந்தனின் முகம் கறுக்க ஆரம்பித்தது.

தந்தை பேசுவதைத் திடீரெனக் கத்தரிப்பதுபோல கோபத்தை அடக்கிக் கொண்டு "அதுக்கு கடிதம் போட்டிருக்கலாமே? இந்தப் பிரச்சினைக்கில கப்பல வர வேணுமே...? பிறகு காசு அனுப்பிறன் எண்டு எழுதிக் கடிதம் போட்டனான் அல்லே" என்றான்.

"தம்பி பிறகெண்டா எப்ப ராசா? கையோடு உன்னட்ட காசு வாங்கிக் கொண்டு போவம் எண்டுதான் வந்தனான். கொக்காட்ட இருக்கிற 15 பவுண் நகையோட இன்னொரு ஐஞ்சு பவுண் நகையை செய்து போடவேணும். கல்யாணச் செலவுக்கும் கொஞ்சக் காசு வேணும். என்ர பென்சனில என்ன செய்யிறது? மூண்டு குமருகள்.. உனக்கு சொல்ல வேணுமே..? ஒரு ஐம்பதாயிரமாவது இண்டைக்கு ரெலக்ஸில அனுப்பி வைச்சியெண்டா..."

அவன் பேச்சின் இடையில் குறுக்கிட்டான். இப்பொழுது அடக்கி வைத்திருந்த ஆத்திரம் பேச்சில் பீறிட்டது.

"என்னை என்ன காசு காய்க்கிற மரம் எண்டு நினைச்சிட்டியளோ? கேட்ட கையோட பிடுங்கி அனுப்ப? நீங்க இப்ப ஊருக்கு போங்க. நான் பிறகு அனுப்பி வைக்கிறன்."

அவன் டெலிபோனைப் படீரென வைத்துவிட்டு தனது கட்டிலில் வந்து தொப்பென விழுந்தான். ஒரு இனிமையான சுகானுபவத்தைப் பாதியில் ஒரு அக்கிரமக்காரன் வந்து பறித்துப்போய் விட்ட மனநிலை அவனுக்கு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இலக்கிய நயம்

## திரும்பாத வீரன்

### தருவது ரசிகன்

திருமணமாகி மூன்றே மூன்று நாட்கள்தான்.

ஆயினும், முந்நூறு ஆண்டுகள் ஒன்றாய் வாழ்ந்தது போன்ற பந்தம் இருவரிடமும்!

கண்டதும் கொண்ட காதலல்ல- பெற்றோர் பார்த்து பேசி முடித்து போட்டு வைத்த பாலம்தான்.

அந்தப் பாலம் இணைத்துவைத்த இதயங்கள் இரண்டும் தமக்குள் ஒத்துப் போனதால் ஒன்றின்மீதொன்று பித்துப் பிடித்ததாய் மாறிவிட்டன.

பிறக்கும்போதே நிச்சயிக்கப்பட்டு விட்ட சத்திய உறவன்றோ இது என்று நினைத்தான் அவன்.

தாயின் தொப்புள் கொடியில் இருந்து விடுபட்டபோதே இந்த உறவுக்கொடி என்னை உள்வாங்கிக்கொண்டிருக்குமோ என்று வியந்தாள் அவள்.

அம்மா தாலாட்டினாள்; கண் உறங்கியது. அன்பான இவளின் காதல் பாட்டினால் என் உயிர், மயங்கியது, என்று மகிழ்ந்தான் அவன்.

தந்தையின் கரங்கள் என்னைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தன. சிந்தையில் இனிக்கும் என்னவன் இவன் கரங்களோ என்னை நானே தொலைக்க வைத்துக் கொண்டிருக்கின்றனவே என்றெண்ணி வெட்கினாள் அவள்.

பிடிபடாத கணக்கும் குரு சொல்லித் தந்தபோது சுலபமாக இருந்தது. இவள் பிடிவாதப் பிணக்கும் முடியும்போது சுகம் சொல்லித் தருகின்றது. நினைத்து இரசித்தான்.



உபவாசம் என்று உண்ணாமல் நான் இருந்ததுண்டு பல தினங்கள்! இவனோடு உறவான பின்னர் இவனை எண்ணாமல் ஒரு நொடியும் இருக்க முடியவில்லையே என்னால்? ஆச்சரிய மழை அவளுக்குள்!

தோல்வி என்றால் அன்றே என் உடல் வீழும் தீயில் என்றெண்ணியிருந்தவன் நான். இவளிடம் ஊடல் போரில் ஒரு நாளும் வென்றதில்லை. வென்றிட மனம் விரும்பியது மில்லை. என்னே விந்தையிது என்று எண்ணிக்கொண்டான் அவன்.

அப்பப்பா... என்னவொரு பலம்; மலர் என்பார். மாதுளங்கனி என்பார். மன்மத பாணம் மனதில் துளைத்துவிட்டால் சொன்னதெல்லாம் மறந்திடுவார். முகம் இரத்தச் சிவப்பாகி தனக்குள்ளே முறுவலித்தாள்.

கனி என்றால் கடித்ததின் பின்தானே அதன் சுவை தெரியும். தொடர்ந்து புசித்திட்டால் பசியடங்கும். இனிப் போதும் என்று மனம் கனி ஒதுக்கும்.

ஆனால் இந்த மலர் மகளின் இரு தேன் சுளைகள் உண்ணப்பட இன்னும் இன்னும் என்று முழு மனதும் கெஞ்சி நிற்கும். கோரிக்கை குவித்து வைக்கும்.

மெல்லிடைதான்; ஆனால் வெல்லப் போர் விடியும்வரை தொடர்ந்தாலும் வளையும்; உடையாது; ஆச்சரியம்-ஆனால் உண்மையிது.

பூச்சொரியும் புன்னகைதான்! ஆனால் அந்தப் புன்னகைக்குள் பொல்லாத ஆசைப் பொறியிருக்கும்.

வீழ்ந்துவிட்டால் மீட்சியில்லை; அம்மட்டோ.... மீண்டாலும் மகிழ்ச்சியில்லை.

வீச்சரிவாள் படு களத்தில் சிரசறுக்கும்; இவள் விழிவாளோ பஞ்சணையில் வேறு சிந்தனையே எழாமல் தடுத்து சரசமாடும்.

செல்ல மொழி பேசுமிவள் சிணுங்குதலே போதும் மத்தாய் மாறி சித்தத்தை கடைந்துபோட.

என்றெல்லாம் நினைத்தபடி, பேச்சின்றி பார்வையால் கலந்து, மூச்சுப் பரிமாறி, விடிந்துவிடக்கூடாது- இரவு விரைவில் முடிந்துவிடக் கூடாது என்று வரம் கேட்டு இருவரும் இருந்த போதில்,-

கேட்டது முரசொலி! பொருதும் முரட்டுக் காளைகளில் வெல்லும் காளையின் தோலில் செய்யப்பட்ட மயிர் சீவப்படாத கோட்டை முரசம் ஒலித்தது.

"வா போருக்கு! வந்தது ஆபத்து அன்னை மண்ணுக்கு! கண்ணுக்கு மேலாம் நம் அன்னைத் திருநாடு! அது அழைக்கிறது வா! பகை நாட்டார் பாதச் சுவடுகள் தாய் மார்பில் பதியுமானால் நாமிருந்து என்ன பயன்? எழு மகனே! மான மண் தொட்டு கண்ணில் ஒற்றி தொழு மகனே! வீழுகின்ற பகைவர் தொகை- இனி எந்நாளும் கொடியவர்கள் நம் நாடிருக்கும் திசையிதனை விழி திறந்து பார்க்கக்கூட தொடை நடுங்கும் பாடமாக மாறிடட்டும்!"

முரசம் அழைத்தது. தேன் உண்ணும் வண்டாய் இருந்தவனா இவன்? கனியிதழ் பாணமே கதிமோட்சம் என்பதுபோல் கெஞ்சிய காளை எங்கே?

விழிகளில் சினம் எரிய, போர் உடை அணிந்து, உடைவாள் தரித்து புயலாக மாறிவிட்ட இந்த மறவனா அவன்?

வேதனை வெப்பம் வாட்டியபோதும் வியப்பும் கூடவே வந்தது அவளுக்கு.

தடுக்க முடியாது- புயல் புறப்பட தயாரானால் அந்நியரே இலக்காவர்.

அன்பென்ற தடை போட்டாலும் அது வெறும் துரும்பாக எண்ணப்படும் எழுச்சிப் பொழுதல்லவா இது!

மணவாளன் செல்வது மரணம் விளையும் களம்தான்.

திரும்பி வருவானோ மாட்டானோ? வரும் வரைக்கும் நெஞ்சு கொடு நெருப்புக்கள் விழுந்த பஞ்சாக காணாமல் போகும்தான்.

ஆனாலும் தடுக்கத்தான் முடியுமோ? போர் உடை தரித்து போகும் முன் தன்னோடு அவளை இறுகத் தழுவிக் கொண்டான்.

இரு விழியில் இருந்து முத்துக்கள் சிந்த சுட்டு விரலாலே துடைத்துவிட்டான்.

அணைத்தபடியே கேட்டான்,

"சென்று வரவா?"

"ம்..." என்றாள் கரங்கள் மட்டும் அதற்கு மாறாய் அவன் முதுகை இறுக்கிக் கொண்டன.

பூச்சரத்தை இறக்கிவைத்ததுபோல் அவளை மெல்ல விலக்கினான்; விடை பெற்றான்; விரைந்தான்.

□□

வந்தது செய்தி. செங்களத்தில் எதிரியின் அம்பொன்று பாய்ந்து அவன் ஆவி பிரிந்தது.

"அய்யகோ...போர்க்களமே போர்க்களமே உனக்கு இரக்கமேயில்லையா? பொல்லாத உன் கரங்கள் என் பொட்டை அழித்தது நீதியா? என் பூவைப் பறித்தது நியாயமா?"

ஓடினாள், படு களத்தில் புகழுடம்பை சாய்த்துவிட்ட அமரன் முகம் காண ஓடினாள்.

களத்து மேட்டில் குருதி வெள்ளம்; பிணம் குவிந்த செய்தி கேட்டு கிடைத்தது விருந்து என்று பருந்துகள் வந்து வட்டமிட்டு, வீர உடம்புகளின் சுவையறிய திட்டமிட்டுக் கொண்டிருந்தன.

மார்பிலே அம்பாலே பட்ட காயம்.

அவள் மன்னன் வானுக்கு மார்பைக் காட்டி, உயிர் மறைந்தபோதும், மாறாத முறுவல் உதட்டில் ஏந்திக்கிடந்தான்- உயிர் துடிப்படங்கி!

மலர் கணைகள் நேற்றிரவு தாக்கிய போதும் முறுவல்தான்!

கொடும் பகைவன் அம்பு மார்பில் பாய்ந்தபோதும் முறுவல்தான்.

கூந்தல் குலைய கதறினாள். மணமாகி மூன்று நாளும் தலைவைத்து தான் தூங்கிய அவன் மார்பை இறுதியாய் ஒரு தடவை தழுவிட நினைத்து, விழிகளில் இருந்து நழுவும் வெள்ளத்தோடு குனிந்தாள்.

தழுவாதே என்பதுபோல இடையில் புகுந்தன பருந்துகள். விழுப்புண்ணை மொய்த்துக்கொண்டன.

மெய் கலங்கிப் போனது அவளுக்கு.

'பருந்துக்கு கிடைத்துவிட்டது விருந்து. வருந்தும் என் மனதுக்கு இனிக் கிடைக்குமோ மருந்து? மூன்று நாட்கள் இன்பத்தை அள்ளி அருந்திக் கிடந்தோமே? யார் கண் பட்டதோ புண் பட்டு கள மண்ணில் வீழ்ந்தானே என் தலைவன்; மாண்டானே என் மன்னன்!

துடித்திட்டாள்- துவண்டு போனாள்.

"அத்தான்!" இறுதி அழைப்பாய் அவள் குரல் படுகளத்தின் திசையெட்டும் எதிரொலித்தது.

இந்தக் காட்சியைத்தான் புறநானூற்றில் கழாத் தலையார் என்னும் புலவர் நம் கண்ணெதிரே காட்டுகிறார்.

**மண்கொள வரிந்த வைந்நுதி மருப்பின்**
**அண்ணல் நல் ஏறு இரண்டு உடன் மடுத்து**
**வென்றதன் பச்சை சீவாது போர்த்த**
**தீண்பிணி முரசம் இடைப்புலத்து இரங்க**
**ஆர் அமர் மயங்கிய ஞாட்பின் தெறுவர**
**நெடுவேல் பாய்ந்த நாணுடை நெஞ்சத்து**
**அருகுகை..........மன்ற**
**குருதியோடு துயலால் வரும் மார்பின்**
**முயக்கிடை ஈயாது மொய்த்தன பருந்தே.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல–77

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| | ■ | 4 | | | | |
| 5 | | | ■ | ■ | ■ | |
| | ■ | 6 | | | | ■ |
| ■ | 7 | | | | ■ | 8 |
| 9 | | ■ | ■ | 10 | | |
| 11 | | | | ■ | 12 | |

### இடமிருந்து வலம்

1. மாலை நேரத்தில் இதன் ஓசை கேட்கலாம்.
4. இதனால் உடலுக்கும் பயிற்சி, உள்ளத்திற்கும் அமைதி.
5. படைக்கு முந்தாதோரும் இதற்கு முந்துவர் என்பர்.
6. சமைத்து உண்ணச் சுவைதரும்.
7. மன்னர்கள் இதை விரும்பியும் போர் நடத்தினார்கள்.
10. இது இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பார்கள்.
11. நன்றி மறக்காதோர் இதனைச் செய்வதற்குச் சித்தமாக இருப்பார்கள்.
12. பாட்டியாக இருந்தாலும் பாடலில் வல்லவர்.

### மேலிருந்து கீழ்

1. இதனை வடிப்பதும் ஒரு கலைதான்.
2. இவர்களின் அனுபவத்தை அறிந்து நடப்பது நல்லது என்பார்கள்.
3. இந்துக்களின் திருமணத்தில் இதுவும் இடம்பிடித்துக்கொள்ளும்.
7. இதுவும் மனதை இதப்படுத்தும்.
8. விழிகளின் மொழி என்றும் கூறலாம்.
9. நெருப்பில்லாமல் இது வருமோ என்று கேட்பார்கள்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 03.12.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-77
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-75க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வெ | ங் | 2 கா | ய | ம் | ■ | 3 கி |
| றி | ■ | வ | ■ | ■ | 4 கொ | சு |
| ■ | 5 வி | ல் | 6 க | ■ | ட் | கி |
| 7 கு | ரு | ■ | 8 ப | ட் | டா | சு |
| ண் | து | 9 த | ட | ■ | வி | ■ |
| டு | ■ | ர | ம் | ■ | ■ | 10 மா |
| 11 சி | ற | கு | ■ | 12 க | ரு | மி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.75இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. நிஷாந்தி கமலநாதன் நீர்கொழும்பு.
2. சாஜித் குவைஸ் அனுராதபுரம்.
3. வ. சின்னத்தம்பி அப்புத்தளை.
4. ஏ.எஸ்.ஜௌசர் கெகுனுகொல்ல.
5. வி. ஜெகநாதன் செங்கலடி.
6. கே. வசந்தி கொழும்பு-15.
7. பி. ஜெயபாலன் வெலிமடை.
8. சுமைரா அன்வர் குருநாகல்.
9. ஏ. ஞானப்பிரகாசம் வத்தளை.
10. என். நஜிமுதீன் புத்தளம்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# ஸ்போர்ட்ஸ்

## அடுத்தது எங்கே?

அடுத்த உலகக் கோப்பை கால்பந்து போட்டி 1998ம் ஆண்டு ஃபிரான்சில் நடைபெற இருக்கிறது. இந்தப் போட்டிகள் ஃபிரான்சில் உள்ள 10 நகரங்களில் நடைபெறும் என்று அந்த நாட்டின் விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.



போர்டியாக்ஸ், லென்ஸ், லியான், மார்செய்லி, மாண்ட்பெல்லியர், நான்டெல், பாரிஸ், சென்ட் டேனிஸ், சென்ட் எடியென்னி, டெரிலோஸ் ஆகிய 10 நகரங்களிலுமே போட்டிகள் நடைபெறவுள்ளன.

அமெரிக்காவில் இந்த ஆண்டு நடைபெற்று முடிந்த உலகக் கோப்பை கால்பந்து இறுதிப் போட்டியில் விளையாட, ஃபிரான்ஸ் தகுதி பெறாததால் அது போட்டியில் பங்கேற்கவில்லை. ஆனால் 1998ம் ஆண்டில் இதே போட்டியை அந்த நாடு நடத்த இருப்பதால் ஃபிரான்ஸ் கால்பந்து அணி இப்போட்டியில் பங்குபெறும்.

## பெற்ற தங்கத்தை விற்ற வீரர்

ஹிரோஷிமாவில் நடந்து முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் உஸ்பெகிஸ்தான் நாட்டின் சார்பாக ஆன்ட்ரி கொல்காநோவ் என்ற வீரர் கலந்துகொண்டார்.

இவர் துடுப்புப்படகு வீரராவார். துடுப்புப் படகுப் போட்டியிலே நான்குபேர் பங்கேற்கும் கயாக் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், இரண்டுபேர் மட்டும் பங்கேற்கும் கயாக் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் இவர் வென்றார். ஆனால் தான் வென்ற இந்த இரு பதக்கங்களையும் அவர் விற்றுவிட்டார்.

தங்கப் பதக்கத்தை ஒரு இலட்சம் யென்னிற்கும் (அயிரம் டொலர்) வெள்ளிப் பதக்கத்தை 50 ஆயிரம் யென்னிற்கும் (ஐந்நூறு டொலர்) ஹிரோஷிமாவில் உள்ள தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் விற்பனை செய்யும் கடையொன்றில் விற்றுவிட்டார். இதன்மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு தன்னுடைய குடும்பத்துடன் சொந்த நாடான ரஷ்யாவிற்கே குடியேற அவர் திட்டமிட்டுள்ளார்.

பதக்கங்களின் விலை பற்றி விளையாட்டுத்துறை அதிகாரிகள் கூறும்போது 4 கிராம் சுத்த தங்கத்தில் செய்யப்பட்ட தங்கப் பதக்கத்தின் மதிப்பு 50 ஆயிரம் யென் (500 டொலர்) என்றும், வெள்ளிப் பதக்கத்தின் மதிப்பு 30 அயிரம் யென் (300 டொலர்) ஆகும் என்றும் தெரிவித்தனர்.

## குத்துச்சண்டையில் பெண்கள்

பெண்கள் பங்கேற்கும் குத்துச் சண்டைப் போட்டி 2000ஆம் ஆண்டில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டியில் இடம்பெறும் என்று தெரிகிறது. பெண்களும் ஆண்களும் போலவே குத்துச்சண்டைப் போட்டியில் பங்கேற்பது வரவேற்கப்பட்டாலும் அவர்கள் பங்கேற்கும் போட்டியின் விதிமுறைகளில் மட்டும் சிறிது மாற்றம் கொண்டுவரப்படலாம் என்று தெரிகிறது.


இது குறித்து குத்துச்சண்டை வல்லுனர்கள் அடங்கிய குழு தீர்மானம் எடுக்கும். ஆண்களின் உடற்கூறுக்கும், பெண்களின் உடற்கூறுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. இதனால்தான் பெண்கள் பங்கேற்கும் குத்துச்சண்டைப் போட்டியில் சில விதிமுறைகளை மாற்ற வேண்டியிருக்கிறது என்று ஒரு அதிகாரி தெரிவித்தார்.

அமெரிக்கா, கனடா, நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளில் பெண்களுக்கான குத்துச் சண்டைப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இருப்பினும், ஒலிம்பிக் பந்தயங்களில் பெண்கள் குத்துச்சண்டைப் போட்டியில் இருக்கவேண்டிய தகுதிகள் பற்றி சர்வதேச கவுன்ஸில் ஒரு முடிவெடுக்கவுள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்




**இவ்வாரம் (27.11.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:

**தாயகத்துக்கே பெருந்தீங்கு விளைவித்துவிட்டு தயங்காமல் மன்னிப்புத் தட்டாமல் கேட்டுவிட்டால் குற்றம் குறைந்திடுமோ? பீதாமகரே விடை தரட்டும்! முற்றும் துறந்தெரிந்த மாமுனியாம் பீஷ்மரவர் அஸ்தினாபுரியிலே அழியாப் பெரும் பற்றுடையார்! அவர் போன்றே அந்நாட்டின் அன்புக்குரியவர்கள் துரியோதனன் அணியில் இணையும் பணியேற்றார்! தேர்ந்தெடுத்த தீமை வழி தடையின்றித்தானணைத்தார்.**

-காட்சி தொடக்கம்-

**அஸ்தினாபுரம்–காந்தாரியின் அந்தப்புரம்– குந்தியும் காந்தாரியும் இருக்கையில் விதுரரின் மனைவியும் வருகிறார்.**

**காந்:** பாண்டவர் மீண்டும் நாடு திரும்பி இந்திரப் பிரஸ்த முடிதனை ஏற்றே பாரதம் புகழ ஆட்சி நடத்திடும் பாங்கினை பார்த்து நீ பரவசமடைந்திட வேண்டுமென்பதே ஆண்டவனிடம் நான் வேண்டும் பெருவரம். கோரமான கொடுமைகள் விளைந்ததை கெடுமதி யாளரின் கேடுகள் படர்ந்ததை காணா திருக்க என் கண்களைக் கட்டிய காரியம் நன்மையே என்பதென் கருத்து! பார்வை இழந்தநான் தலை குனியாமல் தப்பிட முடிந்தது, தவறும் புரிந்தது!

**குந்தி:** சூழ்ச்சி நிறைந்த சூதாட்டமதில் தங்களுக்கேதும் பங்கில்லை அக்கா!

**காந்:** பாதகச் செயல்களில் பங்கில்லை எனக்கென சாதக எண்ணம் உனக்கிருந் திருந்தால் பன்னிரண்டாண்டுகள் எந்தனைப் பார்த்திட ஏன் வராதிருந்தாய்?

**குந்தி:** உங்களைப் பார்க்க நான் வந்திடும் போதெலாம் அன்புடன் வாழ்த்தி வரவேற்பளிப்பீர். எந்தனை வாழ்த்தும் அத்தனை சொல்லும் அருமை மைந்தனாம் துரியோதனனை தூஷிப்பதாகவே மாறிடும் அன்றோ! என்னுடை மைந்தர்கள் ஐவரை என்றுமே துரியோதனன் போலவே நினைப்பது என் மனம். தங்களின் புதல்வர்கள் என்னுடை பிள்ளைகள் எவரையும் வேறாய் எண்ணிய தில்லையே! நான் பெறும் ஆசிகள் நம் மகன் துரியனை சாபமதாக அடைந்திட விரும்பலை.(விம்முகிறார்)

**விதுரர் மனைவி வருகிறார்.**

**காந்:** (விதுரர் மனைவியிடம்)-எங்களில் நீயும் ஒருத்தி அல்லவா? இந்திரப் பிரஸ்தம், அஸ்தினாபுரமென இரு நாடுகளிலும் உனக்கும் உரிய உரிமை உண்டல்லவா?

**விது-மனை:** துலாபாரத்தில் தட்டுகள் இரண்டுதான்!

**காந்:** துலாபாரத்தில் தட்டுகள் இரண்டெனில் நீதியின் நிலையினை நிலை நிறுத்திடும் அந்நடுவினில் நிற்கும் முள் நீ ஆகலாம்?

**விது.மனை:** நீதி, நியாயம், நேர்மை என்றிடும் நற்பண்புகளுக்கிந் நாட்டினில் இட மில்லை. நேர் வழிபோவதா, நேர்மை மற்ற அநீதியின் பாதையில் நடந்தே செல்வதா என்பதை அறியா அவதியில் தான் இந்நாட்டு மக்கள் தடுமாறு கின்றனர். பெண்களுக்கிங்கு பெருமை யேயில்லை! சதுரங்க மேடையில் பெண்ணை பந்தயப் பொருளாய் வைத்திட மன்னவர் துணிந்தார். தங்கள் மைந்தரோ பெண்ணின் துகிலினைப் பறிந்திட முனைந்தனர். இத்தனை கேவலம் அஸ்தினாபுரத்தில்! அத்தனையும் பெண்ணுக்கவமானமல்லவா?

**காந்:** கணவரைப் போலவே கலக்கமே இன்றி குற்றங்கள் கடிந்திடும் கண்ணியம் உன்னிடம்! என்னுடை நிலையில் நீயிருந்தாயெனில் என்னதான் முடிவினை ஏற்றிருப்பாய் நீ?

**விது.மனை:** தங்களைப் போலவே 'என்னுடை துகிலையும் களைந்திடு' என்பேன்!

**காந்:** சாபமெதுவும் கொடுத்திருப்பாயோ?

**குந்தி:** சாபத்தால் மட்டும் சிக்கல் தீராது. சாபமிடுவது தோல்வியின் அறிகுறி. தராசின் தட்டுகள் மேலும் கீழும் காலத்துக்கேற்ப நிலையதனில் தளம்பும். அஸ்தினாபுரத்தின் அரியணை மீதினில் அன்புப் புதல்வன் துரியோதனனும் இந்திரப் பிரஸ்த சுந்தர பூமியில் எந்தன் மைந்தர்கள் ஆட்சி புரியவும் ஏற்றதோர் காலம் என்று வருமோ அன்றே இன்பம் எங்கும் இலங்கிடும்!

**காந்:** என்னால் எதையுமே புரிந்திடும் தன்மை ஏற்படவில்லையே! என்னதான் செய்வேன்?

-காட்சி மாற்றம்-

**திருதராட்டிரன் அரண்மனை–**

**திருத:** கவுரவ குலத்தின் மூத்தவன் நானே! பொறுப்புகளனைத்தையும் நானும் உணர்கிறேன்! என் மனக் கோட்டையின் சிகரம் என் மகன். என்னால் அவனை இழந்திட முடியுமா? பாண்டவர் மீண்டும் நாடு திரும்புதல் நன்மை அளித்திடப் போவதேயில்லை! இதுவே எந்தன் எண்ணமதாகும்!

□□□

**திருதராட்டிரன் கனவு காண்கிறான்– பரத மாமன்னர் தோன்றுகிறார்.**

**காவலன்:** நீதியும் நேர்மையும் தர்மமும் நிலைபெற அஸ்தினாபுரியின் அரியணை யேறிய பாரத நாட்டின் பெரும் புகழ் தாங்கிய பரத மாமன்னர் பராக்! பராக்!

**பர.மன்:** சகுந்தலை மைந்தன்-பரதமாமன்னன் திருதராட்டிரரிடம் நியாயம் கேட்கவே இங்கு வந்துற்றேன்! மன்னா நீயோ நிகழ்காலமாவாய்! எதிர்காலத்தை எண்ணியே நீதான் எழுந்திருக்க முயன்றிட வேண்டும். எதிர்காலத்தை கருதியே நானும் எனது இடத்தை விட்டுக்கொடுத்தேன். அதுவே என்றோ நடந்து முடிந்தவை. இந்த அரியணை உந்தன் சொந்தம் என்றே எண்ணி ஏமாறாதே! இந்த அரியணை அரிய தவ நிலை. இதனை உணர்த்தவே இவ்விடம் வந்தேன்!

**திருத:** கடந்த காலத்தைக் கவலையிலாழ்த்தும் கயமை எதனையும் நான் கருதிய தில்லையே!

**பர.மன்:** இன்று நீ செய்பவை நாளை நிலை பெறும். இன்றையத் தவறுகள் நாளையை சிதைத்திடும். இன்றையச் செயல்களே நாளையின் பொறுப்பு. ஆகவே உன்னிடம் வினவிட வந்தேன். இந்த அரியணை என்றோ எந்தன் உயிரினும் அரிய அற நிலையானது. தூய்மையதான அரசிருக்கைக்கு தீய விளைவினை விதைத்துவிட்டாய் நீ!

**திருத:** தீய விளைவினை நானா விதைத்தேன்?

**பர.மன்:** அஸ்தினாபுரத்தின் அரசிருக்கைக்கே அவமதிப்பினையே அளித்துவிட்டவன் நீ! தன்னலத் தீயினால் நிலை தடுமாறியே தர்ம நெறியினைத் தவறவிட்டாய் நீ! தம்பியின் பிள்ளைகள் தமக்குரித்தான ஆட்சியைப் பிடுங்கினாய். உயர் குணம் குன்றிய உன் மகனுக்கே அரியணை தன்னை உரிமையதாக்கினாய். பஞ்ச பாண்டவரின் உரிமையைப் பறித்தே வஞ்சக வலையில் வீழ்த்திடத் துணிந்தாய்! அவர் தம் பத்தினி பாஞ்சாலி துகிலினை உரிந்திட உந்தன் புத்திரர் துணிந்ததை தடுத்திடா திருந்து நீ தர்மம் சிதைந்திடச் சம்மத மளித்தாய்! நாட்டின் காவலன் நீயே என்பதால் நீதியை நிலைபெறச் செய்வதுன் கடமை! தர்மம் தவறா ஆட்சி நடத்திய அஸ்தினாபுரிக்கே களங்கம் விளைத்த நீ தண்டனைக் குரியவன்!

**திருத:** இந்த நாட்டின் மன்னவனான விசித்திர வீரியன் எந்தனின் தந்தை. அந்த மாமன்னவன் மூத்த புதல்வனாய் அவதரித்த நான் அரசனுமானேன். என் மகன் துரியன் மூத்தவனாவான். எனக்குப்பின் அவனே அரியணை ஏறுதல் ஏற்புடைத்தான ஏற்பாடன்றோ? நீங்கள் வாழ்ந்து நடந்து முடிந்த காலத்தில் நடந்ததை நிகழ்காலத்தில் நிலைத்திடச் செய்திடல் நேர்மையான நெறியாகாதே! உங்கள் செயலுக்குற்ற பொறுப்பினை எந்தன் நிலையினில் ஏற்கவே மாட்டேன். தங்களின் பின்னவர் சந்தனு மன்னவர் சத்தியவதியை சேர்ந்து வாழ்ந்திட சொந்த மகனின் உரிமைகள் பறித்தனர். சந்ததி எதுவுமே உருவாகு முன்னரே சத்தியவதியின் புத்திரர் களுக்கே பூரண உரிமைகள் உரித்துடை தாக்கினார். சொந்தத் திருமகன் வேத விரதனை தன்னலத்தாலே சதியில் வீழ்த்தினார். காமத் தீயால் கெடுமதி செய்த சந்தனு மன்னனை வினவுதல் விடுத்தே பின்னவனான என்னிடம் வந்து புலம்புதல் தகாதே!

**சந்தனுமன்னனும் பீஷ்மரும் வருகின்றனர்.**

**சந்தனு:** பொய் கூறுவதால் மெய் அழியாது. சத்தியவதியை அடையாதிருந்தால் சாவையேனும் அணைத்திருப்பேன் யான். அஸ்தினாபுரிக்கு நான் அநீதி இழைத்திலேன்! சபதமொன்றேற்றதால் என் மகன் தனக்கே தனிப்பாதை ஒன்றினைத் தேர்ந்தே அமைத்தான். தர்மமும் தவமும் நீதியும் நேர்மையும் நெறி முறை வழுவா என் மகன் தன்னொடு உன் மகன் தன்னை ஒப்பிட முனைகிறாய். தன்னலங்கருதி என் மகன் தன்னை சின்னவனாக்கி சிறுமைப் படுத்துதல் உன்னுடை நிலைக்கு உதவாக் கொடுஞ் செயல். கண்ணில்லாதவன் என்பதால் நீ உன் கருத்தை இழந்தவன் ஆகிடமாட்டாய். அரிய இந் நாட்டின் அவலமனைத்தும் உன்னால் நேர்ந்தவை என்பதை உணர்வாய்!

**திருத:** இல்லவே இல்லை! நான் பொறுப் பில்லை!

**சந்த:** என் மகன் பீஷ்மனை என்னுடன் இணைத்தே இழிவு படுத்தினாய்! இதனால் உன்னை மன்னிக்க மாட்டேன்! மறக்கவும் மாட்டேன்!

**திருத:** என்னால் எதுவுமே செய்திட இயலா... என் மகன் துரியன் எனதாசையின் திருவுரு!

□□□

**கனவு கலைகிறது–படுக்கையில் புலம்புவது கண்டு காந்தாரி திருதராட்டிரரை எழுப்புகிறாள்.**

**காந்:** அன்புக்குரியவா! கனவா காண்கிறீர்?

**திருத:** கனவா நனவா கருதுவதறியேன்! பயங்கரமானதோர் கனவுதான் போலும்! பட்ட மரந்தனை வெட்டுதல்போல் என் மைந்தன் துரியனை வெட்டுக என்றென் முன்னைய மன்னர்கள் எச்சரிக்கின்றனர்! தம்பி பாண்டுவின் மைந்தர்கள் தம்மை வஞ்சனை செய்து விரட்டியதாக வீண் பழி சுமத்தினர். தன்னுடை நாட்டையும் உடன் பிறந்தோரையும் தன் கரம் பிடித்த தர்ம பத்தினியையும் பந்தயப் பொருளாய் ஆக்கியே தோற்றவன் எந்த நாட்டையும் ஆண்டிட முடியுமோ?

**காந்:** தோற்றனர் என்று கூறுதல் தகாது. சூழ்ச்சி வலைதனில் வீழ்த்தப்பட்டனர். அதுவே உண்மை என்பதை உணர்க!

**திருத:** உண்மையாய் இருக்கலாம்! சூழ்ச்சியும் நடக்கலாம். ஆனால், எல்லாவற்றையும் பந்தயம் வைத்தவன் யுதிஷ்டிரன் என்பதை மறுத்திட முடியுமா? என் மகன் துரியன் துயர் பட வேண்டுமா?

**காந்:** துரியோதனனவன் நம் மகன்தானவன். கெடு மதிக்கிருப்பிடமாகிவிட்டதை மறுத்திடலாமா? கேடு விளைப்பவர்க்கு கொடிய தண்டனை கிடைப்பது உறுதி. பாண்டு புத்திரர்களும் கேடு புரிந்தனர். காடு புகுந்ததே அவர் பெறும் தண்டனை! பாண்டவர் தம்மை மீண்டும் அழைத்தே இந்திரப் பிரஸ்த நாட்டினை அளித்தே அமைதி தேடுதலெம் மைந்தனைக் காத்திட அரு வழியாகும்.

**திருத:** அஞ்ஞாத வாசத்தில் அவர்கள் இன்றுள்ளனர். அன்னாரைக் கண்டதும் துரியன் வெல்லுவான். பதின்மூன்றாம் ஆண்டில் கரந்துறை காலம் கண்டிட நேர்ந்தால், பன்னிரண்டாண்டுகள் மீண்டும் கானகம் சென்றிட வேண்டும் என்றே கூறுவான்!

**காந்:** மன்னவன் நிலையினில் மைந்தனுக்கும் ஒரு கட்டளை இட்டே அடக்கிடலாமே!

**திருத:** கண்களை இழந்த நான் கரந்துறை ஐவரை கண்டுபிடிப்பது சாத்திய மாகுமா? எந்தன் பிள்ளைகள் எங்கு தானுளரோ?

**காலத்தின் குரல்:**

**மறைந்து வாழ்ந்திட பாண்டவர் தேர்ந்தது மத்சய நாடு. விராடன் என்பவன் அந் நாட்டின் அதிபன். 'கங்கணன்' என்னு மோர் பெயரினைக் கொண்டு அரசவை சேர்ந்தான் மன்னவன் யுதிஷ்டிரன். விராட மன்னனின் சமயற் கூடம் 'வல்லப' னான வீமனின் இருப்பிடம். 'பிருகன்னளை' எனும் பெண்ணுருக் கொண்டே அந்தப்புரத்தில் புகுந்த அர்ச்சுனன், விராடனின் மகளாம் உத்தரை குமாரியின் ஆடலும் பாடலும் பயிற்சி அளித்திடும் ஆசிரியப் பணி ஏற்றிடத் துணிந்தனன். குதிரைலாயத்தின் பொறுப்பினை நகுலனும் மாட்டுத் தொழுவக் காட்டுப் பொறுப்பினை இளையவன் சகா தேவனும் ஏற்றனன். மத்சய நாட்டு மகாராணியாமெழில் சுதேசிணையின் துணை யாகிய திரௌபதி 'சௌரந்தரி' எனும் நாமமும் பெற்றனள்.**

□□□

**மத்சய நாடு– விராட மன்னன் அரண்மனை– அரசி சுதேசினையின் அந்தப்புரம். சௌரந்தரி என்ற பெயருடன் திரௌபதி சுதேசினைக்கு அலங்காரம் செய்கிறாள்.**

**சுதேசினை:** ஒப்பனைக் கலையில் உனக்கோர் நிகரிலை. பாஞ்சாலி உண்மையில் பாக்கியம் செய்தவள்! உன்னைப் போன்ற ஒப்பனை செய்பவள் பாஞ்சாலிக்கோர் பெரும் பேறன்றோ! எந்தப் போரிலும் தோற்றறியாத பாண்டவர் அன்று சூதில் வீழ்ந்தது பெருவியப்பாகும்! அதுவே எனக்கும் கொடும் துயர் தருவது.

**சௌரந்தரி:** சூதின் கொடுமையை-தீய விளைவினை நானிலம் அறிந்திட நல்லதோர் பாடம்.

**சுதேசி:** எந்தன் கணவரும் சூதினை விரும்புகிறார்! கங்கணனோடு என்றும் ஆடுறார். தடுத்திட முயன்றால், 'சதுரங்க ஆட்டமும் செருக்கள நாட்டமும் சத்திரியர்க்குறு தர்ம' மென்றோதுவார். "யுதிஷ்டிர மன்னவன் போலுனை பணயப். பொருளாய் வைத்திடேன்" என்கிறார். பாண்டவரோடு கங்கணனுக்கு நெருக்கம் அதிகமாம். அன்னவர் தன்னையும் நீ அறிவாயோ?

**சைரந்:** நிச்சயம் அறிவேன். மன்னவர் யுதிஷ்டிரர் தம்பிமார் தன்னையே தன்னுயிர் மேலாய் மதிப்பிடுகின்றவர்.

**சுதேசி:** பாஞ்சாலி என்பவள் பேரழகாமே! ஐவருக்கும் அவள் பத்தினி என்பதால் அண்ணன் தம்பியர் அவலங்கள் இல்லையோ?

**சைரந்:** அவ்வாறேதும் யான் அறிந்ததே யில்லையே!

**சுதேசி:** ஆச்சரியந்தான்! திரௌபதியிடமொரு மந்திர சக்தி மறைந்திருந்திருக்குமோ? அரசியின் அழகுத் திருவுருவினை நீ அலங்காரமாக விபரிக்க முடியுமா?

**இவ்வேளை அரசியின் மகள் உத்தரை சிரித்துக்கொண்டு ஓடி வருகிறாள்.**

**சுதேசி:** உத்தரை! என்ன நீ இன்னும் சிறுமி என்றெண்ணமா? பிருகன்னளையிடம் கற்ற பாடங்கள் கண்ணிய மில்லையா?

**உத்த:** மன்னித்தருள வேண்டுமென் அம்மா!

**சுதேசி:** சௌரந்திரியே! பிருகன்னளை ஒரு வித்தகியாமே! ஆடலும் பாடலும் அருங்கலையாவும் அவளுக்குற்ற அருங் கொடையாமே?

**சௌர:** உண்மைதான் அரசி! அவளுடைய ஆற்றலை அளவிட முடியா. பிருகன்னளையவள் ஆடினால் பாடினால் இந்திரன் சபையோர் அகமகிழ்வுறுவரே!

-காட்சி மாற்றம்-

**உத்தரையின் அந்தப்புரம்–பிருகன்னளை என்ற பெயரில் அர்ச்சுனன் உத்தரைக்கு நடனம் பயிற்றுகிறான். அப்போது சௌரந்தரி என்ற பெயரில் உலவும் திரௌபதி வந்து உத்தரையை அரசி அழைப்பதாகக் கூறுகிறாள்.**

**பிருக:** பாஞ்சாலி! உன் பார்வையில் சோகம் படர்வதைத் தடுத்திடு!

**சௌ:** கவலை கொள்ளாதிருப்பது எங்ஙனம்? என்னாலன்றோ நீங்கள் ஐவரும் கொற்றமிழந்து குடையதுமிழந்து குற்றேவல் புரியும் குறுநிலை எய்தினீர். வில்லுக்கும் மல்லுக்கும் வீர நற்செயலுக்கும் வல்லவரானோர் வழமெலாமிழந்தனர்.

**பிருக:** காலத்தின் கோலத்தால் கவலைகள் தொடரலாம். கடியனவெல்லாம் கடந்து போயின. கரந்துறை காலத்தில் கவனம் தான் தேவை! காலத்தை வென்றிட எம் வீரம் வழியல்ல. விராட நாட்டரசி வீண்வார்த்தை கூறி வசை மொழிந் தனளா?

**சௌ:** அவ்வாறு எதுவும் சொல்லுதற் கில்லை. பாண்டவர் பற்றியும் பாஞ்சாலி பற்றியும் பேசுவதால்தான் பேதை என் துயரம் பெருகுவதறிவீர்!

**பிருக:** பேரழகான பெண்களைப்பற்றி பொறாமை கொள்வது பெண்களின் பொதுக் குணம். பாஞ்சாலி பெண்ணவள் அழகினை அளவிட உன்னிடம் கேட்டால் உண்மையை மறைத்திடு. அழகிய அரசியின் அலங் காரியாக அமர்ந்தவள் நீயென அறிந்து கொண்டால் அந்த விராடரின் மனைவி யின் அகமும் அழுதிடும்- பொறாமைத் தீயால் பொசுங்கிப் போய்விடும்.

**சௌ:** துன்பப் பெரும் தீ எமைத் தீண்டிடும்போதும் நீர், இன்பக் கதை களைக் கூறி மகிழ்ந்திடும் ஆற்றலைப் பெற்றுளீர்! ஆச்சரியம்தான்!

**பிருக:** துன்பப் பெருங்கடல் நீந்திடும் போதுதான் துயரினை மறந்து சிரித்திட வேண்டும்! ஒற்றரை ஏவியே எமைத் தேடிடும் பணியினில் துரியோதனன் பெரும் சங்கடப்படுகிறான். தூக்கத்தை துறந்திட்ட மாமா சகுனி திட்டங்களெல்லாம் சிதறுவதறிவாய்!

**சௌ:** என்னால் அவர்களை எண்ணிட முடியா! அவர்களை நினைந்தாலென் குருதியே கொதித்திடும். தொங்கும் என் கூந்தலென் கழுத்தினை இறுக்கும் சுருக்குபோல் காண்கிறேன்.

-காட்சி மாற்றம்-

**அஸ்தினாபுரம்–துரியோதனன் முன் ஒற்றர்கள் அணிவகுப்பு.**

**துரி:** அஸ்தினாபுரத்தின் ஒற்றர்கள் நீங்கள்! கதிரவன் வானெழும் அளவதுதனையும் முழுமதி தவழும் முறை வழியதனையும் முழுமையாய் உணரும் வரன் முறை அறிந்தவர். அஞ்ஞாத வாசத்தில் அலைந்திடும் பாண்டவர், ஆகாயத்தில் பறந்து சென்றாலும் பாதாளத்தில் பாய்ந்தொழிந்தாலும் பிடித்திட வேண்டிய பொறுப்பு நீங்கள்தான். கடமையில் தவறினால் கொலைதான் பரிசு! மறந்திட வேண்டாம்! உங்கள் குடும்பமும் கொலைக்களம் ஏகிடும்!

-காட்சி மாற்றம்-

**மத்சய நாட்டு குதிரைலாயத்தில் நகுலன் குதிரைகளுக்கு உணவூட்டும்போது சகாதேவன் வருகிறான்.**

**நகுல:** பலருடை பார்வை நம் மீது விழுவதை அண்ணன் விரும்புவதில்லை என்பதை அறிவாய் அல்லவா? அருமைத் தம்பி நீ?

**சகா:** உங்களைக் காணாது ஓரிரு மாதங்கள் ஓடி மறைந்தன. அண்ணா இருவரை ஆண்டொன்றாக காணவும் இல்லையே!

**நகுல:** என் நிலை அதுவே எனதருந் தம்பி! அன்றோர் நாளில் நடந்ததைச் சொல்கிறேன்! மன்னவர்க்கான குதிரைகள் இரண்டினை அரண்மனைக்காங்கே எடுத்துமே சென்றேன். சேவகன் ஒருவன், அரண்மனை அடுப்படி உண்டியைச் சுவைக்க எந்தனை அழைத்தனன். அங்கே சென்றதும் உண்டி தயாரிக்கும் உடையினிலிருந்த அண்ணனைக் கண்டேன்! அண்ணனின் கண்கள் இரண்டுமே பனித்தன. பாசத் துடிப்பில் பரிதவித்தோம் நாம்.

-காட்சி பின்னோக்கு-

**மத்சய நாட்டின் அரண்மனை சமயற் கூடத்தில் பீமன் 'வல்லபன்' பெயரில் சமயற்காரனாகக் காணப்படுகிறான். நகுலனைக் கண்டதும் கண்களில் கண்ணீர் பெருகுகிறது.**

**உதவியாளன்:** வல்லப அண்ணா! தங்களின் கண்களில் கண்ணீர் காண்பதேன்?

**வல்ல:** வெங்காயத்தின் வேலைதானப்பா!

**உதவி:** குதிரை லாயத்தில் உள்ளவன் இவனும் யுதிஷ்டிர மன்னரின் குதிரைகளுடன்தான் பரிச்சயமாமே! கண்டது முண்டோ பாண்டவர் நாட்டில்..?

**வல்ல:** கண்ட நினைவதும் உண்டுதான் தம்பி! எப்படி வாழ்கிறாய்? யாவரும் நலமா?

**நகுல:** ஆண்டவன் தயவில் அனைவரும் நலமே!

**மற்றொரு உதவியாள் உணவுத் தட்டம் தர பீமன் தம்பிக்கு உணவு பரிமாறுகிறான். ஏனையோர் சென்றதும் நகுலனுக்கு பீமன் உணவினை ஊட்டிவிடுகிறான்.**

**வல்ல:** அண்ணனைப் பார்த்து அறிமுக முண்டா?

**நகுல:** அரியணை அமர்ந்தே ஆட்சி புரிந்தவர் அடிமைபோலொரு வாழ்வினை ஏற்பது அகமகிழ்வாகுமா? அண்ணன் அர்ச்சுனன் ஆடல் பாடலில் காலங் கடத்துறார். ஆயிரம் தாதிகள் ஒப்பனை செய்ய அழகுடன் மிளிர்ந்த திரௌபதி யானவள் அரசியின் அழகுக் கழகினை ஊட்டுறாள்.

-காட்சி பின்னோக்கு முடிவு-

**நகுல:** அன்றைய அனுபவம் அரண்மனைப் பக்கம் போவதைத் தடுத்தது. (அழுகிறான்)

**சகா:** அழுவது தவிர்த்திடு அருமை அண்ணா நீ! கவலைகள் தாங்கும் திட்முடன் நடந்திடு.

**நகுல:** வேதனை தாங்கிடும் வேகமோ என்னிடம் ஒரு துளி கூட விளையவே யில்லையே!

**சகா:** மனத்திடம் கொள்வது மிக மிக அவசியம்! துரியோதனனையும் துச்சாதனனையும் சமரினில் கொன்றிட அண்ணன் பீமன் ஆணையிட்டுள்ளான். அண்ணன் அர்ச்சுனன், அங்க நாட்ட திபன் கர்ணனை வென்றிட சபதமிட்டுள் ளான். சூழ்ச்சியின் பிறப்பிடம், சூதின் சொரூபமாம் சகுனியை முடித்திட யாருமே நினைத்திலர். நானே அவனை மாய்த்திடும் கடமையை இன்றே ஏற்கிறேன்! நிச்சயமாய் அதை நானே முடிப்பேன்!

<u>பின்னணிப் பாடல்:</u>

**சூதும் சூழ்ச்சியும் சொக்கட்டான் பாதையும் சுகமெனக் கொண்ட சகுனியின் செருக்கினை இகமதிலொழித்திடும் உயரிய கடமையை சகாதேவன் எனும் சலவியனேற்றனன். பாண்டுவின் புதல்வரி லிளையவனான மாண்புடை மன்னவ னோதிய சூளுரை நீண்டு நிலைத்தே நித்தியம் நிறைந்தே ஆண்டாண்டு தோறும் அவனியில் ஒலித்திடும்!**

**(தொடர்ந்து வரும்)**

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத் திட்டம்




அருள் ஜுவலர்ஸ்

436331

வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# மலைக்குப் பின்னால் என்ன மலைக்குள்ளே சோகம் இருக்கு?!






Kala
JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

433686




மலைபோல உடல். ஆனால மனம் முழுக்க சோகம். வயிற்றுக்கு நாவுக்கு பிடித்தமாகவும் கொஞ்சம் லஞ்சம் பண்ணாமலும் அப்படி இப்படி சாப்பிட்டு விட்டார். அதற்காக இப்படியா உடம்பு பெருக்க வேண்டும். எட்டு நிமிடத்தில் உடம்பை ஊதப்பட்டு மட்டுமே 70 பாத அடிகள் மட்டுமே எடுத்துவைக்க முடிகிறது. 920 இறாத்தல். வயது 41. வாழ்க்கையே வெறுத்துப் போய் தற்கொலைக்கு முயன்றவரை மனைவிதான் ஆறுதல் சொல்லி செல்லம் கொடுத்து கவனித்து வருகிறார். பனாமாவைச் சேர்ந்த இந்த மலையின் பெயர் விவோனார்ட பாரவுன். துணைவி பெயர் பாம்.

## நமது தேயிலை!

மலையக மக்களின் கடும் உழைப்பின் விளைபொருள் நமது தேயிலை. ரஷ்யாவில் இலங்கை தேயிலைக்கு பலத்த வரவேற்பு. தேயிலை விடயத்தில் இலங்கை ரஷ்யாவைத்தான் இப்போது ஏற்றுமதிக்கு அதிகம் நம்பியிருக்கிறது.



## எங்கே நிம்மதி?




பிறந்த நாடும் சொந்தமல்ல, பெற்றவளின் பந்தமும் நிற்கவில்லை. எதையுமே விட்டுவைக்காமல் எதற்காக போரிடுகிறார்கள்? போர்த் தீயில் மனிதம் வெந்து மடிய விடுதலை என்று போரிடுவது எது? என்ன பொருள்? புரியவேயில்லை! போர் அரக்கன்முன் நாமும் குழந்தைகளோ?

## அம்பெனப் பாயும் வேகம்

100 மீட்டர் ஓட்டப் பந்தயமா? கண்ணை மூடிக்கொண்டு சொல்லிவிடலாம் வெற்றி அமெரிக்க வீரர்களுக்குத்தான். இன்று-நேற்றல்ல 25 வருடமாக தடகள போட்டிகளின் வரலாற்றில் அதுதான் கதை.

தற்போதுள்ள அமெரிக்க வீரர்களில் கார்ல் லூயிஸ், லெராய்பரெல் இருவருக்கும்தான் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் போட்டி. இருவரும் மாறி மாறி உலக சாதனை படைத்துக்கொண்டிருக்கிறார்கள். 1988ல் கார்ல்லீவிஸ் 100 மீட்டரை 9.92 விநாடிகளில் ↓



ஓடி முடித்தார். விடுவாரா லெராய்பரெல் 1991ல் அவர் 9.90 விநாடிகளில் ஓடி முடித்தார். கார்ல் லூயிஸ் அந்த சாதனையை முறியடிக்க மார்தட்டினார். 9.86 விநாடிகளில் ஓடி முடித்து கொலரைத் தூக்கி விட்டுக்கொண்டார்.

அதற்குப் பின் மூன்றாண்டுகள் கழித்து 7.7.94 அன்று லெராய் பரெல் கார்ல் லூயிஸின் சாதனையை ஓடி உடைத்தார். லெராய் ஓடி முடித்த நேரம் 9.85 விநாடிகள். ஒரு விநாடியால் கார்ல்லீவிஸின் சாதனை டமால். கார்ல் லூயிஸ் என்ன சொல்கிறார் தெரியுமா? பொறுங்கள் அடுத்து வரும் சர்வதேச போட்டிகளில் 9 விநாடிகளில் ஓடி முடித்து அந்த சாதனையை பொடிப் பொடியாக்குகிறேன் என்கிறார். சபாஷ் சரியான போட்டி!

(படத்தில் இருப்பது-லெராய் பரெல்)

## மாறும் காலம்



கிரிக்கெட், உதைப்பந்தாட்டம் இரண்டிலே சர்வதேச அளவில் பெண்களைக் கவரும் விளையாட்டுக்களாகிவிட்டன. நேரடியாக ஆடுகளத்திற்கு சென்று வீரர்களுக்கு உற்சாகம் கொடுக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். அதுவும் கவர்ச்சியான ஆடைகளில் வேறு தோன்றுவதால் சபலிஸ்டுக்கள் சிலர் எதை இரசிப்பது என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள். ஆடும் வீரர்களது கவனம் சிதறாமல் இருந்தால் சரி.